

# ஆனந்தம்

## மணிவிழா மலர்





### அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்

யா/இராமநாதன் கல்லூரி

2011

# ஆனந்தம்

## திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்

அவர்களது

அகவை அறுபது நிறைவையொட்டிய

## சிறப்பு மலர்

**வெளியீடு:**

மணிவிழா மலர்க்குழு,

யா/இராமநாதன் கல்லூரி

கரவருடம், ஐப்பசித்திங்கள், 23ம் நாள், புதன்கிழமை (09.11.2011)

உ

ஓம் கணபதியே நமக



**திருச்சிற்றம்பலம்**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும்
கருணா கரக் கடவுளே
திரிகரண சுத்தியும் காரியசித்தியும் அருள்வாய்

**திருச்சிற்றம்பலம்**

# ஆனந்தம்

## மணிவிழா மலர்



## திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்

**வெளியீடு:**
மணிவிழா மலர்க்குழு,
யா/இராமநாதன் கல்லூரி
கரவருடம், ஐப்பசித்திங்கள், 23ம் நாள் புதன்கிழமை (09. 11. 2011)

# எங்கள் அதிபர்



| | | |
|---|---|---|
| மணிவிழா மலர் | : | ஆனந்தம் |
| பதிப்பு | : | 09 நவம்பர் 2011. |
| பக்கங்கள் | : | 127 |
| பிரதிகள் எண்ணிக்கை | : | 300 |
| வெளியீடு | : | அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்<br>அவர்களின் மணிவிழா மலர்க்குழு,<br>யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம். |
| காப்பாளர் | : | அதிபர் திருமதி. வேணுகா சண்முகரத்தினம்<br>அதிபர்,<br>யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம். |
| இதழாசிரியர் | : | திருமதி. வை. கணேசபிள்ளை |
| முகவரி | : | யா/இராமநாதன் கல்லூரி<br>மருதனார்மடம், சுன்னாகம். |
| பதிப்பகம் | : | குடாநாட்டு பதிப்பகமும் வெளியீட்டகமும்<br>34/2, இராமநாதன் வீதி, திருநெல்வேலி,<br>தொ.பே. 021 222 0947<br>Email: peninsula.printers@gmail.com |

## விழாக்குழு உறுப்பினர்கள்



திருமதி ப. கேசவன், திருமதி. ம. ஜெயநாதன், திருமதி ர. ஸ்ரீதரன்,
திருமதி சா. சீனிவாசகம், திருமதி க. உதயகுமாரன், திரு. சு. பாலமுரளி,
திருமதி கோ. இராமச்சந்திரன், திருமதி தே. லிங்கேஸ்வரன்,
செல்வி வி. நீலாஜினி, திரு. தே. புலேந்திரகுமார், திருமதி று. பரதன்,
திருமதி பு. குமாரவேள், திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி. சி.கிரிதரன்,
திருமதி ஜெ.வரதராஜன், திருமதி ந. சிவராஜன்.

## மலர்க்குழு உறுப்பினர்கள்



திருமதி வை. கணேசபிள்ளை, திருமதி கே. ஆனந்தரட்ணம்,
திரு. வை.பாலேந்திரா,திருமதி ம. ஜெயநாதன், திருமதி கா. உதயகுமாரன்,
திருமதி சு. சீனிவாசகம், திரு. தி. விக்னேஸ்வரன், திருமதி ஜெ. வரதராஜன்,
திருமதி மோ. ரவீந்திரன், திருமதி க. சிவசோதி, திருமதி வி. ஜெயராசா,
திரு. ச.இராமநாதன், திருமதி ர.பாலசிங்கம், திருமதி ப.சேசவன்,
திருமதி பா.ஈஸ்வரன்.

# உள்ளே...


ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும். VII

வாழ்த்துப்பா. XXX I

கல்லூரிக் கீதம். XXX III

மலராசிரியரின் உள்ளத்திலிருந்து... XXX V

அதிபர் ஆற்றிய சேவைகள். XXX VI


## கட்டுரைப் பகுதி


அறிவுசார் மூலதனம். 01
பேராசிரியர் க. தேவராஜா

குறள்காட்டும் வழியில் மனித வாழ்க்கை. 06
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பக்தி இயக்கமும் சமுதாய மறுமலர்ச்சியும். 12
பேராசிரியர் கலைவாணி இராமநாதன்

செம்மொழியாம் தமிழ் மொழி. 18
பண்டிதை வை. கணேசபிள்ளை

பிரெஞ்சுப் புரட்சி. 23
திருமதி சுலோசனா யோகராசா

பிஞ்சிலே பழுத்து வித்தாகிறது. 25
திருமதி பகீரதி சிவஞானம்

விழிப்புலன் அற்றோருக்கு வழித்துணையாகும் வெள்ளைப்பிரம்பு. 26
திருமதி தாமரைச்செல்வி கீதாக்கிருஷ்ணன்

கோபம் மனிதநேயத்திற்கு எதிரான செயல் 29
செல்வி நிவேதினி கீதாப்பொண்கலம்


## அதிபர் பற்றிய மனப்பதிவுகள்


கல்லூரிக்கு பெருமைசேர்த்த ஆளுமைமிக்க அதிபர். 30
திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை

அரவணைத்து ஆதரவளிப்பவர். 32
திருமதி ப. பத்மநாதன்

நான் கண்ட அதிபர். 35
திருமதி க.சிவசோதி

ஆளுமை மிக்க அதிபர். 37
திருமதி ப. தியாகலிங்கம்.

கல்லூரிப்பெருமையை பேணிக்காத்த பெருந்தகை. 39
திரு. வை. பாலேந்திரா

அகவை அறுபதின் அனுபவமுதிர்வின் ஆனந்தியிடம்
ஆனந்தத்துடன் பெற்றுக்கொண்ட நேர்காணல். 41
திரு. செ. சிவராஜன்.

Farewell to our madam 45
Mrs P. Kesavan

புத்துயிர் பெற்றது இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலை. 46
திருமதி காஞ்சனமாலா உதயகுமார்.

அன்பும் அழகியல் உணர்வுமிக்க அதிபர்... 49
திருமதி கோணேஸ்வரி இராமச்சந்திரன்

எங்கள் அதிபர் காலத்தில் இந்து மன்றம். 50
திருமதி சுகுணா சீனிவாசகம்

வாழ்வகச்சோலையுடன்..... 52
திருமதி மோகனவதனி ரவீந்திரன்

அழகியல் ஆளுமைமிக்க அதிபர். 56
திருமதி சர்மிளா ரதிதரன்

அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள். 57
செல்வி செ. அபிராமி

கவிதைக் கொத்து

அது ஒரு அழகிய நிலாக்காலம். 58
திருமதி கிருஷ்ணவேணி புஸ்பகுமார்

மணிவிழாக்காணும் மணிமான். 60
திருமதி தாமரைச்செல்வி கீதாக்கிருஷ்ணன் மற்றும் மாணவர்கள்

தாயை வகுப்பறையில் பார்த்தேன். 61
செல்வி சி. உமையாளினி

நான் பார்க்கும் பூமி. 62
செல்வி சி. சிவாஜினி

வணங்கி நிற்கிறேன். 63
செல்வி க. பிரவீணா

பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றேன். 64
செல்வி பிரியதர்சினி

அம்மா உங்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்... 65
செல்வி சி. சுகன்ஜா

எமது அதிபர். 67
செல்வி இ. சர்மிளா

இறைவனை வேண்டுகிறேன். 68
செல்வி ச. சோபனா

அன்பு மழையில். 69
செல்விகள் இ.நிறோஜா, ர.கபிலமி, ஸ்ரீ.ஜெஸ்மி

Making the most of retirement 70

கொடிக்கீதம். 71

இராமநாதேஸ்வரர் திருவூஞ்சல். 72

நன்றி நவில்கின்றோம். 77


ARUN
HALL
COLLEGE

# ஆசிச்செய்தி

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்,**
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்,
மருதனார் மடம்.

அறியாமை அகற்றி அறிவை வளர்க்கும் எதுவும் ஞானத்திற்கு இட்டுச்செல்லும் வாயிலாக அமையும். எம்முன்னோர் எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றி வாழ்ந்தார்கள். இயற்கையறிவுக்கு ஏற்றவாறு தம்வாழ்வோடு இணைந்து கல்வியை வளர்த்தார்கள்.

கல்விப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து வாழ்நாள் முழுவதுமே சேவை செய்வோரை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

திருமதி. ஆ. சிவஞானசுந்தரம் அவர்களை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தெரியும் என்பதில் பெருமையடைகிறேன். காலஞ்சென்ற கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததினச் சிறப்பு விழாவிற்கு ஒருமுறை பிரதம விருந்தினராக அதிபர் அவர்கள் வருகை தந்திருந்தபோது அதிபரை அம்மையார் அவர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அதிபர் அவர்கள் அன்று மேடையில் ஆற்றிய பேச்சின் மூலம் அவரின் பேச்சாற்றல், பல்துறைசார் அறிவு, கல்வி, கற்பிக்கும் திறமை, நிர்வாகத்திறன், தலைமைத்துவம் போன்ற பல்துறைச் சிறப்புக்களை காணக்கூடியதாக இருந்தது. ஆசிரியராகப் பணியாற்றிய சிறப்பின் வழி அதிபராகி, ஆசிரியர்கள், மாணவர்கள், மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்கின்றார். கடந்த 19 வருடங்களாகச் சேவை புரிந்ததோடு தான் ஓய்வு பெறும்வரை தமிழ், சமய, சமூகப்பணிகளைத் திறம்பட ஆற்றியவரை நாம் வாழ்த்த வேண்டும். இப்படியான பெரியார்களை வாழ்த்துவதனால் எமது சமூகம் உறவினாலும், பண்பாட்டினாலும் ஏற்றமடையும்.

*"பண்புடையார் பட்டுண்டுலகம் அது இன்றேல்*
*மண்புக்கு மாய்வது மண்"*

என்றார் வள்ளுவர். இத்தகைய பெரியாரைக் கௌரவித்து அவர்களின் பணிகளைப் பாராட்டி மலர் வெளியீடு செய்யும் இராமநாதன் கல்லூரிச் சமூகத்தைப் பாராட்டுகின்றேன். அவர்களின் ஆக்கம் நல்லபடிநிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளைத் தெரிவித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

"லோகா சமஸ்தாசுகினோபவந்து"

# Felicitation Meassage



**Hon. G A Chandrasiri,**
Governor,
Northern Province.

It is my privilege as Governor, Northern Province to issue a message to be published in the magazine felicitating Diamond jubilee celebration of former principal Mrs.Ananthy Sivagnanasundaram.

Only education has ways and means to reach the top of the career ladder, so it is identified as a precious asset for the human being. This fact is always realized by everyone. Mrs. Ananthy Sivagnanasundaram has got privilege by serving in education field for thirty six years. I think that she was able to do a lot for the society by her dedicated service in the education field. I came to know that she is an efficient administrator with her own approaches and ways of solving problems. She got the opportunities to serve as principal more than eighteen years in the leading college in Valikaman to enhance education as well as administration during her period of service.

while I wish her good health and happiness in her retirement, I am confident that our society will make use of her services further in some other capacity.

# வாழ்த்துரை



**Hon.D.M.Swaminathan M.P,**
President of Trustee Board,
SriPonnampalavaneswarar Temple,
Colombo - 13

சைவப்பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் 1913 இல் சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் நிறைவான கல்விகற்று ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து நல்லதொரு சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற வேணவாவினால் உருவாக்கப்பட்டதே இராமநாதன் கல்லூரியாகும். இக் கல்லூரியில் மேலை நாட்டுக் கல்வியுடன் கீழை நாட்டுக் கல்விப் பாரம்பரியமும் ஆத்ம ஞானமும் இணைய வேண்டுமென்பதே அவரது வேணவாவாகும்.

அன்னாரின் சீரிய சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்வதில் முன்னின்று உழைத்த ஆசிரியர் குழாம் என்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கவர்கள். அத்துடன் தமது கல்வித் தகைமையின் பின்புலத்தில் இக்கல்லூரியை வழிநடாத்திச் செல்வதில் பல அதிபர்களும் முன்னின்று உழைத்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் தான் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களாகும். இவரின் தொண்டைப் பாராட்டி வெளியிடப்படும் இம் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி ஆகி ஆசிரியப் பணியில் கால்வைத்த இவர் தமது இடையறாத ஊக்கத்தால் பல்வேறு நிறுவனங்களில் கல்வி புகட்டி நல்ல அனுபவத்தையும் கல்வித் துறையில் பாண்டித்தியத்தையும் பெறும் வாய்ப்பினையும் பெற்றிருந்தார்.

இறுதியாக 1992 ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரி அதிபராகி 2010 இல் ஓய்வு பெறும் வரை இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றினார். இதனால் இக்கல்லூரி சிறப்பாகக் கலைத்துறையில் முன்னணி வகிப்பதற்கும் பல்கலைக்கழகத்திற்கு மாணவிகள் பலர் அனுமதி பெறவும் வாய்ப்புக் கிடைத்தது.

இவ்வாறு இவர் காலத்தில் கல்லூரி அடைந்த முன்னேற்றத்தினை நினைவு கூரும் வகையிலும், இவர் ஆற்றிய பணியினை நன்றிக் கடனுடன் ஞாபகப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள இக்கல்லூரி ஆசிரியர்களுக்கும், பழைய மாணவிகளுக்கும், இன்று கல்வி கற்கும் மாணவிகளுக்கும் நமது பாராட்டையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு***
***மாடல்ல மற்றையவை"***

நன்றி

# வாழ்த்துச் செய்தி

**திரு இ. இளங்கோவன்**
செயலாளர்,
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்.

யாழ் மாவட்டத்தில் புகழ் பூத்த பழம்பெரும் சைவத்தமிழ் பாரம்பரியங்களைக் கொண்ட பெண்கள் பாடசாலையாக யா/இராமநாதன் கல்லூரி திகழ்கின்றது. இலங்கையின் தேசிய வீரர்களில் ஒருவரான சேர் பொன். இராமநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையில் காலத்திற்கு காலம் திறமைமிக்க அதிபர்கள் பலர் சேவையாற்றி உள்ளனர். அந்த வகையில் கடந்த நெருக்கடிமிக்க காலப்பகுதியில் பாடசாலைக்கு சிறந்த தொரு தலைமைத்துவத்தை வழங்கி அதனை வெற்றிகரமாக வழிநடத்தி இன்று சேவையிலிருந்து இளைப்பாறும் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவரது பதவிக்காலத்தில் பாடசாலை மாணவிகள் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தேசிய மட்டங்கள் வரை விருதுகளைப் பெற்றமை பாராட்டுவதற்குரியது. மேலும் வடக்கின் வசந்தம் தொடர்பான போட்டிகளில் பங்குபற்றி மாணவிகள் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த இவ் அதிபர் அவர்களை இந் நேரத்தில் நினைவு கூறுகின்றேன். மீண்டும் அதிபரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.













அதிபர் காலத்தில் நடைபெற்ற கலை நிகழ்வுகளில் சில

# வாழ்த்துச் செய்தி



**திரு ப. விக்னேஸ்வரன்**
வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

அகவை அறுபதில் ஓய்வு பெறும் புகழ் பூத்த இராமநாதன் கல்லூரியின் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். சிறந்த ஆசிரியராகவும் அதிபராகவும் 35 வருடங்கள் பணியாற்றி இன்று ஓய்வு பெறுகின்றார்.

மிக இக்கட்டான காலத்தில் இராமநாதன் கல்லூரியைப் பொறுப்பேற்ற இவர் அதன் பொலிவு குறையாமல் கடந்த 18 வருடம் தலைமைத்துவத்தினைப் பேணியுள்ளார். கல்விச் செயற்பாட்டிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னின்றுழைத்த இவர் கல்லூரியிலேயே வதி விடத்தினை ஏற்படுத்தி பெண்கள் விடுதியையும் மீள ஆரம்பித்து நடாத்தி வருவது சிறப்பம்சமாகும் இவரது வெற்றிக்கு இன்று வரை தந்தையார் உறுதுணையாகவிருந்து வழிப்படுத்தி வருகிறார்.

பெற்றோரிடமும் சமூகத்துடனும் சிறந்த உறவினைப் பேணும் இவர் நல்ல குரல் வளமுள்ள பேச்சாளர். அதிபர் சேவையில் இணைந்து கொண்ட இவர் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இது கால வரை கல்வி புலத்தில் இவர் ஆற்றிய பணிக்காக கல்வித் திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஓய்வுக் காலத்தில் நோய் நொடியின்றி நீண்ட காலம் சந்தோசமாக வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



**திரு. ஆ. ராஜேந்திரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

## மணிவிழா நாயகியே! வாழ்க வளத்துடன்!

இனிமையான சுபாவம் கனிவான பேச்சு; என்றுமே நேர்த்தியாகக் காணப்படும் தன்மை; இல்லை என்று கூறாத நேரிய மனப்பாங்கு; தான் உண்டு, தன் பணி உண்டு, என்றில்லாது தன்னைப் போல பிறரையும் நேசிக்கும் பெருந்தன்மை; பதவிகளை நாடிச் செல்லாது கிடைத்த பதவிகளை பெருமைப்படுத்திய வாண்மை; பதவிகள் கண்டும் குறைவிலாப் பண்புடன் திகழ்ந்தமை; தமிழ் மாணவிகளின் கல்வி மற்றும் ஒழுக்கம் சார் விழுமியங்களில் கொண்டிருந்த கரிசனை; இராமநாதன் கல்லூரியின் நீடித்த புகழ் நிலைத்திருக்க வேண்டும் என்ற வேணவா; இவையே திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தொடர்பான எனது மனப்பதிவுகள்.

தமிழ் மாணவிகள் தமது பண்பாட்டுச் சூழலில் ஒழுக்கம் சார்ந்த தரமான கல்வியைப் பெறவேண்டுமென்ற உயரிய நோக்குடன் உருவாக்கப்பட்ட இராமநாதன் கல்லூரிகள் மங்காப்புகழுடன் திகழ்கின்றன. இவ் வகையில் வடக்கின் இராமநாதன் கல்லூரியை அலங்கரித்த புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரமும் இடம் பெற்று விட்டார்.

இக் கல்லூரிக்கென நின்று நிலைத்திருக்கும் ஒழுக்கப்பண்பு; கலைகள் சார்ந்த உன்னதம்; நேரிய மற்றவர்களை பிரதி செய்ய வைக்கும் கலாச்சாரப் பண்பு; மாணவிகளின் தொழில்சார் வாழ்வுக்கு வழிகாட்டும் கல்விசார் வெளிப்பாடுகள் என்பவற்றை தொய்வில்லாமல் முன்னெடுத்து வந்தவர். இக் கல்லூரி தன்னை நாடிவரும் அனைத்து மாணவிகளையும் அரவணைத்துச் சென்றமையால் சாதனைகளின் உன்னதங்களை வெளிப்படுத்தாது விடினும், அதன் இயலளவிற்கேற்ற வெளிப்படுத்தல்களுக்காகப் பாடுபட்டார்.

கடந்த கால நிகழ்வுகளால் எமது பாடசாலைகள், மாணவர்கள், போக்கிடமின்றித் தவித்தபோது, அவர்களை வாவென வரவேற்று இடமளித்த பெருந்தன்மையை மறந்து விடமுடியுமா? இன்றுவரை அப்பாடசாலைகளில் சில தமது தனித்தன்மையுடன் இக்கல்லூரி வளவினுள் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தமது அதிபருக்கு மிக உன்னத இடமளித்து, அவரின் மணிவிழா கண்டு மகிழும் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்களின் நன்றி உணர்வினையும், பெருந்தன்மையும் பெரிதும் மதிக்கின்றோம்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியை அலங்கரித்த புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் பெயரும் நின்று நிலைத்திருக்கும். அவரது சேவையையும், பணிகளும், எமது சமூகத்திற்கு தொடர வேண்டுமென்று கோருவதுடன், அவரும் அவரது உறவுகளும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

# செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனின் ஆசிச்செய்தி



**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

சைவத்தமிழ்ப்பெண்களின் தலையாய பாடசாலை இராமநாதன் கல்லூரியை நிறுவிய சேர் பொன். இராமநாதனின் கனவுகளை நனவாக்கியவர்கள் இக்கல்லூரியின் அதிபர் அரியாசனத்தை அலங்கரித்த பெருமாட்டிகள் திருமதி. லீலாவதி அம்மையார் முதல், மணிவிழாக்கண்டு இளைப்பாறும் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் வரை கல்லூரியைக் கட்டிக்காப்பாற்றிய தொண்டை யாரும் மறக்கமுடியாது.

போர்ச்சூழலில் இப்பாடசாலையின் பொறுப்பை ஏற்று கடந்த 18 ஆண்டுகளாக இக்கல்லூரியை நன்முறையில் பாதுகாத்தவர் திருமதி ஆனந்தி சிவஞாசுந்தரம் என்றால் மிகையாகாது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று அங்கு சிலகாலம் விரிவுரையாளராக விளங்கிய பின் ஆசிரியப்பணியில் இணைந்தவர் இவர் அதிபர் சேவையில் இக்கல்லூரியில் உன்னத பணியாற்றியவர் பாடசாலை வளாகத்திலேயே தங்கியிருந்து பலகஷ்டங்களுக்கு மத்தியில் அஞ்சாது முகம் கொடுத்து தன் ஆளுமையை நிலைநாட்டியவர் சேர் பென். இராமநாதப் பெருந்தகைக்கு உருவச்சிலையமைத்த பெருமை இவரைச் சாரும் மேலும் 1990ம் ஆண்டுக்குப் பின் இயங்காமல்போன கல்லூரி விடுதிச்சாலையை தன் அயராத முயற்சியால் மீளவும் ஆரம்பித்து இன்று நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகள் விடுதிச் சாலையில் கற்க வழி தேடியவர் தேசிய மட்டத்தில் நாட்டிய நாடகம், வலைப்பந்தாட்டம் வெற்றி பெற அல்லும் பகலும் உழைத்தவர் எவரையும் மதிக்கும் பண்பும், பணிவும் மிக்க அம்மையார்.

என்றும் நலத்தோடு மகிழ்வாக வாழ மணிவிழா நாளில் வாழ்த்துவதுடன் துர்க்கை அம்பாளின் திருவருளால் அவரது எதிர்காலம் சிறக்க பிராத்தித்து அமைகிறேன்.

# ஆசிச்செய்தி



**திருமதி. வேணுகா சண்முகரத்தினம்.**
அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி

## மணிவிழா நாயகிக்கு மனம் நிறைந்த ஆசிகள்...

மணி விழா நாயகி திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் 30.09.2010 இல் அகவை அறுபதை நிறைவு செய்து இன்று ஆனந்தமாக விழாவை அலங்கரித்து எம் உள்ளங்களை மகிழ்விக்கின்றார். இன்றைய நாளில் விழா நாயகியை வாழ்த்தக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்திற்காக முதலில் எல்லாம் வல்ல நடராஜப்பெருமானின் பாதம் பணிந்து வணங்கிக் கொண்டு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் அவரை 1992 இல் நோய்வாய்ப்பட்டிருந்த தன் தாயாரை யாழ் வைத்தியசாலையில் பராமரித்து கொண்டிருந்த சமயத்தில் தான் சந்தித்தேன். அவர் தன் தாயாரைப் பராமரித்த விதத்திலேயே அவரின் பொறுமையையும் தாயின்மேலிருந்த அளவு கடந்த அன்பையும் கண்ணுற்று வியந்தேன். நான் கண்ட சொற்ப நாட்களில் அவர் யா/இராமநாதன் கல்லூரியில் அதிபராகக் கடமையேற்றார் என்ற செய்தியும் அறிந்தேன். 1993 இல் அவரது உற்ற சிநேகிதி ஓய்வு பெற்ற அதிபர் திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை அம்மாவுடன் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய வேளையில் மணிவிழா நாயகியுடன் நேரில் பழக முடிந்தது. இவர் அக்காலத்திலிருந்து பதினெட்டு ஆண்டுகளாக தாய் மகளைக் காப்பது போலவே கல்லூரி அன்னையை அதன் தனித்துவம் பண்பாடு, விழுமியங்கள் மாறாது பேணிப்பாதுகாத்து வந்துள்ளார் என்றால் மிகையாகாது.

அவர் இக்கல்லூரியில் சேவையாற்றிய சமகாலத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இருந்து இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்து சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் விழா நாயகியின் செயற்பாடுகளை நேரில் பல தடவைகள் காணமுடிந்தது.

அதிபர் அவர்கள் மிகுந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றுடன் சிறந்த அறிவு, ஆளுமை, நிர்வாகத்திறன், அன்பு, கருணை, இரக்கம், விருந்தோம்பும் பண்பு என்பனவற்றைத் தமது அணிகலன்களாகக் கொண்டவர். இச்சீரிய பண்பினால் பாடசாலையைச் சிறப்புற 18 வருடங்கள் நெறிப்படுத்தி வழிகாட்டிய பெருமை பெற்றார்.

இவரது காலத்தில் கல்லூரியின் செயற்பாடுகள் யாவற்றிலும் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற முன்னோர் வாசகத்தைத் தாரக மந்திரமாகவும் கொண்டு பல அரிய சாதனைகள் படைத்துள்ளார்.

பாடசாலையை மட்டுமன்றி விடுதி மாணவர்களையும் தனது சொந்தப் பெண் குழந்தைகள் போலவே எண்ணி அழகுபடுத்திப் பார்த்தும் இரசித்தும் வருவதில் இவருக்கு நிகர் இவரே தான். இது இவரிற்குப் பெண் குழந்தை இல்லாத ஆதங்கத்தைத் தீர்த்து வைத்தது இதனால் இவர் மனநிறைவு கண்டார்.

இவர் நிர்வாகத்திறமையினால் ஓய்வுக்குப் பின்னரும் வலிகாமம் கல்வி வலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுக் கடமையாற்றுகின்றார்.

இவர் பாடசாலைக் கடமைகளோடு வீட்டுக் கடமைகளையும் நிறைவேற்றத் தவறியதில்லை. பெற்றோரையும் தனது கணவரையும் தனது ஒரேயொரு மகனையும் கண்கண்ட தெய்வங்களாகப் போற்றிப் பாதுகாத்தும் வந்துள்ளார்.

மணிவிழா நாயகி ஓய்வின் பின்பும் கல்விப்பணி, சமூகப்பணி என்பவற்றில் ஈடுபடுவதுடன் குடும்பத்தவர்களுடன் நீடூழி காலம் சீரும்சிறப்புடனும் வாழ இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை.**
முன்னாள் துணைவேந்தர்,
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ் பல்கலைகழகம்.

இராமநாதன் மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்து இன்று வடமாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளில் ஒருவராக கடமையாற்றும் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின் மணிவிழாத் தொடர்பாக வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். திருமதி. சிவஞானசுந்தரம் (செல்வி.நடராசா) 1970களிலிருந்தே எனக்கும் எனது குடும்பத்தவருக்கும் நன்கு அறிமுகமானவர். 1970களில் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் விரிவுரையாளராக என்னுடன் கடமையாற்றியவர். அரசறிவியலில் சிறப்புக்கலைப் பட்டதாரியாக இவர் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்து சிறந்த மாணவியாகத் திகழ்ந்தார். பல்கலைக்கழக விரிவுரையாளராக வருவார் என எதிர்பார்க்கப்பட்டபொழுதும் துரதிஷ்டவசமாக அப்பதவியைப் பெறமுடியாது போய்விட்டது கவலைதரும் ஒன்றாகும்.

பல்கலைக்கழகச் சேவையைப் பூர்த்திசெய்து பின்னர் ஆசிரியப் பணியில் இணைந்து படிப்படியாக உயர்ச்சிபெற்றும் அதன் பின்பு கல்வி நிர்வாகத்துறையில் தன்னை மையப்படுத்திக்கொண்டார். இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபராகப் பல பாடசாலைகளில் கடமையாற்றினார். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் அதன் பின்னர் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இவரது பணி மிகவும் சிறப்புபெற்றுப் பலராலும் பாராட்டப்பட்டது. இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் நிறுவுனர் சேர். பொன். இராமநாதனின் கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுத்து தமிழ்ப்பெண் பிள்ளைகளுக்கு இந்துப் பண்பாட்டுப் பின்புலத்துடன் கூடிய சிறந்த கல்வியை வழங்கினார். சங்கீதம், நாட்டியம், நடனம் ஆகிய அழகியல் கலைகளையும் மனைப்பொருளியல் செயற்பாடுகளிலும் மாணவிகளை சிறந்து விளங்க வைத்தார்.

திருமதி. சிவஞானசுந்தரம் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும், பொதுமக்களாலும் பெரிதும் கௌரவப்படுத்தப்படுபவராகவும், விரும்பப்படுபவராகவும் விளங்கினார். மாணவிகள் நலனில் மிகுந்த கரிசனை உடையவராக திகழ்ந்தவர். யாழ்ப்பாணக் கல்விப்புலத்தில் பெண்கல்வியை சிறப்பாக முன்னெடுத்தவர் என்ற சிறப்பு மதிப்பு உண்டு. அவர் தனக்கு கற்பித்த ஆசிரியர்கள் மேல் மிகுந்த மரியாதையும், பற்றும் கொண்டவர்.

திருமதி. சிவஞானசுந்தரம் அவர்கள் காலஞ்சென்ற கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டியின் வழிநடத்தலுடன் பாதிக்கப்பட்ட வறிய, பெண்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களது பாதுகாப்பான வாழ்விலும் பெரும் பங்களிப்பு ஆற்றிவந்தவர். மேலும் யுத்தத்தினல் இடம்பெயர்ந்த வலிகாமம் வடக்கு பல பாடசாலைகளை மனம் சுழிக்காமல் இராமநாதன் கல்லூரி வளாகத்திற்குள் இயங்கவைத்துப் பிரதேசப் பிள்ளைகளின் கல்வி பாதிக்காமல் காத்த ஒரு பெரும் அதிபர். கற்றலுக்கு நல்ல சூழ்நிலையில்லாத குடும்பங்களில் இருந்துவரும் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு பல கற்றல், கற்பித்தல் திறமைகளைக் கடைப்பிடித்து அவர்களை கல்வியில் ஈடுபாடுகொள்ள வைத்தார்.

ஒரு சிறந்த கல்வியாளராகவும், கல்வி நிர்வாகியாகவும், சமூக சேவகியாகவும், இன்ப துன்பங்களில் பங்குகொள்ளும் பண்பாளராகவும் பலருக்கு இடுக்கண் களையும் நண்பியாகவும் சிறப்புற செயற்பட்டு வருபவர்.

திருமதி. சிவஞானசுந்தரம் நீண்ட ஆயுள்பெற்று மேலும் துடிப்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ள இறைவன் ஆசி கிட்டுமாக



# வாழ்த்துச் செய்தி

**பேராசிரியர் கா.குகபாலன்**
புவியியற் பேராசிரியர்,
புவியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

## சகலரையும் நேசிக்கும் பண்பாளர்.....

யாழ்.இராமநாதன் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின் காலம் மிகப்பெறுமதியானதாகும். எமது பிரதேசத்தில் கடந்த 30 வருடங்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் மக்களும், மாணவர்களும் நிர்வாக இயந்திரங்களும் தடுமாறிய காலப்பகுதிகளில், ஏறத்தாழ இரு தசாப்தகாலமாக கல்லூரியினை சிறப்பாக வழிநடாத்திய பெருமைக்குரியவர்தான் திருமதி. ஆனந்தி அவர்கள். இதற்கு அவரிடத்தே காணப்பட்ட அறிவு, ஆற்றல், பொறுமை, ஏனையோரை மதிக்கும் பண்பு, நிர்வாகத்தில் பாரபட்சமின்மை, மாணவர்களுடன் கண்டிப்போடுகூடிய அன்பு போன்ற பல நற்பண்புகளைக் கொண்டிருந்தமையே என்றால் மிகையாகாது.

திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் 1969ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதல்வருட மாணவராக நுழைந்தபோது நான் சிரேஷ்ட மாணவனாக இருந்துள்ளேன். பல்கலைக்கழகத்தில் எழுதா நடைமுறையான பகிடிவதையின்போது கேட்கப்படும் கேள்விகளைக் கேட்டோம். ஒரு கட்டத்தில் அவர் தனது பொறுமையினை இழந்து எங்களைக் கடுமையான வார்த்தைகளினால் ஏசிவிட்டார். நாங்கள் அகன்றுவிட்டோம். எனினும் அவர் செய்தது சரியென பின்னர் உணர்ந்துகொண்டேன். அதன் பின்னர் ஆனந்தியின்மேல் கொண்ட மதிப்பும், மரியாதையும் பல மடங்கு அதிகரித்தது. அதுவே 1969ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 42 வருடங்களாக தொடர்கின்றது.

திருமதி.ஆனந்தி.சிவஞானசுந்தரம் பல்கலைகழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் சிறப்புக்கலை பயின்று சிறந்த பெறுபேற்றினைப்பெற்று, அங்கேயே விரிவுரையாளராகத் தனது கல்விப்பணியினை ஆரம்பித்தார். தவிர்க்கமுடியாத நிலையில் அதனைவிட்டு ஆசிரியப் பணியினைத் தொடர்ந்து, இப்பணியில் அதியுச்சச் சாதனைகளைப் புரிந்து மாணவர்கள், ஆசிரியர்கள். பெற்றோர்கள், மேலதிகாரிகள் போன்றவர்களிடம் நன்மதிப்பை பெற்று, வயது என்ற தடையின் விளைவாக தனது கல்விப்பணியினை தொழில் ரீதியாக நிறைவு செய்கின்றார். அவரது சிறந்த கல்விப்பணிக்காக நாம் எல்லோரும் அவரை வாழ்த்துகின்றோம்.

திருமதி. ஆனந்தி அவர்கள் சாதனைகளை நிகழ்த்தி எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த நிலையில் அவருக்கு சோதனைகளும் காத்திருந்தன. அவரது அன்புக்குரிய கணவரை இழக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. அந்நிலையிலும் தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டிற்காக தொடர்ந்தும் தனது பணியினை மேற்கொண்டு வந்தார்.

மிகச் சிறந்த பண்பாளரான திருமதி ஆனந்தி அவர்களுக்கு மணிவிழாவினை கல்லூரிச்சமூகம் ஒழுங்கு செய்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். 19 அண்டுகள் ஒரு கல்லூரியில் அதிபராக இருப்பது என்பது இன்றைய காலங்களில் பெரிய சவாலுக்குரியது. இச்சவால்களுக்கு முகம்கொடுத்து எல்லோரதும் அன்புக்கும் பாசத்திற்கும உரியவராக விளங்கியதன் வெளிப்பாடே இம்மணிவிழாவாகும். நடேசப்பெருமானை வேண்டிக்கொள்வதுடன் அவரது அன்புப் புதல்வன் ஆரூரானுடன் சிறப்புற வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**திரு எஸ் கே. யோகநாதன்**
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் நல்லதோர் கல்வியியலாளர். பெரியோர் சிறியோர் என்ற பேதமின்றி எல்லோருடனும் நேயமாகப் பழகும் இனிய சுபாவங் கொண்டவர். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் அதிபராக சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி அக் கல்லூரியின் மேம்பாட்டுக்குத் தன்னாலான அனைத்து சேவைகளையும் ஆற்றியுள்ளார். மாணவர்களின் முன்னேற்றத்தில் எப்போதும் அக்கறையுடைய இவர் நல்ல அறிவும் அழகும் மிக்கவர்களாக அவர்கள் திகழ வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராகத் திகழ்ந்து வருகிறார்.

எமது கல்வியியற் கல்லூரியின் வரலாற்றிலும் இவருக்கு மதிப்பார்ந்த ஓரிடமுண்டு. நாம் எமக்கென சொந்த வதிவிடமேதுமின்றி அவதியுற்றிருந்த வேளையில் தனது பாடசாலையில் எமது கல்லூரிக்கு இடமளித்து எமது கல்விச் செயற்பாடுகள் தொய்வேதுமின்றித் தொடர்வதற்கு இவர் ஆற்றிய பேருதவியை நாம் ஒரு போதும் மறந்து விட முடியாது.

நேரிய அறிவும் சீரிய சிந்தனையும் உடைய இவர் தொடர்ந்தும் கல்விப் புலத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பதனையிட்டு மிக்க மன மகிழ்வெய்துகிறேன்.

இவரது இனிய கல்விப்பணிகள் இன்னும் பல்லாண்டு காலம் தொடர இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.





அரம்ப கால விளையாட்டு வீரர்களுடன்



வலைப்பந்து அணியுடன் 2001



அடிப்படைப் பயிற்சி அணியுடன்




வலைப்பந்து அணியுடன் 2010



முன்னைநாள் அரச அதிபருடன்



கூடைப்பந்து அணியுடன்



அதிபர் காலத்து மாகாண சம்பியன்

விளையாட்டு நிகழ்வுகளில்

# வாழ்த்துச் செய்தி

திருமதி றெஜினா இருதயநாதன்
ஓய்வுநிலைக் கல்விப்பணிப்பாளர்,

## உளம் நிறைவுடன் வாழ்த்துகிறேன்.

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் யா/இராமநாதன் கல்லூரியில் அதிபராகக் காணும் முன்னரே யா/பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியில் உளம் நிறை நண்பியாக பழகிக்கொண்டார்.

அழகும் ஆழமான அறிவும் அமைதியும் ஆர்ப்பாட்டமுமற்ற நிறைகுடமாக என்மனதில் அவர் இடம்பெற்றார்.

நான் கல்விப்பணிப்பாளர் ஆகி அவர் கல்லூரியைத் தரிசித்து குறைகளைச் சுட்டிக் காட்டும்போதெல்லாம் மறுப்பின்றி ஏற்றுக்கொண்டு நிர்வாகம் நடத்தியவர். ஆசிரியர்களின் தவறுகளைப் பலர் முன்னிலையில் சுட்டிக்காட்டாமல் அமைதியாக ஆனால் ஆணித்தரமாகக் கூறி வழிநடாத்தினார்.

நிர்வாக ரீதியில் என்னுடன் பழகும்போதெல்லாம் தூரநின்றே பழகிக்கொள்வார். தனது துன்ப அனுபவங்களை நண்பியாக நின்று பகிர்ந்துகொள்வார். என்றும் சினந்துகொள்ளாத சிரித்த முகத்துடன் பொருத்தமற்ற விமர்சனங்களுக்குக் கலங்காமல் நிமிர்ந்து நின்றவர்.

எனது நிர்வாகத்தின் போது எனக்குத் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறுவதுடன் தற்போதய புதிய பணியில் நிறைவாகப் பணிபுரிந்து மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ உளம் நிறைவோடு வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**திருமதி மஞ்சுளாதேவி சதீசன்**
பிரதேச செயலர்,
வலிதெற்கு,
உடுவில்.

யாழ் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போது வலிகாமம் வலயக்கல்விப் பணிமனை உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிக்கொண்டிருக்கும் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் மணிவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இம் மணிவிழாக்காணும் அம்மையார் தனது 18 வருட சேவையை இராமநாதன் கல்லூரியில் நிறைவு செய்தவராவார். இச்சேவைக்காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. அவரின் சிரித்த முகமும் பேச்சாற்றலும் என்னைக் கவர்ந்தது. மாணவர்களுடன் ஒரு தாயின் அரவணைப்புடன் அன்பாகவும், கண்டிப்பாகவும் நடந்து கொள்கின்ற சுபாவம் அவருக்குரியதாக இருந்தது அவர் அதிபராக இருந்த காலத்தில் அக்கல்லூரியில் இந்து கலாசாரத்தை பேணிப்பாதுகாத்தார் நீண்ட காலமாக இல்லாதிருந்த விடுதி வசதியினை மாணவிகளின் நன்மை கருதி மீளவும் ஏற்படுத்திக் கொடுத்தார். இன்னும் விளையாட்டுப்போட்டி, நடனப்போட்டிகளில் மாவட்டமட்டங்களில் பரிசில்களையும் அக்கல்லூரி பெற்றுக்கொள்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கினார்.

மேலும் எமது பிரதேச செயலகம் பழைய கட்டடத்தில் இயங்கிய போது பிரதேச கலாசார விழா மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்கு இக்கல்லூரி மண்டபத்தினைத் தந்து விழாக்கள் இனிது நடைபெற எமக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கினார்.

இவர் சீரும் சிறப்புமாக நோய்நொடிகள் இன்றி வாழ வேண்டும். தனது சேவையை தொடர்ந்தும் செய்வதற்கு ஆன ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.










அதிபர் காலத்தில் இடம் பெற்ற தமிழ் விழாக்களில் சில

# எனது மகள்

கலாபூஷணம் செல்லப்பா நடராசா,
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

*ஒரு திருமகளாய் பெற்றோர் உவப்ப
பெருமகிழ்வுடனே பிறந்தாய் அம்மா!
படித்தாய் பல்கலைக்கழகம் சென்றாய்.
துடிப்புடன் கற்று சிறப்புக்கலைமாணி
பட்டம் பெற்றாய் மகிழ்ந்தனர் பெற்றோர்.
உதவி விரிவுரையாளராய் உவந்து சின்னாள்
பதவி வகுத்துப் பாராட்டுப் பெற்றாய்.
மீண்டு வந்து களுத்துறை முஸ்லீம்
மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய பின்
மத்துக்கம சென்மேரீஸ் மகாவித்தியாலயத்தில்
தமிழ் மாணவர்க்காய் உனது கடமையைத்
திறம்பட ஆற்றித் திரும்பினாய் தாயகம்.
மகாஜனாக் கல்லூரி உனை மகிழ்வுடன் ஏற்றது.
அங்கிருந் ததிபர் பரீட்சைக்குத் தோற்றினாய்
மதிப்புடன் அதிபர் பரீட்சையில் தேறிய உன்னை
உப அதிபராக ஏற்றது கல்லூரி
பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரியின்
அதிபராக அழைப்பு வரவே
அங்கு சென்று அதிபராய் அமர்ந்தாய்.
அதிபராய் அமர்ந்து இரு ஆண்டுகளில் பின்
இராமநாதன் கல்லூரி அதிபராய் வருகென
கல்வி பணிப்பாளரின் பணிப்புரை வந்தது.
வந்தாய் அமர்ந்தாய்! கடமையைப் புரிந்தாய்!
வளர்ந்தது கல்லூரி வளர்த்தாய் நீயும்
கல்லூரிக்காகப் புரிந்த நற்செயல்கள்
எண்ணிலடங்கா எல்லாம் இராமநாத
வள்ளல் அறிவார்! மக்கள் அறிவார்! மாணவர் அறிவார்!
கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றாய்!
கல்வி நிர்வாக சேவையில் சேர்ந்தாய்!
இன்றுடன் அகவை அறுபதில் நுழைந்தாய்!
மும்மொழி தெரிந்த முதல்வி நீயம்மா!
உடன் பணிபுரிந்த ஆசிரியர்கள்
கல்விபயின்ற மாணவ சமூகமும் நானும்
கல்விசார் ஊழியர்கள் - அனைவரும் இணைந்து
வாழ்க நீ! வளர்க நீ! என வாழ்த்துகின்றோம்! வாழ்வாயம்மா!*

# வாழ்த்துச் செய்தி



**திருமதி நந்தினி சிவராஜன்**
பிரதி அதிபர்
யா/இராமநாதன் கல்லூரி

## ஆனந்தமானவர் எங்கள் அதிபர்
## ஆனந்தி சிவஞானசுந்தரம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிராமமும் நகரமும் சங்கமித்த கல்லூரிகளிலே இராமநாதன் கல்லூரியும் ஒன்றாகும். "வாழ்வு என்பது ஒரு ஓட்டப்போட்டியில்லை" என்பதை புரிந்து கொண்டு வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் இரசித்து வாழ்ந்து சுய கணிப்பை உயர்த்திக் கொண்டவர் இன்று ஓய்வு பெறும் எங்கள் அதிபர்.

பல்வேறு இன்னல்கள் வந்தபோதும் "சூரிய உதயமும் மலர்களும் வானமும் காற்றும்" எமக்கு மகிழ்வு தரப் போதுமானவை என்பதைக் கருத்தில் கொண்டு பாடசாலையில் தங்கியிருந்து கவின் நிலைப்படுத்தியதையும் இங்கு ஒரு ரம்மியமான சூழலை உருவாக்கியதையும் நன்றியுடன் பார்க்கின்றேன். பாடசாலைச் சமூகத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தவர் எமது அதிபர். எனது பேரன், தாயார், நான், மகள் என நான்கு சந்ததித் தொடர்பில் பாடசாலையைப் பற்றி நன்கு அறிந்து கொண்டவள் என்ற வகையில் பல அதிபர்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்களின் பணிக்குச் சற்றும் குறைவில்லாமல் பதினெட்டு ஆண்டுகள் சிறந்த சேவையாற்றி இன்று ஓய்வு பெறும் எமது அதிபரை மறந்து விட முடியாது. எங்கள் கலை நிகழ்வுகள் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்று அகில இலங்கையில் பெருமை பெற நிதி வளங்களைத் தேடிப் பூரண ஆதரவு வழங்கியதை நான் நினைவுபடுத்துகிறேன்.

சர்வதேசத்தில் எங்கள் மாணவிகள் கலை வளர்த்து சர்வதேச நாடுகளில் பெருமை பெறத் தமது சேவைக்காலத்தில் அதிபரின் பணிக்கு மேலாக உழைத்தவர் "ஆன்மீக நம்பிக்கைகள் ஆன்மீக பலம் ஆகியவை இருக்கும் போது உளப்பாதிப்புக்கு எதிரான தாங்குதிறன் அதிகமாகிறது" என்ற உளவியல் சார்ந்த விடயத்திற்கேற்ப இரண்டு தசாப்தகாலப் போருக்குப்பின் எமது மாணவிகளின் மனபலத்தை மேலும் அதிகரிக்க கனடா பழைய மாணவிகளுடன் தொடர்பு கொண்டு நல்ல ஆன்மீகத்திறன் பெறப் பாடசாலை நடேசர் ஆலயப் புணர்நிர்மானப் பணியை ஆரம்பித்து வைத்தமை வரவேற்புக்குரிய விடயமாகும். பல்வேறு இன்னல்கள் வந்த போதும் தனக்கெனத் தனித்துவமான உன்னத ஆளுமை கொண்ட திறனை அதிபர் கொண்டிருந்தமையினாலேயே பாடசாலையின் உயர்வைப் பேண முடிந்தது. "எந்த ஒரு நிறுவனத்தினதும் விளைதிறன் மேம்பாட்டிற்குத் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானது" என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப தன்னால் இயன்ற பணிகளை ஆற்றி இன்று ஓய்வு பெறும் எமது அதிபரின் ஓய்வுக் காலம் ஆனந்தமாக அமைய எல்லம் வல்ல இராமநாதேஸ்வரர் ஆலய நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி அம்மையையும் வேண்டி நிறைவு செய்கிறேன்.

# வாழ்த்துச் செய்தி



**திரு ஆ. இரவீந்திரன்,**
தலைவர்,
வாழ்வகம்,
சுன்னாகம்.

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் எம்மால் என்றுமே மறக்க முடியாதவர். உயர்வு தாழ்வின்றி எல்லோருடனும் சிரித்துப் பேசி அன்புடன் பழகும் அவரது ஆளுமை கண்டு நான் பல தடவை வியந்திருக்கிறேன். மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் இராமநாதன் கல்லூரியை சிறப்பாக வழிநடத்திய அவர் எதிர் கொண்ட இன்னல்கள் பலப்பல. இருந்தபோதிலும் அவற்றை எல்லாம் கச்சிதமாய் எதிர்கொண்டு கல்லூரியைச் சீரிய முறையில் வழிநடத்திய பெருமை அவரையே சாரும். இவர் அதிபராக இருந்த காலம் எமது வரலாற்றிலும் பொற்காலமாய் அமைந்தது. எமது விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் மேம்பாட்டில் அதீத ஆர்வமும் அக்கறையுங்கொண்டு இவர் ஆற்றிய பணிகள் என்றும் மறக்கமுடியாதவை. நாம் எமது பிள்ளைகள் தொடர்பாகக் கேட்ட எந்த ஒரு உதவியையும் அவர் மறுத்ததில்லை.

அவர் இனிவரும் காலங்களிலும் சிரித்த முகத்தோடு கல்வி உலகுக்குச் சீரிய சேவைகள் ஆற்றவேண்டும். எமக்கும் அவருக்கும் இடையிலான அன்புறவு மேன்மேலும் வளர்ந்தோங்கவேண்டும் என இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி

**திருமதி வி. ஜெயராசா**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

எமது கல்லூரியில் 17 ஆண்டுகள் கடமை புரிந்த அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் ஒரு சிறந்த கல்வியாளர், பன்மொழிப் புலமையாளர், பட்டப்படிப்புடன் பட்டப்பின் படிப்புக்கள் பலவும் கற்று பட்டங்கள் பெற்று தற்போது தரம்1 அதிபராக திகழ்கிறார். கல்லூரி வளர்ச்சியில் பூரண ஒத்துழைப்பு வழங்கி அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர். இவரால் முன்னெடுக்கப்பட்ட சகல நிகழ்வுகளும் திறம்பட நடாத்தி முடிக்கப்பட்டன எமது சங்கச் செயற்பாடுகள் அனைத்திற்கும் தனது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வழி நடத்தியுள்ளார். நீண்ட காலம் எமது கல்லூரியின்பால் மாறாத பற்றுடன் செயற்படுபவர். எந்த இடத்திற்கும் துணிச்சலுடன் சென்று எந்த மொழியிலும் சரளமாகப் பேசி கருமங்களை ஆற்றும் திறமைசாலி. இதன் பயனாக பல அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக எமது கல்லூரியின் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்துள்ளார். சேவையில் இருந்து ஓய்வு பெறும் இவ்வேளையிலும் கூட கல்லூரிக் கட்டடங்கள் புதுப்பித்தல் சம்பந்தமாக 97 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கல்லூரி ஆலயத் திருத்தங்கள் சம்பந்தமாகவும் உரிய தரப்பினர்களுடன் தொடர்பு கொண்டு செயற்படுவது அவர்தம் பொறுப்புணர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் எமது கல்லூரிக்கு பல உதவிகள் பெற்றுத் தந்துள்ளார். இக் கல்லூரிக்கு அதிபராக மட்டுமல்ல ஒரு குடும்பத் தலைவிபோல் செயற்படும் இவர் தனது தன்னலமற்ற சேவையால் மாணவர்கள் ஆசிரியர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரதும் நன்மதிப்பிற்குரியவராவார் இவ்வாறு அன்புக்கும் பண்புக்கும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் இலக்கணமாக விளங்கும் எமது அதிபரைப் பாராட்டுவதில் எமது சங்கம் பெருமை அடைகிறது "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்பதற்கமைய புகழுடன் வாழ்ந்து இன்று அகவை 60ல் ஓய்வு பெறும் எமது அதிபரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமையவும் சமயத் தொண்டிலும் சமூகத் தொண்டிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி நீண்டகாலம் நலமுடன் வாழவும் யா/ இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சார்பாக வாழ்த்துகிறேன்.










பரிசளிப்பு விழாக்களில்

## வாழ்த்துச் செய்தி



**திருமதி குலசேகரம் சறோஜா,**
செயலாளர்,
பா. அ. சங்கம்.

## மணிவிழா நாயகியை வாழ்த்துகிறேன்

யாழ் மாவட்டத்தில் புகழ் பூத்த கல்லூரியாக விளங்குவது இராமநாதன் கல்லூரி. இக்கல்லூரியில் பதினெட்டு வருடகாலமாக ஆலவிருட்சமாக நின்று தன்னகத்தே எத்தனையோ கல்லூரி மழலைகளைச் சுமந்து, "பாரதிகண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்து, மாணவ மணிகளுக்கு ஆசானாக விளங்கியவர். திருமதி. சிவஞானசுந்தரம் அவர்கள் மும் மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் தனது சேவைக்காலத்தில் கல்லூரி வளாகத்தில் வாழ்ந்து, விடுதி மாணவர்களின் கல்வியில் ஆசானாகவும், சமயப் பணி, சமூகப்பணி ஆற்றி தாய், தந்தையரைப் பிரிந்து வாழ்ந்த மாணவச் செல்வங்களை தனது பிள்ளைகளைப் போல் பராமரித்து தாய், தந்தையாகவும் வாழ்ந்து பாதுகாத்து வளர்த்து வந்தார். நாட்டில் எற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பல பாடசாலைகளைத் தனது வளாகத்தில் கல்வி கற்க வைத்தார். அத்தோடு துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவர்கள் தங்கி வாழ புகலிடம் கொடுத்தார். 18 வருடகாலமாக இரவு பகல் பாராது பாடசாலையைச் சுற்றி அன்னம் போல் அசைந்து, அசைந்து வலம் வந்த காட்சியை யாரும் மறக்க முடியாது. சிரித்த முகத்துடன் அழகிய தோற்றப் பொலிவுடன் பண்பின் சிகரமாக விளங்கியவர். எந்தக் காரியத்தையும் துணிந்து செயற்படுத்தும் ஆஞ்சா நெஞ்சம் கொண்டவர். நேர்மை, கடமை, கண்ணியம் கட்டுப்பாடாக வாழ்ந்து பாடசாலையின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அயராது உழைத்தவர். சைவமும், தமிழும் தழைத்து ஓங்க மகளிருக்கு என ஒரு பாடசாலை அமைத்த சேர் பொன் இராமநாதப்பெரு வள்ளலின் கனவு நனவாகக் கல்லூரியின் வளர்ச்சியில் வீறுநடைபோட்டு வரலாற்றுப்பெருமை மிக்க பல சாதனைகளைப் படைத்தார். மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் அன்பாக பழகி எத்தனையோ நிகழ்வுகளைத் தானே முன்னின்று நாடாத்தினார். ஒவ்வொரு நிகழ்வுகளிலும் களத்தில் இறங்கி முதலில் தான் ஒத்திகை பார்த்த பின்னர்தான் நிகழ்வுகளை மேடைக்கு ஏறவிடுவார். நடனம், நாடகம், சங்கீதம், விளையாட்டு, விஞ்ஞான, கணிதம், சித்திரம் இன்னோரென்ன பல நிகழ்வுகள் அம்மையார் ஆராந்து ஏற்றதன் பின்னர்தான் மேடையேறின. ஒவ்வொரு நிகழ்விலும் மாணவர்கள் சாதனை படைக்க உறுதுணையாக நின்றவர். உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்று மாணவர்களை ஆகாய மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும்

தென் இலங்கைக்கு அழைத்துச் சென்று சாதனை படைத்தவர். பல தடைவைகள் நடனம், விளையாட்டு, விஞ்ஞான, கணித, நாடக, சித்திரப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற வைத்த பெருமை அம்மையார் அவர்களையே சாரும். இலங்கையில் பல்கலைக்கழகம் தொடக்கம் பாராளுமன்றம் வரை பல நிகழ்வுகளை மாணவர்களைக் கொண்டு சிறப்பித்தார். இலங்கையில் பல ஆலயங்களில் மாணவர்களைக் கொண்டு நடன நிகழ்வுகள் நடாத்தினார். நடன நிகழ்வுகள் இலங்கையில் மட்டுமல்லாது கடல் கடந்த நாடுகளிலும் கூட எமது அதிபரின் காலத்தில் புகழ்பரம்பியுள்ளன. இந்தியா, மலேசியா, சென்னை, புதுடில்லி போன்ற இடங்களில் பாராட்டுக்கள் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் காலத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகள் பெற்றுள்ளனர். எல்லோராலும் பாராட்டத்தக்க சிறந்த "பான்ட்" வாத்திய அணியை உருவாக்கி அதற்கு ஏற்ற உடையை தனது முயற்சியால் உருவாக்கியுள்ளார். இராமநாதன் உருவச்சிலையை பாடசாலை வளாகத்தில் அமைத்தமை நினைவு கூரத்தக்கது.

அம்மையார் அதிபராக இருந்து ஆற்றிய சேவைகளுக்கு நிகர் ஏதும் இல்லை. இன்று போல் என்றும் நோய் நொடியின்றி சுகமாக ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி

**அருட்சகோதரி யதீஸ்வரி,**
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பளை.

## பல்லாண்டு வாழ்க

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களுக்கு மணிவிழா மகிழ்வுடன் வாழ்த்தும் ஒரு மலர்முகம் கண்ணில் தெரிகிறது. அது வானிலிருந்து வாழ்த்தும் எம் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் அன்பு முகம். ஆம்! அம்மா இங்கிருந்தால் மிக ஆனந்தமாக ஆசி நிறைந்த ஒரு வாழ்த்துரையை வழங்கியிருப்பார். அவருக்கு திருமதி ஆனந்தியிடம் அளவற்ற அன்பு, விருப்பம்.

1992ம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் முற்றாக இடம்பெயர்ந்து இராமநாதன் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தது. 60 ஆண்டுகள் புனருத்தாரணம் செய்யப்படாமல் இருந்த ஸ்ரீ இராமநாதேஸ்வரர் பள்ளிப்படை ஆலயத்தினைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யும் பொறுப்பைச் சிவத்தமிழ்ச் செல்வி ஏற்றார். எம்மை அங்கு அரவணைத்து தங்க வைத்த திருமதி மங்கையர்க்கரசி சிற்றப்பலத்தின் அனுசரணையுடன் வேலைகள் தொடங்கின மங்கயர்க்கரசியும் ஓய்வு பெறும் நிலையில் இருந்தார். கும்பாபிஷேக நாளில் புதிய அதிபர் பதவிக்கு திருமதி ஆனந்தி அம்மையார் வந்துசேர்ந்தார். மாலையில் மணவாள கோலத்திருவிழாவும் மருதனார்மடம் முழுதும் கொண்டாடி மகிழ்ந்தது.

அதன் பின் திருமதி ஆனந்தி அம்மையார் இராமநாதேஸ்வரர் ஆலயத்தின் முன்பு அமைந்த சிறிய வீட்டில் குடி புகுந்தார். அவரது துணைவர் திரு சிவஞானசுந்தரம் திருமலையில் பணிபுரிந்ததால் அம்மையார் தமது பெற்றோர் சிறுவனான மகன் ஆரூரனுடன் அவ்வீட்டில் குடி புகுந்தார். எத்தனை பெரும் பொறுப்புக்கள் மத்தியிலும் திருமதி ஆனந்தி அம்மையார் படுக்கையில் இருந்த தாயாரை கண்ணும் கருத்துமாகப் பராமரித்தசிரத்தையும், சீர்மையும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியை மிகவும் கவர்ந்தது.

அம்மையாரின் தந்தை ஆசிரியப் பணியினின்றும் ஓய்வு பெற்றவர். சிறந்த எழுத்தாளர், மிக அடக்கமானவர் அவரையும் இன்று வரை ஆனந்தி அம்மையார் மிகப்போற்றுதற்குரிய முறையில் பேணி வருகிறார்.

இராமநாதன் கல்லூரியில் இருந்து இடம் பெயர்ந்த போதும், மீண்டும் வந்த பின்னரும் எமது இல்லப் பிள்ளைகளிடம் அம்மையார் காட்டிய கரிசனையும், அன்பும் வார்த்தைகளுக்கு எட்டாதது.

அக்காலத்தில் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற எமது இல்லப்பிள்ளைகள் பலர் பல்கலைக்கழகம் சென்றனர், நுண்கலைப்பீடம் சென்றனர். இன்று மிக நல்லபடி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை இன்னல் வந்தாலும் எதிர்கொண்டு முன்னேறுவதற்கு ஆனந்தி அம்மையார் சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார்.

அவரது காலத்தில் இராமநாதன் கல்லூரி பல சவால்களுக்கு முகம் கொடுத்தது. பல முன்னேற்றப்படிகளில் உயர்ந்தது. பராட்டிற்குரிய பல கருமங்கள் அவரால் ஆற்றப்பட்டன.

நல்லதொரு கல்விப்பாரம்பரியத்தில் வந்தவர். சிறந்த கல்வியாளர், எந்நேரமும் மலர்ந்த முகத்துடன் பணி செய்யும் பண்பாளர். பன்மொழிப் புலமை வாய்ந்தவர். திருமதி. சிவஞானசுந்தரம் அவர்கள் பல்லாண்டு நலத்துடன் வாழ்ந்து நல்ல பல சேவைகள் புரிய எல்லாம் வல்ல சிதம்பர நடராஜாப் பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் இறைபணியில் சகோதரி,**
**யதீஸ்வரி**



அதிபர் காலத்து ஆங்கில நிகழ்வு



அதிபர் காலத்து கல்விசாரா உத்தியோகத்தர்கள்

# கல்லூரிக்கீதம்

**இராகம்: காம்போதி** **தாளம்: ஆதி**

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பண்பிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவதுசீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும்
பொன்றாத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதனறன் கல்லூரி யம்மானை

**இராகம்: பூபாளம்** **ஹதாளம் ரூபகம்.**

அரிபடர்ந்த மதர்க்கண்ணா ரரியயனுங் காணாத
விரிமலர்ச்சே வடிகாணும் வியைப்புடைத்திக் கல்லூரி

**இராகம்: பௌளி**

பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்கீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

**இராகம்: கல்யாணி**

திங்களசேர் வாண்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ்சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி

**இராகம்: ஆனந்தபைரவி**

பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்
பன்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

**இராகம்: பெஹாக்**

தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயன்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

இராகம்: கேதாரகௌளை

கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணைபயில் வியப்புடைத்திக் கல்லூரி

இராகம்: சிந்துபைரவி

நித்திலத்தை யொத்தநகை நாணமடவார் நிரைநிரையாச்
சித்திரத்தைப் போலியங்கும் சீருடைத்திக் கல்லூரி

இராகம்: காபி

வண்ணமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்
சொன்னகலை பல பயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி

இராகம்: தோடி

பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்
நூல்நூற்று நலம்பரியும் நோன்புடைத்திக் கல்லூரி
ஈழத்தைப் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்
சூழ்ராம நாதன்றன் கல்லூரி - வாழியவே
தாவிலூழித் தண்ணளி
மாவலி கங்கை மணலினும் மிகவே.

ஆக்கம்:
சு. நடேசபிள்ளை
B.A., B.L. (Ex-Senator)

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...



**திருமதி. வை. கணேசபிள்ளை,**
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

மணிவிழாக்காணும் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் இராமநாதன் கல்லூரி வளர்ச்சிப் பாதையில் ஆற்றிய கல்விப் பணிகளை வெளிப்படுத்தும் ஓர் சஞ்சிகையாக "ஆனந்தம்" மணிவிழா மலரை கல்லூரி வரலாற்றில் முதன்முறையாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். 1992ம் ஆண்டு போர்க்காலச் சூழ்நிலையில் பல அனர்த்தங்களின் மத்தியில் இராமநாதன் கல்லூரியின் பொறுப்பை ஏற்று 19 வருடங்கள் அதிபராக இருந்து கல்லூரியின் பண்பாடு, பாரம்பரியங்கள் அழிந்து போகாமல் காப்பாற்றி இராமநாதன் விரும்பிய சைவத்தமிழ் பெண்மணியாக வாழ்ந்து காட்டிச் சாதனைகள் படைத்த அதிபரின் பணிகளை இம் மலர் வெளிப்படுத்துகின்றது. ஆசியுரைகள், வாழ்த்துரைகள், பல்வேறு பட்ட ஆக்கங்கள் இதனை மெய்ப்பிக்கின்றன.

ஒரு நூற்றாண்டை அண்மித்துள்ள இராமநாதன் கல்லூரி வரலாற்றில் 19 வருட காலம் அதிபராகக் கடமையாற்றிய ஒருவர் என்றால் அது திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தான். நினைத்தவற்றை முடிக்கும் ஒரு சாதனைப் பெண்ணாக விளங்கும் இவருக்குப் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர், கல்லூரிச் சமூகம் எனப் பலரது மனமுவந்த உதவிகளுடன் இச்சஞ்சிகை வெளியிடுவதில் மலர்க்குழு பெருமையடைகிறது.

சமயப்பெரியார்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பழையமாணவர்களின் பல்வேறு ஆக்கங்கள் இம்மலரை அணிசெய்கின்றன இச்சஞ்சிகையானது கல்லூரியின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கும், வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

கல்லூரிக்கீதம், கொடிக்கீதம், இராமநாதேஸ்வரர் ஊஞ்சல் என்பன காலவெள்ளத்தால் அழிந்து போகாமல் காப்பதற்காக இம்மலரில் இடம்பெறச்செய்துள்ளோம். கொடிக்கீதமும், இராமநாதேஸ்வரர் ஊஞ்சலும் அதிபரின் தூண்டுதலால் பாடப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சஞ்சிகை வெளியீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கி முன்னின்றுழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகள் கூறக்கடமைப் பட்டுள்ளோம்.

உரிய காலத்தில் அழகாக அச்சிட்டு வடிவமைத்து தந்த "குடாநாட்டு" அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்

**வளர்க இராமநாதன் கல்விப்பணி**

# எமது அதிபரின் வாழ்வியற் பகுதிகள்

பெயர்: திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்

பிறந்த திகதி: 30.11.1050

| | |
|---|---|
| 1-4, ஆரம்பக்கல்வி(1954-1958) | களு/டார்டன்பீல்ட் தமிழ்க் கலவன் பாடசாலை, அகலவத்தை |
| 5-13 இடைநிலைக்கல்வி(1959-1969) | யா/இந்து மகளிர் கல்லூரி. |
| உயர்கல்வி 1969-1974 | B.A (Hons) அரசியல் விஞ்ஞானம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br>கல்வி டிப்ளோமா **(Merit)**<br>அதிபர் சேவை தரம் I<br>கல்வி நிர்வாக சேவை தரம் III |

## சேவை விபரம்

| | |
|---|---|
| 1974 - 1975 | வருகை விரிவுரையாளர்<br>தொழில்நுட்பக்கல்லூரி, கொக்குவில் |
| 1975 - 1976 | உதவி விரிவுரையாளர்,<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br>(அரசியல் விஞ்ஞானம்) |
| 1976 - 1977 | உதவி ஆசிரியர்,<br>களு/முஸ்லீம் மகாவித்தியாலம் |
| 1977 - 1982 | களு/மத்துகம சாந்தமரிய நாயகி கல்லூரி |
| 1982 - 1984 | யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி |
| 1984 - 1986 | யா/சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயம் |
| 1986 - 1989 | யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி |
| 1981 - 1991 | உப அதிபர்,<br>யா/தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி |
| 1991 - 1992 | கொத்தணி<br>அதிபர் யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி |
| 1992 - 2010 | அதிபர்,<br>யா/இராமநாதன் கல்லூரி |

# இராமநாதன் கல்லூரியில் அதிபரின் சாதனைகள் (1992 - 2010)

- கல்லூரி ஸ்தாபகரின் சிலையை உருவாக்குவதற்கு உழைத்தமை.
- நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த கல்லூரியின் விடுதிச்சாலையை மீண்டும் ஒழுங்கமைத்து இயங்கச் செய்தமை.
- பழுதடைந்து பாவனைக்குதவாத நிலையில் இருந்த வகுப்பறைகளை GTZ நிறுவன உதவியுடன் புனரமைத்தமை.
- மாணவிகளின் பாவனைக்கு ஏற்ற வகையில் ICT அலகு ஒன்றை உருவாக்கியமை.
- நீண்டகாலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினரின் பாவனையிலிருந்த வகுப்பறைகளையும் சேர் பொன். இராமநாதன் அவர்களின் வாழ்விடமாக விளங்கிய பங்களாவையும் மீளப்பெற்று கல்லூரி மாணவிகளின் இட நெருக்கடிகளை நீக்கியமை.
- ஆற்றலுள்ள விளையாட்டுத்துறை மாணவிகளின் பயிற்சி பெறுவதற்கு கூடைப்பந்தாட்ட ஆடுகளம் இல்லாது இருந்த போது அதனை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டமை.
- 1913 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கல்லூரியின் முகப்பும் நடராஜர் ஆலயமும் பழுதடைந்து கட்டிடங்கள் ஈடாடிய நிலையில் காணப்பட்ட வேளை அவற்றைப் புணர்நிர்மாணம் செய்வதற்காக கனடா OGA உறுப்பினர்களுடனும் கௌரவ D.M சுவாமிநாதன் அவர்களுடனும் தொடர்புகளை மேற்கொண்டு கல்லூரியின் இன்றைய புதுப்பொலிவுக்காக அரும்பாடுபட்டார்.
- கல்லூரி மாணவிகள் தொடர்ச்சியாக வலைப்பந்தாட்டப் போட்டிகளில் தேசிய மட்டம் வரை பங்குபற்றி வெற்றியீட்டுவதற்கு திசைகாட்டியாக விளங்கியவர். போர்ச்சூழலில் போக்குவரத்து ஸ்தம்பிதம் தற்துணிவினாலும் தளரா முயற்சியாலும் மாணவிகள் தலைநகரில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விமானம் மூலமும் கப்பல் மூலமும் அழைத்துச் சென்றவர்.

- தமிழ்த்தினப் போட்டிகளில் தேசியமட்டம் வரை பல்வேறுநிகழ்வுகளில் மாணவிகள் பங்குபற்றி வெற்றி ஈட்டிக் கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதற்கு வழிவகுத்தவர்.
- கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளிலும் இசைத்து இன்புறத்தக்கதான கல்லூரியின் இனிய கொடிக்கீதத்தை உருவாக்குவதற்கு முன்நின்றவர்.
- கல்லூரி வளாகத்தில் கல்வித் தெய்வம் சரஸ்வதிக்கு சிலை உருவாக்க வழிசமைத்தவர்.
- பாடசாலை வளாகத்தினுள் மாணவர்கள் வசதியாகச் சென்று வருவதற்கு வீதிகளை தார் வீதிகளாக செப்பனிட்டமை.
- தரம் ஒன்று மாணவர்களுக்கு சிறிய பூங்காவுடன் கூடிய வகுப்பறையை உருவாக்கியமை.
- கல்லூரியின் சுற்றாடலை பசுஞ்சோலையாகவும் அழகாகவும் உருவாக்க உழைத்தமை.
- மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் கட்புல செவிப்புல சாதன அறை உருவாக்கம் செயற்பாட்டறையின் பாவனையைப் பயனுடையதாக்கியமை.
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் ஒவ்வொரு வருடமும் சித்தி பெற உழைத்தமை.
- பல்கலைக்கழக அனுமதி, நுண்கலைப்பீட அனுமதி, கல்வியியற் கல்லூரி அனுமதிகள் எம் கல்லூரிப் பிள்ளைகள் ஒவ்வொரு வருடமும் பெறுவதற்கு அயராது உழைத்த அம்மையார்.
- கல்லூரியின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி மாணவிகளின் வளர்ச்சி ஆசிரியர்களின் முன்னேற்றம் தன்னைச் சார்ந்தவர்களின் வளர்ச்சி பாடசாலைச் சூழலைச் சார்ந்தவர்களின் முன்னேற்றம் அனைத்துக்காகவும் அர்ப்பணிப்புடன் தன்னலங்கருதாது சேவையாற்றிய அம்மையாரைச் சிரந்தாழ்த்தி வணங்கி வாழ்த்துகிறோம்.

நன்றி

**கல்லூரிச் சமூகம்**

# அறிவுசார் மூலதனம்
# Intellactual Capital



**Prof. K. Thevarajah,**
**Faculty of Management Studies and Commerce,**
**University of Jaffna.**

## 1.0 அறிமுகம்

மனிதவள முகாமைத்துவமே நிறுவனங்களில் வளர்ச்சிக்கு அடிப் படையானது என தற்கால முகாமைத்துவம் கருதுகின்றது. உயர் உற்பத்தித்திறனை பெற்றுக்கொள்ள மனிதவள முகாமைத்துவம் வகை செய்வதாக உள்ளது. இதன் காரணமாகவே அறிவுசார் மூலதனத்தின் மீது தற்கால நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன. ஒவ்வொரு ஊழியரும் தாம் செய்யும் வேலை பற்றியும் நிறுவனத்தின் கொள்கை பற்றியும் அக்கறை கொள்ள வைப்பதாக அறிவுசார் மூலதனம் உள்ளது.

ஊழியர்களிடையே தகைமையினையும் அர்ப்பணிப்பினையும் ஏற்படுத்த முயற்சிப்பதே அறிவுசார் மூலதனம் ஆகும். அதாவது Intellectual Capital = Competency Commitment என்ற சமன்பாடு நிறுவப்பட்டுள்ளது. நிறுவனம் ஒன்றின் இலக்கினை அடைவதற்கு தன்னை அர்ப்பணித்த பயிற்றப்பட்ட ஊழியர்களே நிறுவனம் ஒன்றுக்கான பிரதான சொத்தாகும். அறிவுசார் மூலதனமே நிறுவனம் ஒன்றின் தேய்விற்கு உட்படாத பெறுமானம் அதிகரித்துச் செல்லும் தன்மை கொண்டதாகவும், குறைவடையாப் பண்பு கொண்டதாகவும் காணப்படும். அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட ஊழியர்கள் என்றுமே தன்னிச்சையான ஒத்துழைப்பை வழங்குபவர்களாக இருப்பர். இதன் காரணமாகவே தற்காலத்தில் அறிவுசார் மூலதனம் என்பது தற்கால நிறுவனங்களில் வளர்ச்சிக்கு மிகவும் வேண்டப்படுவதாக உள்ளது.

## 2.0 வரைவிலக்கணம்

ஊழியர்களின் தகைமையும் அர்ப்பணிப்புத் தன்மையும் நிறைந்தது தான் அறிவுசார் மூலதனமாகும். தகைமை அதிகமாகவும் அர்ப்பணிப்புத்தன்மை குறைவாகவும் இருந்தால் திறமையுள்ள ஊழியர்கள் செய்வதற்கு எதுவும் இருக்கமாட்டாது. மாறாக உயர்ந்த அர்ப்பணிப்பும் குறைந்த அளவான தகைமையும் காணப்பட்டால் திறமை குறைந்தவர்களே பெரும்பாலான வேலைகளைப் பெற்றுக்கொள்வர். இவை இரண்டுமே ஆபத்தானவை என்பதனால் அறிவுசார் மூலதனமானது இரண்டையுமே அதாவது தகமையினையும், அர்ப்பணிப்பையும், உச்சமாக வைத்துக்கொள்ளும் நடவடிக்கையே அறிவுசார் மூலதனமாகும். இத்தகைய அறிவுசார் மூலதனத்தை உச்சமாக்குவதன் மூலம் வாடிக்கையாளர் நம்பிக்கை, உயர் உற்பத்தித் திறன், இலாபத்தன்மையின் அதிகரிப்பு ஆகியவற்றை அடைந்துகொள்ள முடியும்.

அறிவுசார் மூலதனத்தை கொண்டிருப்பதன் ஊடாக உச்ச நன்மைகளை நிறுவனம் அடைய முடியும். ஏனைய சொத்துக்கள் போல் அல்லாது அறிவுசார் மூலதனத்தின் பெறுமதி தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும். இது பௌதீக வளங்களைப் போல் தேய்வடைவதில்லை. அத்துடன் அறிவுசார் மூலதனத்தின் பண்பிற்கு ஏற்ப ஊழியர்களின் வேலைத்திறன் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும்.

அறிவுசார் மூலதனத்தைக் கொண்டுள்ள ஊழியர்கள் தொண்டர்கள் போல் தன்னலமற்ற சேவையை வழங்க முன் வருவதனால் அர்ப்பணிப்பு பெருகி வருவதுடன் தன்னிச்சையான ஒத்துழைப்புக் கிடைக்கும்.

அறிவுசார் மூலதனத்தின் வழியாகவே முகாமையாளர் உலகளாவிய போட்டி, நுகர்வோரின் அதிகரித்த தேவைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்ய இயலும். அத்துடன் முகாமையாளர்கள் கொண்டிருக்கும் அறிவுசார் மூலதனத்தின் மூலமாகவே நிறுவனத்தின் நோக்கத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஊழியர்களை உருவாக்க முடியும்.

நிறுவனங்களைப் பொறுத்தவரை அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களே ஊழியர்கள் குழுவாக இயங்க வகை செய்யும். இது ஊழியர்களின் உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கு வகை செய்வதாக அமையும்.

## 3.0 தகைமையை அதிகரித்தல்

அறிவுசார் மூலதனத்தில் தகைமையை அதிகரித்தல் என்பது ஒரு முக்கிய பண்பாகும். இதன்படி திறமைகளை வியாபார தந்திரோபாயங்களுக்கு ஏற்ப வரிசைப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் போட்டித்தன்மையானது பல பொறிமுறைகள் ஊடாக வளர்க்கப்பட வேண்டும். பின்வரும் ஐந்து பண்புகளும் அறிவுசார் மூலதனத்தின் தகமையை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும்.

### 3.1 வாங்குதல் - Buy

திறமையான நபர்களை உள்வாங்குதல், தெரிவு செய்தல், ஆகியவற்றைக் குறைப்பதே வாங்குதல் என்பதாகும். இந்நடவடிக்கை புதிய எண்ணங்களை உருவாக்குதல் பழைய கலாசார முறைகளை நீக்கிவிடுதல் என்பவற்றை அடக்கும். புதியவர்களை உள்வாங்குவதன் மூலம் நிறுவனத்திற்கு புதிய சிந்தனை ஆற்றல் கொண்டவர்களை அதிகரிப்பதுடன் புதிய தந்திரோபாயங்களும் உருவாக்கப்பட முடியும்.

### 3.2 கட்டியெழுப்புதல் - Build

முகாமையாளர்கள் நிறுவனத்தில் தொடர்ந்து இருக்கக்கூடியவாறும், ஊழியர்கள் புதிய நுட்பங்களை கற்றுக் கொள்ளக் கூடியவாறும் நடவடிக்கை எடுப்பதே இதுவாகும். வழிகாட்டுதல், பயிற்சியளித்தல் போன்றவற்றுக்காக நிறுவனங்கள் பெருமளவு நிதி வசதிகளை ஒழுங்கு செய்தல் இத்தகைய நிலையை அடைவதற்கே ஆகும். பாரிய நிதிச் செலவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஊழியர்களிடையே புதிய எண்ணங்களை உருவாக்கவும் நடத்தைகளை மாற்றியமைக்கவும் முகாமையாளர்களுடன் இணைந்து பணியாற்றவும் தூண்டும் எனக் கொள்ளப்படுகின்றது.

### 3.3 பெறுப்படல் - Barrow

நிறுவனங்கள் புதிய எண்ணங்கள், உபகரணங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையே இதுவாகும். வெளியில் இருந்து ஆலோசனைச் சேவை (Consultancy Service) பெறுவது இதில் முக்கியம் பெறுகின்றது. நிபுணர்களை வரவழைத்து கருத்துக்களைப் பரிமாறுதல், கருத்துக்களை நடாத்துதல், புதிய வடிவமைப்புக்களை உருவாக்குதல் போன்றவற்றை வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளலே பெறுப்படலாக அமைகின்றது. இந்த நிலையில் பெருமளவான பணச் செலவும், நேர விரையமும் ஏற்படலாம்.

சொந்தமாக எண்ணங்களை உருவாக்கும் திறன் மழுங்கடிக்கப்படலாம். இருந்தபோதும் வெளிநிறுவனங்களது அனுபவங்களை பெற்றுக் கொள்வது அறிவுசார் மூலதனத்தின் விருத்திக்கு அடிப்படையில் அமையும்.

### 3.4 நீக்குதல் - Bounce

நிறுவனங்கள் நியமப் பெறுபேறுகளை அடையாத நபர்களைக் கொண்டிருப்பது நன்மை தரமாட்டாது என்பதனால்

அவர்களை நீக்கி விடுதல் வேண்டும். சில நேரங்களில் ஊழியர்கள் திறமைகளை வளர்க்கவும், புதிய நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவும் தவறி விடுகின்றனர். வேறு சில சமயங்களில் சரியான முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்தத் தவறியவர் களை நிறுவனங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. அதாவது இவர்கள் நிறுவனத்தில் தொடர்ந்திருப்பது பெரும் பாதிப்பைக் கொண்டு வரும் என்பதாகும்.

### 3.5 கட்டுதல் - Bind

பயிற்றப்பட்ட ஊழியர் எல்லா மட்டங்களிலும் நிறுவனங்களுக்கு முக்கியம் ஆவர். இத்தகையவர்களை சிரேஷ்ட முகாமையாளர்களுடன் பழக விடுவதன் மூலம் அவர்களின் திறமையை அறிவது, அணுகுமுறைகளைக் கற்றுக் கொள்வது, தொழில்நுட்ப அறிவைப் பெறுவது போன்றன சாத்தியமாகின்றன. நிறுவனத்தை விட்டு வெளியேறுகின்ற ஊழியர்களை பேட்டி கண்டு அவர்களைத் தொடர்ந்து நிறுவனத்தில் பணியாற்றுவதற்காக தூண்டுவது கட்டுதல் என்பதைக் குறிக்கின்றது. இதன்படி தொழிலாளர் புரள்வை இழிவு மட்டத்தில் வைத்துக் கொள்ள முடியும்.

## 4.0 அர்ப்பணிப்புக்கு எதிராக அழித்தல்
## Commitment Versus Burnout

அறிவுசார் மூலதனத்தை அதிகரிப்பதற்கான இன்னொரு வழியே அர்ப்பணிப்பு என்பதாகும். கூடுதலான அர்ப்பணிப்பினைக் கொண்ட ஊழியர்கள் பொறுப்புக்கள் இல்லாத போதும் நன்றாகப் பணியாற்றுவர். தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும் ஒரு குழுவைப் போல் பெறுபேறுகளைப் பெறமுடியாது. இதன்படி ஊழியர்கள் எவ்வாறு மற்றையவர்களைப்பற்றி உணர்கின்றார்கள். எவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்கின்றார்கள் என்பது கவனிக்கப் படுகின்றது. மூலதனம் அதிகரிப்பால் ஊழியர்களின் பொறுப்புக்கள் குறைந்து விடக்கூடும்.

ஊழியர்களின் பொறுப்புக்களை உயர்த்து வதற்குப் பலவழிகள் பின்பற்றப்பட முடியும். உலகளாவிய போட்டி, வாடிக்கையாளர் நலன், நெகிழும் தன்மை, உயர் கற்றல் செயற்பாடு, கூடிய குழுச் செயற்பாடு, கூடிய உற்பத்தித் திறன் என்பவற்றை ஏற்படுத்தும் பொறுப்பு அவசியமாகின்றது. இந்த அனைத்துச் சவால்களையும் சமாளிப்பதற்கு அறிவுசார் மூலதனமானது ஊழியர்களிடையே உடல், உள எழுச்சிகளை அதிகரிக்க வேண்டியுள்ளது. பெரும்பாலான முகாமையாளர்கள் இவற்றைக் கருத்திற் கொள்ளாது ஊழியர்களிடம் தொடர்ந்து மேலதிகமான செயற்பாடுகளையே எதிர் பார்க்கின்றனர். இதனால் ஊழியர்களிடம் சோர்வுத்தன்மையையும், பொறுப்பற்ற தன்மையும் உருவாக முடியும். எப்பொழுதுமே ஊழியர்களிடம் அர்ப்பணிப்பு குறைவாக இருக்குமாயின் அதற்கான காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். இளம் தொழிலாளர் விரைவாகத் தொழிலில் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் என்பதனால் அதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிறுவனங்களிலே ஊழியர்களது அர்ப்பணிப்பை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும். குறிப்பாக

### i) தேவைகளைக் குறைத்தல் Reduce Demand

ஊழியர்கள் வேறுபட்ட முக்கியத்துவத்தின் அடிப்படையில் தேவைகளைக் கொண்டிருக்க முடியும். இதனால் தேவையற்றவற்றை நீக்கி அவசியமான தேவைகளை மட்டுமே கொண்டிருக்க வகை செய்ய வேண்டும்.

### ii) முதன்மைப்படுத்தல் - Priorities

இதன்படி சில தேவைகள் நீக்கப்பட்டு விடும். ஒரு குழு நல்ல பெறுபேறுகளைப் பெறுமாயின் மற்றைய ஊழியர்களும்

அதனுடன் இணைவதன் மூலம் நல்ல பெறுபேற்றினைப் பெறுவர்.

இதன்படி குழுவிற்கு பயிற்சி வழங்கப்படும் போது மற்றைய ஊழியர்களும் அதில் இணைந்து கொள்வர்.

### iii) வளங்களை அதிகரித்தல் Increase Resources

வளங்களின் பற்றாக்குறையானது ஊழியர் களிடையே அதிருப்தியைக் கொண்டு வரும். இந்த அதிருப்தி அர்ப்பணிப்பினைக் குறைத்து விடும் என்பதால் வளங்களை இயலுமானவரை அதிகரித்தல் அவசியமாகின்றது.

### iv) தந்திரோபாயம் Strategy

ஊழியர்கள் தொலைநோக்குக் கொண்டவர்களாக மாற்றப்படுதல் வேண்டும். தொலைநோக்குக் கொண்ட ஊழியர்களே கடுமையான வேலை செய்யும் மனப்பாங்கையும் அர்ப்பணிப்பினையும் கொண்டிருப்பவர்கள்.

### v) வேலையில் போட்டி Challenging Work

ஊழியர்களிடையே புதிய திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் வேலையில் போட்டியை கொண்டு வருதல் வேண்டும். இதன்மூலம் ஊழியர் அர்ப்பணிப்பு தானாகவே உருவாகும்.

### vi) குழு வேலை Team work

ஊழியர்கள் ஒன்றாகக் கூடி வேலை செய்யும் நிலையை உருவாக்குதல் வேண்டும். குழுக்களாக வேலை செய்தல் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பினை பெரிதும் வளர்க்கின்றது.

### vii) வேலைக்கலாச்சாரம் - Work culture

இது வேலை செய்வதற்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கையாகும். நல்ல வேலைச் சூழ்நிலையில் பணியாற்றும் ஊழியர்கள் அர்ப்பணிப்பினை வளர்த்துக் கொள்வர்.

### viii) இலாபப் பங்கு

நிறுவனங்கள் உழைக்கும் இலாபம் தனியே முதலீட்டாளருக்கு மட்டுமன்றி ஊழியருக்கும் பகிரப்பட வேண்டும். நிறுவனத்தின் இலாப உழைப்புக்கு பெரிதும் பாடுபட்டவர்கள் ஊழியர்களே என்பதனால் அவர்களது அர்ப்பணிப்பை மேலும் உயர்த்த இலாபத்தில் பங்கு பெறுதல் வேண்டும்.

### ix) பயிற்சியும் அபிவிருத்தியும்

ஊழியர்கள் தமது வேலையை திறனுள்ளதாக மாற்றுவதற்கு பயிற்சி மிக அவசியமாகும். இப்பயிற்சியே அவர்களது வேலையைத் திறமையாக மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பு மனப்பான்மையையும் வளர்க்கும்.

### x) ஆள்நோக்கிய தலைமைத்துவம் Concern for people

ஊழியர்களது கௌரவத்தை பேணக்கூடிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். நிறுவனத்தில் இலாப உழைப்பையே கருத்தில் கொள்ளாது ஊழியர் நலனில் அக்கறை காட்டும் நிர்வாக முறைமை அர்ப்பணிப்பை வளர்க்க உதவும்.

### xi) தொடர்பாடல் Communication


ஊழியர்களுடன் தொடர்ச்சியாக செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் சாத்தியமானது அர்ப்பணிப்பினை அதிகரிக்கின்றது. திறனுள்ள தொடர்பாடலைக் கொண்ட நிறுவனங்கள் எல்லாம் ஊழியர் அர்ப்பணிப்பினை உச்ச அளவில் கொண்டிருப்பதனைக் காணமுடியும்.

### xii) தொழில்நுட்பம் Technology

ஊழியர்களது வேலைகளை இலகுவாக்கக் கூடிய தொழில்நுட்பம் புகுத்தப்படுமானால் அது ஊழியர்களது அர்ப்பணிப்பினை உயர்த்தும். இதன்படி புதுமைகளைப் புகுத்துதல் எப்பொழுதுமே ஊழியர்களுக்கான வேலையை இலகுவாக்கி அவர்களிடையே வேலைக்கான அர்ப்பணிப்பினை உயர்த்தும்.




GTZ கட்டடத் திறப்பு விழாவில்



சிலை திறப்பு விழாவில்



டி.எம் சுவாமிநாதன் அவர்களுடன்



பாராட்டுவிழாவின் போது



புலமைப் பரிசில்ப் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்களுடன்




திருமதி சுவாமிநாதன் அவர்களால்
கௌரவிக்கப்படும் போது















அதிபரின் வாழ்வியலில்...

### xiii) கட்டுப்பாடு Control

ஊழியர்கள் எப்படித் தமது வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இங்கு கட்டுப்பாடாகும். ஒவ்வொரு ஊழியரும் தான் செய்ய வேண்டிய வேலையின் அளவை அறிந்து கொண்டார்களாயின் அதுவே அவர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பைக் கொண்டுவரும்.

மேலே கூறப்பட்ட காரணிகள் எல்லாம் ஊழியர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பினை விருத்தி செய்கின்ற காரணிகளாகக் கொள்ளப்படும். ஜப்பானிய முகாமைத்துவம் வேலை நிறைவேற்றத்தில் அதிகம் வெற்றி பெறக் காரணம் அவர்களிடையே தோற்றுவிக்கப்படும் விசுவாசமும் அர்ப்பணிப்புமேயாகும்.

### 5.0 முடிவுரை

அறிவுசார் மூலதனமானது தற்கால மனிதவள முகாமைத்துவத்தில் பிரபலம் பெறுவதாகும். ஊழியர்களிடையே தகைமையும் அர்ப்பணிப்பும் உயருமாயின் அது அறிவுசார் மூலதனத்தை விருத்தி பெறச் செய்யும். எப்பொழுதுமே அறிவுசார் மூலதனத்தின் அங்கமான அர்ப்பணிப்பை விருத்தி செய்ய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். குறிப்பாக நிறுவனத்தை விட்டு வெளியேறுவோர்களிடமிருந்து தகவலைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதேநேரம் குடும்பத்தின் தேவைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்று பூர்த்தி செய்தல் வேண்டும். அத்துடன் பிரதான தீர்மானங்களில் ஊழியர் பங்கு வேண்டும். இவற்றின் அடிப்படையில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு உயர்த்தப்பட முடியும். எனவேதான் அர்ப்பணிப்பையும் ஊழியர் தகைமையினையும் அதிகரிப்பதனால் உருவாகும் மூலதனம் ஒரு நிறுவனத்தில் விருத்தி செய்யப்படுமாயின் அது ஊழியர் நிர்வாகத்தை சிறப்படையச் செய்து விடும். இது நிறுவனங்களின் இலக்கினை அடைவதற்கான மிகச்சிறந்த வழியாக அமைவதுடன் உற்பத்தித் திறனை மிகச் சுலபமாக உயர்வடையச் செய்து விடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### References


1. Quinn J.B. Intelligent Enterprizer, New York Free 1992 pp 70 – 84.
2. Drucker PF, Toward the New Organisation, Sanfrancisco Josser – Bass – 1997. pp 110 – 114.
3. SteWart. T Intellectual Capital, New York, Doubleday Currency – 1997. pp 94 – 97.
4. Ulrichid Greenfied H “From Training and Development to Development old Learning” American Journal of Management Development. Vol I 1995.

# குறள் காட்டும் வழியில் மனித வாழ்க்கை



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழில் எழுந்த இலக்கியங்களில் இன்று முதன்மைபெற்று விளங்குவது திருக்குறளாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய இந்நூல் "உலகப் பொது மறை" என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுள்ளது. அதற்கு திருக்குறள் ஏறக்குறைய 90 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே சான்றாகும். எனவே, உலக மக்கள் யாவரும் பயன் பெறும் வகையில் திருக்குறள் நூலாக்கம் பெற்றிருப்பதும் தெளிவாகிறது. சீர்குலைந்த சமுதாயம் ஒன்றை எவ்வாறு சீர்செய்யலாமென எழுந்த வள்ளுவரின் சிந்தனைத் தெளிவே திருக்குறள் நூலாக்கமாக அமைந்துள்ளது. ஈரடிக் குறள் வெண்பா 1330ம் 133 அதிகாரங்களில் மூன்று பால்களாக நூல் அமைந்துள்ளது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களும் மனித வாழ்வியலுக்கு வழிகாட்டி நிற்கின்றன. திருக்குறள் காட்டும் வழியை இன்றைய மக்கள் உணரும் வகையில் எடுத்துரைக்க இக்கட்டுரை உருவாகியுள்ளது.

### திருக்குறள் தோன்றிய காலம்.

பண்டைத் தமிழர் வாழ்வியலில் சங்க காலம் என்ற இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்பு ஒன்றை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் வகுத்துள்ளனர். அக்காலத்தில் மக்கள் வாழ்வியல் அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அந்த வாழ்வியலும் சீர்கெட்டது. ஓயாத போரும் பரத்தமை ஒழுக்கமும் சமூக சீர்கேட்டை ஏற்படுத்தின. ஒழுக்கம் கெட்ட பண்பாடற்ற ஒரு சமூகம் உருவாகியிருந்தது. இக்காலகட்டத்தில் வள்ளுவர் திருக்குறளை இயற்றினார். முன்னர் எழுந்த இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலை வரையறை செய்து காட்ட முற்படவில்லை. தனிப்பாடல்களிலே மனிதன் வாழ்ந்த விதம் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது. பாடல்களில் அக்கால ஒழுக்கநிலை பாடற் பொருளாக உள்ளடக்கப் பட்டிருந்தது. ஆனால், புறவாழ்வு பற்றிய பாடல்களில் அறிவுரை செய்யும் நிலையும் காணப்பட்டது. எனினும், அப் பாடல்களில் ஒரு மனித வாழ்வியல் முழுமையாகப் பேசப்படவில்லை. எனவே, வள்ளுவர் ஒரு முழுமையான மனித வாழ்வியலைத் தமது நூலில் கட்டமைக்க எண்ணியுள்ளார். அறம், பொருள், இன்பம் என்ற மனித வாழ்வியலுக்குத் தேவையான விடயங்களை விளக்கத் தமது திருக்குறளை இயற்றினார். அறநெறி நின்று பொருளீட்டினால் அது என்றும் நிலைத்து நிற்கும். இன்பமாக வாழ வழிசெய்யும். எனவே, வள்ளுவர் தன் காலத்து மக்கள் வாழ்க்கையைத் தன்னாலான முயற்சியால் சீர்மைசெய்ய முற்பட்டுள்ளார். அதற்கு தன்னுடைய தமிழ் மொழி ஆற்றலையும், பண்டைய இலக்கியப் புலமையையும், கவிதை ஆற்றலையும் நன்கு பயன்படுத்தியுள்ளார்.

### வள்ளுவர் காட்டும் வீடும் வாழ்வும்

வள்ளுவர் தனி மனித வாழ்வியல் பற்றிய வழிகாட்டலைத் தனது நூலிலே முதன்மைப்படுத்தியுள்ளார். இல்லறம், துறவறம் என்ற இரு அற வாழ்வாகப் பாகுபாடுசெய்து

அதனை விளக்கியுள்ளார். அதிலும், இல்லறம் என்னும் பகுதியில் இருநூறு குறள்களில் வீட்டு வாழ்வியலை எடுத்துக்காட்டியுள்ளார். வீட்டு வாழ்க்கைக்கு வள்ளுவர் இட்ட பெயர் "இல்வாழ்க்கையாகும்" இல்வாழ்க்கையில் இல்லாளோடு கூடி வாழும் சிறப்பையே கூறியுள்ளார். இவ்வாழ்க்கையை வள்ளுவர் பின்வருமாறு வரையறைசெய்துள்ளார்.

***"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அ∴தும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"*** (குறள்:-49)

பிறரது பழிப்புக்காளாகாத இல்வாழ்க்கையை வள்ளுவர் உயர்ந்த அறமாகக் காட்டி உள்ளார். உண்மையான அறம் செய்யவேண்டு மென்றால் ஒருவன் இல்வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். துறவிகளுக்கும் வறுமை நிலை அடைந்தவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை வீட்டு வாழ்க்கையிலே செய்ய முடியும். இன்னும் பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என ஐந்து நிலையான கடமைகளை இல்லறத்தான் செய்பவன் என வள்ளுவர் இல்லறத்தானுடைய கடமைகளையும் உள்ளடக்கிக் கூறியுள்ளார். வீட்டு வாழ்க்கை சிறப்பாக நடப்பதற்கு ஒருவன் தன் இல்லாள் மீது அன்புடையவனாகவும், பிறர்க்குப் பகுத்துண்ணும் பண்புடையவனாகவும் இருக்கவேண்டும். இதனால் தவம் செய்பவரைவிட அறத்துடன் கூடிய இல் வாழ்க்கையே மிகச் சிறந்தது எனக் குறள் வழிகாட்டுகிறது.

வீட்டு வாழ்க்கையின் சிறப்புக்கு இல்வாழ்வானுக்குத் துணைநலம் சிறப்பாக அமைய வேண்டுமென வள்ளுவர் கூறியுள்ளார். மனைக்குரிய மாண்புடைய பெண்ணொருத்தியை அவன் துணையாகப் பெற்றால் வாழ்வு சிறப்பாக நடைபெறும். "வாழ்க்கைத்துணை நலம்" எனும் அதிகாரத்தில் வீட்டு வாழ்க்கை சிறப்புறுவதற்குப் பெண்மையின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதை வள்ளுவர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

***"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு."*** (குறள்:-60)

இக்குறள் வீட்டு வாழ்க்கையின் தேவையை மட்டுமன்றி சமூகக் கட்டமைப்பு சீர்குலையாதிருப்பதற்கும் வழி சொல்கிறது. வீட்டு வாழ்க்கை என்பது வெறுமனே ஆணும் பெண்ணும் கூடி இன்பம் அனுபவிக்கின்ற வாழ்க்கையன்று. அந்த வாழ்க்கை ஒரு சமூக ஒருங்கிணைப்புக்கு உதவுவதாக அமையவேண்டும். எனவே, மனிதனுடைய கடமைகளைத் தொடரக் குழந்தைப்பேறு இன்றியமையாதது. மனிதனுடைய வீட்டு வாழ்வில் ஆணும் பெண்ணும் ஒன்றாய்க் கூடி ஓர் ஒழுங்கான வாழ்வை மேற்கொள்வதற்கும் இல்லறக்கடமைகளை இனிதே செய்வதற்கும் மழலைச் செல்வம் தேவை. இதனை வள்ளுவர் வரையறை செய்து கூறுவதற்கு ஒரு முக்கிய காரணமும் உண்டு. ஆணும் பெண்ணும் உளவியல் நிலையில் பண்படுவதற்கு மக்கட்பேறு நன்குதவும். உடல்நிலையிலும் வளர்ச்சி ஏற்படும். குழந்தைப் பேறின் பின்னர் தாய், தந்தை, மகன் என்ற தொடர்பு நிலையும் மனித விழுமியம் மேம்பட உதவுகிறது.

"மங்கலம்" என வள்ளுவர் கூறுவது ஒரு தனித்துவமான சிறப்பு நிலையைக் குறிப்பதாகும். இச்சொல்லுக்கு உரையாசிரியர் பரிமேலழகர் "நன்மை" எனப் பொதுப்படப் பொருள் கூறியுள்ளார். ஆனால், இச்சொல் ஒரு மகிழ்வையும் பூரிப்பையும் உள்ளடக்கிய பொருளுடையது. அட்டமங்கலப் பொருட்கள் என சில பொருட்கள் சிறப்புப்பெயர் பெற்றுள்ளன. எனவே, மணம் முடித்த ஒரு பெண் மங்கலமானவள் என வள்ளுவரால் சிறப்பிக்கப்பட்டிருந்ததை அறியமுடிகிறது. "புதல்வரைப் பெறுதல்" எனும் அதிகாரம் வீட்டு வாழ்க்கை செம்மையாக நடைபெற்றதை விளக்குவதாக அமைந்துள்ளது.

***"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற."*** (குறள்:-61)

"ஒருவன் பெறும் பேறுகளில் அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுவது அல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை" என உரையாசிரியர் இக் குறளுக்குப் பொருள்

கூறியுள்ளார். இன்னும், பரிமேலழகர் "அறிவறிந்த வென்றதனான் மக்களெனும் பெயர் பெண்ணொழித்து நின்றதென" ஒரு குறிப்புரையும் செய்துள்ளார். மனைமாட்சியைச் சிறப்பித்துப் பேசிய வள்ளுவர் பெண்ணொழிந்த மற்ற ஆணையே மக்கள் எனக் கருதினார் எனக் கூறுவது பொருத்தமன்று. அக்காலத்தில் பெண்ணுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவளது இயல்பான அறிவு வீட்டு வாழ்வை மேம்படுத்தும் ஆற்றல் பெற்றது என்பதையே வள்ளுவர் "வாழ்க்கைத்துணைநலம்" எனும் அதிகாரத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். வள்ளுவர் வீட்டு வாழ்வில் தாய், மகன், தந்தை எனும் மூவரையுமே குறிப்பிட்டிருப்பதால் உரையாசிரியர் இவ்வாறு பொருள்கொள்ள முற்பட்டார் போலும். ஆனால், வீட்டு வாழ்க்கையில் மகன், தாய், தந்தை மூவருடைய கடமையையும் வள்ளுவர் வரையறை செய்திருப்பது உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவருக்கும் ஏற்றதாக உள்ளது. "புதல்வரைப்பெறுதல்" எனும் அதிகாரத்தில் முதலில் தந்தையின் வழிநடத்தலைக் கூறுகிறார். அடுத்து தாயின் மகிழ்ச்சியை விளக்குகிறார். ஈற்றில், மகன் கடமையை வரையறைசெய்கிறார். மனித வாழ்வியலுக்கு வள்ளுவர் காட்டும் சிறப்பான வழிகாட்டல் இதுவாகும்.

மேலும், இந்த வீடும் அங்கு நடக்கும் வாழ்வும் மிகச் சிறப்படையவேண்டுமாயின் சில நல்ல குணவியல்புகள் இருக்கவேண்டுமென வரையறைசெய்துள்ளார். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் எனும் சிறப்பான குணவியல்பால், வீட்டோடு தொடர்புடைய பிறரோடும் மகிழ்வாக வாழமுடியும். இவற்றோடு, கீழ்வரும் நற்குணவியல்புகளையும் தனி அதிகாரங் களாகப் பேசுகிறார்.

1. செய்ந்நன்றியறிதல்- தமக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை.
2. நடுவுநிலைமை- பகை, நொதுமல், நட்பு எனும் மூன்று நிலையிலும் அறத்தின் வழுவாது நிற்றல்.
3. அடக்கமுடைமை- மெய், மொழி, மனம் தீநெறிக்கண் செல்லாது நிற்றல்.
4. ஒழுக்கமுடைமை- தத்தம் நிலைக்குரிய ஒழுக்கத்தினை மேற்கொள்ளல்.
5. பிறனில் விழையாமை- காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை.
6. பொறையுடைமை- பிறர் செய்யும் செய்கைகளைப் பொறுத்தல்.
7. அழுக்காறாமை- மனதில் அழுக்கில்லாதிருத்தல்.
8. வெ.்.காமை- பிறர்க்குரிய பொருளைத் தானடைய விரும்பாமை.
9. புறங்கூறாமை- காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்துரையாமை.
10. பயனில சொல்லாமை- பயனற்ற சொற்களைச் சொல்லாமை.
11. தீவினையச்சம்- பாவங்கள் செய்ய அஞ்சுதல்.
12. ஒப்புரவறிதல்- உலக நடையினை அறிந்து செய்தல்.
13. ஈகை- வறியோர்க்குக் கொடுத்தல்.

இப்பதின்மூன்று அதிகாரங்களிலும் கூறப்பட்ட பண்புகள் வீட்டு வாழ்வு சிறப்பாக நடக்க உறுதுணையாய் அமையும் என எண்ணி வள்ளுவர் வரையறை செய்துள்ளார். குடும்ப வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் கடைப்பிடிக்கவேண்டிய பொதுவான பண்புகள் என எல்லாவற்றையும் கொண்டாலும் "பிறனில்விழையாமை" எனும் பண்பு ஆணுக்கே தனித்துவமாகக் கூறப்பட்டுள்ளது. "ஒழுக்கமுடைமை" எனும் சிறப்பான குணநலம் உள்ளடக்கப்பட்டபோதும் "பிறனில் விழையாமை" என்ற அதிகாரத்தை வரையறைசெய்யவேண்டிய தேவை வள்ளுவருக்கு இருந்துள்ளது. இல்லறம் செய்ய ஒரு வாழ்க்கைத்துணையைப் பெற்ற பின்னரும் பிற பெண் மீது நாட்டம் கொள்ளும் ஆண்களும் பலர் இருந்தனர். அதனால் வள்ளுவர் அதை விளக்க முற்பட்டுள்ளார்.

*"பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு."* (குறள்:-148)

இக்குறளில் "பிறன் மனை" என்ற சொல் இரு நிலைக்குட்பட்ட பொருள் தருவதாக உள்ளது. 1.பிறனுக்கு மனைவியாகப்பொகும் இளம் பெண்ணை விரும்பல், மற்றது, பிறன் ஒருவனுக்குரிய மனைவியை அடைய விரும்பல். புறப் பகையை அடக்கும் ஆற்றல் படைத்த ஆண்கள் அகப் பகையாகிய காமத்தை அடக்கும் ஆற்றலற்றிருப்பதை வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதனால்தான் அடக்கும் ஆற்றல்பெற்ற ஆண்மையைப் "பேராண்மை" எனக் குறிப்பிட்டுள்ளார். வீட்டு வாழ்க்கையின் சிதைவுக்கு ஆண்களே பொறுப்பு என்பதையும் கூறுகிறார். வள்ளுவர் தன்னுடைய காலத்தில் வீட்டு வாழ்க்கையைச் சீரமை செய்ய முற்பட்டமைக்கு ஆண்களின் ஒழுக்க சீர்கேடும் ஒரு காரணமாக இருந்துள்ளது.

இல்லறவியலில் அமைக்கப்பட்டுள்ள "புகழ்" என்னும் அதிகாரம் வீட்டு வாழ்வியலின் உச்சமான சிறப்பைப் புலப்படுத்துவதாயுள்ளது. மனிதன் இல்லற வாழ்வை அற வாழ்க்கையாக மேற்கொண்டால் இறந்த பின்னும் புகழோடு வாழும் பேற்றைப் பெறுவான். உரையாலும் பாட்டாலும் உயர்த்தப்படுவான். வள்ளுவர் காலத்துக்கு முன்னரும் மனு போன்றோர் இல்லறம் பற்றிய நல்ல கருத்துக்களைத் தமது நூல்களிலே எழுதியுள்ளனர். வள்ளுவர் மனித மனங்களைப் பண்படுத்துவதில் மிகவும் கவனமாக இருக்கிறார். பல்வேறுபட்ட நிலைகளில் மனிதனின் பலவீனங்களை உற்றுணர்ந்து அதற்கேற்ற வகையில் கருத்துக்களைக் குறள் வடிவிலே தந்துள்ளார். மனிதனுடைய வாழ்வு உயர்ந்ததாக இருந்தால் அது அவனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்திவிடும் என வள்ளுவர் விளக்கியுள்ளார்.

வள்ளுவர் வீட்டு வாழ்வை மேம்படுத்தக் கூறிய வழிகள் எக்காலத்துக்கும் எம்மொழியினர்க்கும் எந்நாட்டவர்க்கும் பொருந்துவன. ஒழுக்கமே மனித வாழ்வின் சிறப்புக்கு அடித் தளம் என வள்ளுவர் விளக்கியுள்ளார். இன்று மனித வாழ்க்கை சீர்கெட்டுவிட்டது எனப் பல ஆய்வுகள் நடக்கின்றன. அவை யாவும் தேடிய வாழ்வியல், வள்ளுவர் குறட்பாக்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இல்லறம், இல்வாழ்க்கைதான் என்று சிறப்பாக விளக்கிக் கூறியவர் வள்ளுவரே. அதனால் அவர் துறவறம் பற்றியும் ஒரு பகுதியை அமைத்து துறவு பற்றிய கருத்துக்களையும் விளக்கியுள்ளார்.

### வள்ளுவர் காட்டும் துறவு வாழ்க்கை

வள்ளுவரது துறவறவியலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு அமைந்துள்ளன.

1. **அருளுடைமை:** எல்லா உயிர்கள் மேலும் செலுத்தும் கருணை.
2. **தவம்:** மனம் பொறி வழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருங்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும், பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்பல்.
3. **கூடாவொழுக்கம்:** தாம் விட்ட காமவின்பத்தை உரனின்மையிற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாத தீயவொழுக்கம்.
4. **கள்ளாமை:** பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக்கருதாமை.
5. **வாய்மை:** மெய்யினது தன்மை.
6. **வெகுளாமை:** சினத்தை செய்வதற்குக் காரணம் ஒருவன்மாட்டுளதாயவிடத்தும் அதனை செய்யாமை.
7. **இன்னா செய்யாமை:** தனக்கு ஒரு பயன் நோக்கியோ செற்றம் பற்றியோ சோர்ந்து இன்னாதவற்றைச் செய்யாமை.
8. **கொல்லாமை:** கொல்லுதலைச் செய்யாமை.
9. **நிலையாமை:** தோற்றமுடையன யாவும் நிலையுதவிலவாம் தன்மை.

10. **துறவு-** புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உள்ளதாம் பற்றை விடுதல்.

11. **மெய்யுணர்தல்:** பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விவரீத ஐயங்களாலன்றி உண்மையாலுணர்தல்.

12. **அவாவறுத்தல்:** அவாவை அறுத்தல்.

வள்ளுவர் காட்டிய வீட்டு வாழ்வை வாழ்ந்த பின்னரே துறவு வாழ்க்கையை அக்காலத்தில் ஆண்கள் மேற்கொண்டனர். ஆனால், அந்த வாழ்விலும் சீரமியம் தேவைப்பட்டுள்ளது. சிறந்த இல்லறத்தை மேற்கொள்வதற்குரிய வரையறைகள் செய்யப் பட்ட பின்னரும் இல்லறத்தை முடித்துத் துறவு மேற்கொள்வோருக்கும் வரையறைகள் செய்யவேண்டிய நிலைமை இருந்துள்ளமையை மேற்காட்டிய அதிகாரங்களில் உள்ள குறட்பாக்கள் விளக்கி நிற்கின்றன. வீட்டு வாழ்க்கை வாழும் மனிதன் சிறந்த பண்பாளனாக வாழ்க்கையை முடித்து துறவு வாழ்க்கைக்குச் செல்லும் நிலையில் சில சிக்கல்கள் இருந்துள்ளன. துறவு வாழ்வில் மனிதன் தன்னைச் செப்பஞ்செய்பவனாக இருக்கவேண்டும். வீட்டு வாழ்வில் அன்புடனும் விருந்தோம்பலுடனும் இனியவை கூறி எல்லோரையும் பேணவேண்டும். ஆனால், துறவு வாழ்வில் மனிதனுடைய மனதிலே எந்தக் களங்கமும் இருக்கக்கூடாது என வள்ளுவர் வரையறைசெய்துள்ளார். துறவு வாழ்க்கைக்குச் சென்ற பின்னரும் காம மயக்கம் தீரா நிலை ஏற்படும். எனவே, பிறர் மனை நோக்காத பேராண்மை உடையவனும் பிற்காலத்தில் மனம் திரிந்ததை வள்ளுவர் கண்டுள்ளார்.

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்."(குறள்:-280)**

தவம் செய்பவர்களுடைய வேடப் புனைவுகளை வள்ளுவர் இங்கு குறிப்பிடுகிறார். தலை மயிரை மழித்தலும் சடையாக்கலும் போன்ற வேடங்கள் நல்லொழுக்கமுடைய துறவிகளுக்குத் தேவையற்றவையாகும். மேலும் களவு, கொலை, கோபம் எனும் குணங்களைத் துறவு வாழ்க்கையில் முற்றாக நீக்கிவிடவேண்டும். பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமல் இருக்கவேண்டும். துறவு வாழ்க்கைக்கு ஆருளுடைமையை வள்ளுவர் ஒரு சிறந்த குணவியல்பாக வரையறைசெய்துள்ளார்.

**"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள."** (குறள்:- 241)

அருளால் வரும் செல்வம் என்பது உயிர்களை ஓம்பி அவ்வறத்தில் மேம்பட்டு நிற்றல் எனப் பரிமேலழகர் உரை விளக்கம் செய்துள்ளார். அச்செல்வம் கண்ணுக்குப் புலப்படாதது. ஆனால், பொருட்செல்வமோ இழிந்தவர்களிடமும் இருக்கும். வீட்டு வாழ்க்கைக்குப் பொருட்செல்வமே இன்றியமை யாதது. ஆனால், துறவு வாழ்க்கைக்கு அருள் சேர்ந்த நெஞ்சமே போதுமானது. அருள் உடையவர்க்கு இம்மையில் ஒரு துன்பமும் உண்டாகாது. பொருட்செல்வமுடையவர் ஒரு காலத்தில் செல்வம் பெற்றுச் சிறந்திருப்பர். அதை இழந்தும் வருந்துவர். ஆனால், அருள் உடையவருக்கு இந்நிலை ஏற்படாது.

உணவு விடயத்தில் துறவு வாழ்க்கைக்கு வள்ளுவர் வரையறை செய்துள்ளார். அதில் முக்கியமானது புலால் உண்ணாமையாகும். அருளுடையவர்க்கு கொலை செய்யும் எண்ணம் ஏற்படாது. ஓருயிரையும் கொல்லாதவனையும், புலால் உண்ணாதவனையும், எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்கிறார். இங்கு துறவு வாழ்க்கையை இல்லற வாழ்வைவிடச் சிறப்பித்துச் சொல்ல முயல்கிறார். இல்லற வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்தவன் வானத்தில் உறையும் தெய்வங்களுடன் வைத்து மதிக்கப்படுவான். ஆனால், புலால் உண்ணாத துறவு வாழ்க்கையை மேற்கொண்ட ஒருவனை எல்லா உயிர்களும் கடவுளாக மதித்து வணங்கும் என்கிறார்.

ஐம்புலன்களையும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தி வாழும் வாழ்க்கையே துறவாகும். "துறவு" என்னும் அதிகாரத்தில்

பத்துக் குறள்களில் இதனைச் சிறப்பாக விளக்கியுள்ளார். இல்லற வாழ்வின் சிறப்பை "இல்வாழ்க்கை" எனும் பகுதியில் கூறிய வள்ளுவர் துறவு வாழ்வின் சிறப்பை "துறவு" எனும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

எனவே, தொகுத்து நோக்கும்போது மனிதனுடைய இருநிலைப்பட்ட வாழ்வியல் பற்றி வள்ளுவர் வரையறைசெய்வதற்குக் காலத்தின் தேவையும் இருந்துள்ளது. வீட்டு வாழ்வு ஆணும் பெண்ணும் இணைந்து உலக இன்பங்களை அறவழி நின்று அனுபவிப்பதை வரையறைசெய்துள்ளது. துறவு வாழ்வு இல்லறத்தை விட்டுத் துறந்து செல்ல எண்ணும் மனிதனுக்கு ஒரு வாழ்வியலை வரையறைசெய்வதாக உள்ளது. பெண்கள் இல்லறம் என்ற நிலையில் ஒரு வீட்டு வாழ்வியலை மட்டும் வாழ்ந்தனர். ஆனால், ஆண்கள் துறவு பூண்டு வாழும் வாழ்வியலும் இருந்துள்ளது. வள்ளுவர் காலத்தில் பெண்கள் துறவு பூணவேண்டிய தேவை இல்லை என்பதே அவருடைய கருத்தாக இருந்தது. பரத்தமை ஒழுக்கம் காரணமாக ஆணின் வாழ்வியலில் ஏற்பட்ட சிக்கலுக்குத் துறவே ஒரு தீர்வாக அக்காலத்தில் கருதப்பட்டது. ஆனால், அதிலும் மனக்கட்டுப்பாடற்ற ஆண்களின் செயற்பாட்டால் துறவை வலுப்படுத்தவேண்டிய நிலையும் ஏற்பட்டது. சிலப்பதிகாரத்தில் பரத்தமையால் சிதைந்த இல்லற வாழ்வியலைச் சீர்செய்யப் பெண் துறவையே இளங்கோ கூறிச்சென்றார். அதனை வள்ளுவர் கருத்திற்கொள்ளவில்லை. எனவே, இல்லறத்தின் சிதைவுக்கு அவர் ஆணையே காரணமாகக் கொண்டு ஆணுக்கென ஒரு துறவு வாழ்க்கையை வரையறை செய்துள்ளார். வள்ளுவருடைய துறவு வாழ்வுககான வரையறைகளில் சமண, பௌத்த மதங்களின் கருத்துக்களும் உந்து சக்திகளாக இருந்திருக்கலாம். எனவே, வள்ளுவருடைய குறட்பாக்கள் மனித வாழ்வியலில் ஏற்படும் சிக்கல்களை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு இல்லறவியற் கருத்துக்களை முதலிலும் அவற்றையடுத்துத் துறவு வாழ்வியற் கருத்துக்களையும் தாங்கி நிற்கின்றன. வள்ளுவரின் சிந்தனை மனிதகுலம் உள்ளளவும் பொருந்துவதாக உள்ளது. தற்காலத்தில் இல்லறமும் துறவறமும் இடர்ப் படும் நிலைகளையும் காண்கிறோம். எனவே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே தொலை நோக்குடனும் மனித உணர்வுகளை மதிப்பிட்டும் வள்ளுவர் குறள்களை இயற்றியமை அவரது சிறப்பியல்பாகும்.

வலிமையே மகிழ்ச்சிகரமான நிரந்தரமான
வளமான அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

**-சுவாமி விவேகானந்தர்-**

# பக்தி இயக்கமும் சமுதாய மறுமலர்ச்சியும்

பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன்,
MA, Ph.D இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனித வாழ்வு சவால்கள் நிறைந்தது. திட்டமிடப்பட்ட உயர் நோக்கம் கொண்ட வாழ்வு வெறும் புலன் இன்பங்களை மட்டுமன்றி அறிவும், உணர்வும் கலந்து விளங்கும் வாழ்க்கை நெறியாகும். உணர்வுகள் அறவொழுக்க நெறிகளாகி வாழ்வினை நயக்கத்தக்க நாகரிக முடைய வாழ்க்கையாக தூய அன்பினால் நிலைபெறச் செய்தல் வேண்டும். மானிட வாழ்வினை வாழ்வாங்கு வாழும் முறையில் வழிப்படுத்தவே சமயங்கள் யாவும் தோன்றின. சமய மார்க்கங்கள் வெற்றியும் பெற்றுள்ளன. தோல்விகளையும் சந்தித்திருக்கின்றன. இதனை

*"தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும்*
*தருமம் மறுபடி வெல்லும்"*

எனப் பாரதியார் மனிதர்கள் காணும் துன்பங்களுக்கு சமாதானம் கூறினார். அறிவியல் தருகின்ற அறிவுக்கு அனைவரும் ஈடுகொடுக்கமுடியாது. அறிவியலால் மனிதகுலம் ஆக்கங்களை விட அழிவுகளை சந்தித்ததே அதிகமாகும்.

வாழ்வினைச் சைவசித்தாந்தம் அணுகும்முறை அறிவுக்குகந்ததாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும், நல்லெண்ணங்களின் தூண்டு கோலாகவும், நடைமுறைக்கு இசைவாகவும் அமைவதாகும். இயற்கை யோடிசைந்த வாழ்க்கை நெறியினைச் சித்தாந்தம் வரவேற்கின்றது. ஞானமாகிய பூசையானது தூய அன்பு வழிப்பட்டதாகும். இம் முறையில் பல்லவர்கால நாயன்மார்களும், பெரியபுராண மெய்யடியார்களும், சித்தர் முதலிய மறைஞானிகளும் அன்பு நெறி எனப்படும் "பக்தி நெறியினை" வாழ்வின் ஒளிவிளக்காக ஏற்றி வைத்தனர். சவால்களும் துயரச் சுமைகளும் நிறைந்த இருளான வாழ்விலும் வழிகாட்டும் ஒளியாக வழிப்படுத்தும் நெறியாக அடியவர்கள் தொடக்கி வைத்த பக்தி நெறி பேரியக்கமாக வளர்ந்து சமுதாயத்திலே அற்புதமான காரியங்களை அன்பினால் சாதிக்க முடியும் என உறுதி செய்தது.

தென்தமிழ் நாட்டிலே பக்தி இயக்கம் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் பேரியக்கமாகச் செயற்பட்டது. அவ்வாறு மனித சமுதாயத் திற்கு பக்தி நெறி நின்று செயற்கரிய சாதனைகளைச் சாதித்த மெய்யடியார்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் எனச் சிறப் புப் பெற்றனர். நாயன்மார்கள் அறுபத்து மூவராகவும், ஆழ்வார்கள் பன்னிருவராகவும் ஒன்பது பேர் தொகையடியார்களாகவும் காணப் படுகின்றனர். ஞானநெறி நின்ற மாணிக்கவாசகரும் இவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஞானியாவார். இறைவன் மேல் வைத்த அன்பினாலும் அழியாத நம்பிக்கையினாலும் பக்தி நெறியில் நின்று செயற்கரிய தியாகங் களையும். தொண்டுகளையும், இவர்கள் சாதித்துக்காட்டினார்கள். குறிப்பாக கண்ணப்பர், சிறுதொண்டர், இயற்பகையார், மெய்ப்பொருள் நாயனார், திருநீலகண்டர் போன்றோரது செயற்பாடுகள் பக்தி நிலையின் உன்னத சிகரங்களாகப் பேசப்படுவனவாகும்.

பக்தி நெறியினை அறிமுகப் படுத்தியவர் சீரிய சிறப்பு வாய்ந்த பெண்ணடியாரான காரைக்காலம்மையாராவர். அதனை சமுதாயத்திற்கு எடுத்துச்சென்ற பெருந்தொண்டர் அப்பர் சுவாமிகளும் இளந்தொண்டர் சம்பந்தப்பெருமானுமாவார். திருத்தொண்டர்

தொகையினை வழங்கியதன் மூலம் சுந்தரர் ஓர் வரலாற்று ஆசிரியராகவும் தன் அனுபூதி நிலையில் "அன்பு" ஒன்றினால் மட்டுமே அரும்பெரும் செயல்களை உருவாக்க முடியும். என வாழ்ந்து காட்டிய மாணிக்கவாசகரும் மனித வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளை ஒரு விஞ்ஞானியாகவும் மெய்ஞானியாகவும் விளங்கி ஆற்றுப்படுத்திய பாங்கு அளவிடற்கரியது.

பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் அரசியல் ஆதிக்கம், அறிவாராய்ச்சி ஊடாக மதிப்பீடு என்பவற்றைக் கொண்டிருந்தாலும் பொதுமக்கள் மத்தியில் அக்காலம் உலகியல் வாழ்வுக்கு உகந்தனவாக விளங்கியவை எனக்கூறுவது கடினமே.

சமண, பௌத்த சமயத்துறவிகள் மக்களோடு, மக்களாக வாழ்ந்து சமயங்களில் காணப்பட்ட பிற்போக்கான வழிபாட்டு முறைகளையும், மூடப்பழக்கவழக்கங்களையும் கண்டித்தனர்.

கல்விக்கூடங்களை அமைத்து அறநெறிச் சிந்தனைகளை புகுத்தினர். அத்தகைய அறிவுபூர்வமான சிந்தனை வளர்ச்சியில் இறைவனை நினைக்கும் அன்புநிலை பின்னடைவு பெற்றது. அத்தகையதொரு சூழலில் தான் திருவள்ளுவரும் திருக்குறளை எழுதிய காலம் அமைந்தது.

முழுமையான வாழ்வின் மேம்பாடுகட்கு இறையுணர்வும், அற உணர்வும், அறிவுணர்வும் அவசியம் என்பதற்குத் திருக்குறளில் கால் கோளிட்டவர் திருவள்ளுவராவார். குறள் கூறும் அறத்துப்பால் மட்டுமல்ல, பொருட்பால், காமத்துப்பால் என்பனவும் உலக வாழ்வின் இனிமை, உயர்வு, முழுமை பற்றியும் அவற்றிற்கு கடவுளுணர்வு இன்றியமையாதது என்பதனை முதற்கண் கடவுள் வாழ்த்திலும் அமைத்துக் கொடுத்தார். எனவே சமண, பௌத்த மதங்கள் செல்வாக்கிழந்ததுடன் காரைக்காலம்மையார் முதலாழ்வர் மூவர் என்போரது அரும் பெரும் செயலாற்றலினாலும் ஆன்மீக ஞானத்தின் விழிப்புணர்வாலும் இவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பக்திநெறி மக்களியக்கமாக பெருவடிவெடுத்தது. அத்துடன் மக்கள் வாழ்விலே பெரும் மறுமலர்ச்சிகளை இறைவன் மேற்கொண்ட அன்புநெறி ஒன்றினாலேயே சாதிக்கமுடியும் எனக்காட்டும் பக்திப்பேரியக்கம் அடுத்துவரும் காலங்களில் எழுச்சி பெறமுடிந்தது.

உயிர்கட்கு நலம் தரும் அன்பும், அறிவும் இயங்கும் தன்மையுடையவை. அவற்றினை தொழிற்படுத்துவதன் மூலமே நிலையான மனதில் மேபாட்டு வளர்ச்சியினை முறையாக உருவாக்க முடியும். சமய நெறியின் சீலம், மக்கள் வழ்வு நலம் காக்கும் பண்பு என்பன ஓயாது தொழிற்படுவதில்தான் சமய வாழ்வு அமைந்துள்ளது. சமய நிலையில் நின்று மக்கட் கூட்டமானது நலமடைதற்கு திருவருட் சிந்தனையுடன் செயற்படுத்தலே தொண்டு நெறியாகும்.

*"தொண்டலாது உயிர்க்கு ஊதியமில்லை"*

என்பது அப்பரடிகள் வாக்கு அதன் வழி நாவுக்கரசர் பக்தி இயக்கத்திலே "தொண்டர்" என்ற நிலை நின்று தொழிற்பட்டவராவார். சமண சமயத்திற்கு சென்று மீண்ட உள்ளத்தாழ்வுணர்வு அப்பரடிகளைத் தலைமைப் பண்பு பற்றிச் சிந்திக்க இடமளிக்கவில்லை எனலாம். அவர் ஓர் உழவாரப்படையாளியாகவே அன்பு நெறி நின்று திருக்கோயில்கள் வாயிலாகச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அத்திவாரமிட்டார். எத்தொழிலை எவர் செய்தாலும் அன்பு நெறியில் செயற்படுவாரானால் அவர் இறைநிலையடைய அவை தடையாகதென சமூகத்தடைகளை தொண்டு நெறியாலே உடைத்தெறியும் ஆன்மீக பலம் பெற்றிருந்தார்.

**"....அங்கமெலாம் குறைத்தொழுகு**
**தொழுநோயராய்**
**ஆவுரித்தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில்**
**அவர்கண்டீர்நாம் வணங்கும் கடவுளாரே"**

என்ற அப்பரின் பாடலடிகள் அவரது சமுதாய மறுமலர்ச்சிக்கான சிந்தனைகளை இவ்வாறு வெளிப்படுத்துகின்றன.

சமகாலச் சமூகத்தின் முரண்பாடு அவை தொடர்பான மனித நேயச் சிந்தனைகளையும் கூட நாயன்மார்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை.

*"சாத்திரம் பேசும் சழுக்கர்காள்*
*கோத்திரம் குலமும் கொண்டென் செய்வீர்"*

என்ற அடிகளில் சமகால சாதிப் பிரிவுகளை நோக்கிய கண்டனங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார். "தொண்டர் குலமே தொழுகுலம்" என்பதே பக்தி நெறியார்களின் தாரகமந்திரமாக விளங்கியது. பொய்மையைப் பேணுவோர் செல்வம் படைத்தவரானாலும் அவர்களை பக்தியாளா புறக்கணிக்கத் தயங்கவில்லை.

*"தம்மையே புகழ்திச்சை பேசினும்*
*சார்பினும் தொண்டுர் தருகிலாப்*
*பொய்மையைாளரைப் பாடாதே எந்தை*
*புகலூர் பாடுமின்"*

என்ற சுந்தரமூர்த்திநாயனாரது பாடல்களும் சமுதாய புரட்சியில் தகுதியற்றோரைப் புகழ வேண்டாமென்ற எதிர்ப்புணர்வைக் கொண்டிருந்தது.

பக்தி இயக்கம் சார்ந்த மெய்யடியார்கள் சாதி வேறுபாடுகள் பாராட்டாத அன்மீக்குலம் சார்ந்தவர்கள். எனவே அவர்கள் தமது சிந்தையில் சிவனை நிறுத்தாது சாத்திரப் பெருமையும் குலபெருமையும் கொண்டாடுவது பெருந்தவறு எனத் திருக்குறுந்தொகை பேசியது. இவ்வாறு சமுதாய மறுமலர்ச்சி பற்றிச் சிந்தித்த அப்பரடிகளது கடுங்கோபம், சீற்றம், கண்டனம் என்பவற்றை தனது பாடல்களில் வெளிப்படுத்தி நின்றே சீர்திருத்தம் மேற்கொண்டார்.

சம்பந்தப் பெருமானின் பக்தி இயக்கச் செயற்பாடுகள், சமுதாய சீர்திருத்த சிந்தனைகள் என்பவற்றை நோக்கும்போது அவர் பக்தி மறுமலர்ச்சி இயக்கத் தலைவராகவே தம்மை வெளிப்படுத்தி நின்றமை புலனாகும். அவரது பதிகங்களில் அவரது அளுமையினை, தலைமைப் பண்பினை, தெளிவாக வெளிப்படுத்தியதோடு *"ஆணைநமதே"* எனக் கட்டளையிடும் பாங்கிலும் செயற்பட்ட தன்மையினைக் காணமுடியும். சம்பந்தரிடம் அப்பரடிகளைப் போல் கண்டிக்கும் பாங்கு காணப்படவில்லை. ஆனால் சமுதாயத்தில் தீமைகளைக் கண்டிக்கும் போக்கினை சமண பௌளத்தசமயங்களைக் கண்டிக்கும் பாணியில் வீறுபெற்றுள்ளமையைக் காணலாம். அப்பர் சமணரது கொடுமைகளைச் சகிப்புத்தன்மையால் வென்றார். ஆனால் சம்பந்தர் அவர்களுடன் போராடி வாதங்கள் பல செய்து வென்றவராவார்.

சம்பந்தரும் சாதி வேறுபாடுகளைக் களைத்தெறிந்து சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தியவர். திருநீலகண்டருடன் தோழமை கொண்டு தாம் செல்லும் இடமெல்லாம் அவரை அழைத்துச் சென்று உடன் யாழ் வாசிக்கச் செய்தவர். பாணரின் மனைவியான மதங்கசூளாமணி அம்மையாரை மட்டுமே அடியார் கூட்டத்தில் அக்காலம் பெண் பாலராகக் காணலாம். திருநீலகண்டரை அந்தணரது அக்கிகாரம் வரை உடன் அழைத்தச் சென்று சிவப்பிராமணர்களின் வரவேற்பையும் விருந்தோம்பலையும் பெற்றுக்கொடுத்தவர் சம்பந்தராவார். இச்சீர்திருத்த உணர்வினை பக்தி இயக்கத்தின் மறுமலர்ச்சி நோக்காக சேக்கிழார் பெருமான் பாடினார். (பெரியபுராணம், 2036, 2082) திருநீலகண்ட யாழ்ப்பாணர் மூலம் திருக்கோவில்களில் தீண்டத்தகாதார் எல்லோரையும் ஆலயப் பிரவேசம் செய்யவைத்து சம்பந்தர் பெரும் புரட்சியுடன் கூடிய சமூக மறுமலர்ச்சிக்கு அன்றே வித்திட்ட சாதனையாளராக விளங்கினார். திரு.வி.கல்யாணசுந்தரரும்

கலப்புமணம், உடன் உணவு அருந்துதல், பிராமணர் அல்லாதோரை குருவாக மதித்தல், எவராயினும் திருவேடம் தரித்தவர்களை சிவமாக வழிபடல் என்பன போன்ற செயற்பாடுகள் இங்கு குறிப்பிடத் தக்கது.

கலப்பு திருமணங்களுக்கும் அக்காலத்தில் இடமளிக்கப்படவில்லை அத்தகைய சைவ சூழலில் பக்தி இயக்கத்தினால் அன்பு நெறிக்கு முதன்மை கொடுத்து சாதி மீறித்திருமணம் செய்து ஆதிசைவராகிய சுந்தரர் உத்திர கணிகையர் குலம் சார்ந்த பரவையாரையும், வேளாளகுலம் சார்ந்த சங்கிலியாரையும் இறைவன் துணையுடன் திருமணம்செய்த சிறப்பு வாய்ந்தவர். இவை யாவும் பக்தி எனும் பேரன்பு நெறிமூலம் மெய்யடியார்கள் சமுதாய மறுமலர்ச்சியைத் தூண்டிவிட்ட செயற்பாடுகளாகவே அமைந்துள்ளன. சமய மாற்றத்திற்காக முதலில் சிவதீட்சை பெறும் முறையை உருவாக்கியவர். திலகவதியார் என் பெ.சு.மணி அவர்கள் சிறப்பித்தமையும் இங்கு மனம் கொள்ளத்தக்கது. சமயப் பிரசங்கங்களால் வாதங்களில் ஈடுபடாது சமயநெறி சார்ந்து அன்பெனும் ஆன்மீக குலத்தில் ஒன்றாக இணைவதென அடியார்கள் பக்தி இயக்கத்தின் வாயிலாக போதிக்கும் வாழ்வியலாகும் மத வாதம் என்பது மிகப் பெரிய வாத நோயாகும் இத்தகைய நோயிலிருந்து விடுபட்டு அன்மீக பண்பாட்டில்அனைவரும் ஓர் குலமாக இணைவதையே பக்தி இயக்க பண்பாட்டு மறுமலர்ச்சி அறிவுறுத்தியுள்ளது.

சமுதாயத்தை நலிவுறச் செய்யும் சாதி வர்க்க வேறுபாடுகள் போல பொருளியலால் வரும் ஏற்றத்தாழ்வுகளும் கொடுமையானது என்பதனை தவத்திரு குன்றக்குடியடிகளார் தீர்க்கமான திறமையுடன் தமது நூல்களில். பேச்சுக்களில் வெளிப்படுத்தியுள்ளார். பக்தி இயக்கம் பற்றிய அன்னாரது சீரிய சிந்தனைகளும் அனைவராலும் மனங்கொள்ளத்தக்கனவாகும். சிவநெறியானது பொருளியல் ஏற்றத்தாழ்வுகளை மறுக்கின்றது. சிவநெறி சார்ந்த சமுதாயத்தில் பொருளியல் ஏற்றத்தாழ்வுகள் மறையும் என்வும் அங்ஙனமின்றேல் மார்க்கசீயமானது வாழ்வியல் நெறியாக அமையும் என்று அடிகளார் குறிப்பிடுவது எப்போதும் கவனத்திலிருக்க வேண்டிய சிந்தனையாகும். அத்துடன் சித்தாந்த செந்நெறி ஏழை பணக்காரன், வறியவர், செல்வந்தர் என்ற நிலைக்கு யாரையும் இட்டுச்செல்வதில்லை. சித்தாந்த சிவநெறி அன்புநெறி சார்ந்த எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் தொண்டர்குல சமுதாயமாகும். திருக்கோயில்களில் இன்று இறைவன் சந்நிதியில் சமய ஒழுக்கத்தினாலும் பக்தியினாலும் ஒன்றுபட்ட அனைவரும் உடனிருந்து உணவருந்தும் பண்பாடு அக்கால மெய்யடியார்களது பக்தி இயக்க மறுமலர்ச்சியின் ஒரு சிறப்பம்சமாக இன்றும் திகழ்கின்றது.

வைணவ பக்தி இயக்கத்தினாலும் இவ்வாறே சமுதாய மறுமலர்ச்சியின் அவசியத்தை உயர்த்தி பக்தி நெறியாளர்கள் தத்துவ சிந்தனையாளாகள் வாழ்ந்தனர். நம்மாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், பெரியாழ்வார், இராமானுஜஆழ்வர் போன்றவர்கள் இவ்வாறு வாழ்ந்துள்ளார்கள் என்பதை "ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும்" என்ற நூல் நன்கு தெளிவுபடுத்தியுள்ளது. இந்த வகையில் ஆதி சங்கரரும் இராமானுஜரும் சுவாமி விவேகானந்தரால் "ஆத்மீகத்தின் கதவுகளை சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் திறந்துவிட்டனர்" எனப் பாராட்டப்பட்டமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

## முடிவுரை

இன்று நடைமுறை வாழ்வில் மனிதம், மனிதம் சார்ந்த குழுமம், சமுதாயம், சமயங்கள், நாடுகள் என அனைத்தையும் பொருளியல்தான் ஆட்டிப்படைத்து வழிநடத்திக் கொண்டிருக்கின்றது. உலகமயமாக்கல் என்ற

நவீனத்துவ அறிவுசார் பொருளாதாரம் ஒரு வகையில் பொருளாதிக்க நெறியினைத்தான் தனது பரப்புரையாகக் கொண்டுள்ளது. ஒரு நாட்டின் ஆணிவேராகவுள்ள மனிதன் வாழவும் வாழ்விக்கவும் பொருளாதாரம் அவசியமாகும். ஆனால் பொருளாதிக்கம் வெறி கொள்ளும் போது மானிடமானது பேரழிவையே சந்திக்கின்றது. உறவுகள் பிரிகின்றன. குடும்பங்கள் பிளவுபடுகின்றன. குழந்தைகள், முதியவர்கள். காப்பகங்கள் பெருகுகின்றன. பொருளைத் தேடுவதிலும் பெருக்குவதிலும் அறநிலைத்தேர்வு இருப்பது இன்றியமையாதது என்பதனை இவை காட்டுகின்றன.

உலகின் அமைதியும், ஒழுங்கு நிலையும் சமத்துவ மேம்பாடும் நிலைபெறவேண்டுமெனில் அது அறவழிப்பட்ட மானிடத்தின் அறிவுடைய ஒரு சமுதாயத்தால் தான் நிலைபெறச்செய்ய முடியும். இன்று நாம் சந்திக்கும் மனித அவலங்கள் பலவும் கற்றறிந்த மாமேதைகள் பலரும் தாம் பெற்றுள்ள அறிவுத்திறனை அறத்துடன் இணைந்து செயற்படுத்தாமையே காரணமாகும் என்பதனை ஆன்மீக சான்றோர்கள் பலரும் உணர்கின்றனர். இத்தகைய அறிவுசார் நிபுணர்கள் தாம் பெற்றுள்ள மேலான அறிவாகிய மூலதனத்தை அறவழிச்செல்லவிடாது தடுத்து தங்களது சொந்த நலன்களுக்கும், விருப்பு வெறுப்புக்கள் தரும் பொருள், புகழ் மயக்கங்களுக்கும் ஆளாகித் தனியே பொருள் தேட்டத்திற்கு மட்டும் அறிவை செலவிடுவதனால் அறிவுநிலைக்குரிய உண்மைப் பயன்பாடு செயற்படாதொழிந்து விடுகின்றது.

உடற்பலம் இழந்தவிடத்து ஏற்படும் துயரங்கள், நோய்கள், பிறரால் ஏற்படும் கொலை, கொள்ளை, மன உளைச்சல்களால் வரும் உளத்தாக்கங்களை உணவினாலும். உடையினாலும், செல்வத்தினாலும் மாத்திரம் சரியாக்க முடியுமா? அப்படியான சமயங்களிற்தான் இறையுணர்வின் வலுவான ஆற்றல் தேவைப்படுகின்றது. சமணத்துறவிகளால் அரச ஆணையின் உதவியுடன் அப்பர் அடிகட்கு ஏற்படுத்தப்பட்ட தண்டனைகள், கொடுமைகள், வஞ்சகத்தனங்கள், மனித நேயமற்ற கொடூரங்கள் இவற்றிலிருந்த அவர் எவ்வாறு தம்மைக் காத்துக்கொண்டார் என்பதனை சிந்திக்கும் போது அவரிடமிருந்த வலிமையான திடசித்தத்துடன் கூடிய பக்தி வைராக்கியம் நிறைந்த இறையாற்றலே அவரை இக்கொடுமையிலிருந்து காப்பாற்றியது என்பதனை எத்தனை பேர் இன்று உணர்கின்றனர். இறையுணர்வின் ஆற்றலானது பிறரால் தரப்படுவதில்லை ஒருவரது அற்புத ஆற்றல் ஆகும். அதுவே உன்னதமான ஆத்மீக ஞானமுமாகும்.

மனச் சமயநிலையில் விருப்பு வெறுப்புகளை கடந்து நின்று ஓடும் செம்பொன்னும் ஒப்பநோக்கும் சமநிலை பேணும் தன்மையே அப்பரிடத்தில் எல்லையற்ற ஆற்றலை வருவித்தது. பல்லவ மன்னர் மகேந்திரவர்மன் நாட்டையாளும் அரசனாக - காவலனாக - வேந்தனாக விளங்கினாலும் சமணத்துறவிகளின் கொடும் செயல்களுக்கு இணங்கி அப்பரடிகளை துன்புறுத்தியமையானது அவரது நடுநிலை நிலைமையினையும் சமநிலை தவறிய அதிகாரத்தையுமே காட்டுகின்றது. அதனால் தான் பற்றற்று சமநிலை பேணும் அப்பரடிகளால் தம்மைக் காத்துக்கொள்ள முடிந்தது. மன்னனையும் அவரால் வாழ வைக்க முடிந்தது. சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் மட்டுமல்ல பெரியபுராண அடியார்கள் யாவருமே இத்தகைய பக்தி வைராக்கியம் கொடுத்த இறையுணர்வினால்தான் பிள்ளைக் கறி சமைத்தும், மனைவியை துணிந்து தானமளித்தும் படிக்காசு பெற்று, பஞ்சம் தீர்த்தும், பாம்பு தீண்டிய சிறுவனை உயிர்ப்பிக்கவும் முடிந்தது அத்தகைய இறையாற்றலால் கிடைக்கப்பெற்ற

ஆத்மஞானமே உலகசமநிலை பேணவும், அமைதியும், சாந்தியும், சமாதானமும் நிலைபெறவும் உன்னதமான வாதமாகவும் ஊடகமாகவும் செயற்பட முடியும் என்பதனையே பக்தி இயக்கத்தின் மூலம் ஏற்படுத்திய சமுதாய மறுமலர்ச்சியானது பலப்படுத்தி நிற்பதனை உணர்ந்துவிட்டால் மீண்டும் உலகம் சமரச பூமியாகி நிலையான சமாதானத்தை அடைந்துவிடும்.

உசாவியவை:

1. நமது நிலையில சமயம், சமுதாயம் - தவத்திரு. குன்றக்குடி அடிகளார். சென்னைப் பல்கலைக்கழகம். 1990.
2. சிவத்ததமிழ்ச்செல்வி ஆராய்ச்சிக் கட்டுரைகள் - துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை, 1985.
3. சைவசமய மரபில் பக்தி. ஆய்வுக்கட்டுரை, கலைவாணி இராமநாதன், இந்துபோட் இராஜரட்ணம் பவளவிழா, 1998 (பிரசுரிக்கப்பட்டது.)

மனிதகுலம் பிழையிலிருந்து உண்மைக்குச் செல்லவில்லை...மாறாக உண்மையிலிருந்துதான் உண்மைக்குச் பிரயாணம் செய்கின்றது. அதாவது நாம் அனைவருமே தாழ்ந்த உண்மையில் இருந்து உயர்ந்த உண்மைக்கு செல்கிறோம் என்று கருதுங்கள்

-சுவாமி விவேகானந்தர்-

# செம்மொழியாம் தமிழ்மொழி

**பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை,**
முன்னைநாள் ஆசிரியை,
யா/இராமநாதன் கல்லூரி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்", என்ற பாரதியின் கூற்றும், "தமிழுக்கு அமுது என்று பெயர்" என்ற பாரதிதாசனின் கூற்றும் என்னைக் கவர்ந்தவை. இதற்கு மேலாக "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே" என்ற திருமூலரின் அறிவுறுத்தலும் செம்மொழியாம் தமிழ்மொழி பற்றி சிந்திக்கவைத்தது. தமிழ் செய்தல் என்றால் அன்பு செய்தல் என்பது பொருள் அன்பினால் இன்பம் பெறலாம். வீடு பேறு அடையலாம், தமிழ் அத்தகைய ஆற்றல் வாய்ந்த தெய்வ மொழியாகும். இதனால் இதற்குக் கன்னித்தமிழ், இன்பத்தமிழ், செந்தமிழ், அன்புத்தமிழ், எனப் பல பெயர்கள் கொண்டு அழைப்பர்.

## சங்கமிருந்த தமிழ்

கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்றும், அவர்கள் பேசிய மொழி தமிழ் மொழி என்றும், ஆய்வாளர்கள் கூறுவர். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழி பழைமை குன்றாது புதுமை பெற்றும். இளமையும், இனிமையும் பெற்றுக் காலத்தால் அழியாது கன்னித் தமிழ் எனச் செழித்து நிற்பதைக் காணலாம். இது இசைத்தமிழ், இயற்றமிழ், நாடகத் தமிழ் என வடிவமைந்து விளங்குகின்றது. வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ்மொழிக்கு உண்டு. இத்தகைய தமிழ் மொழியைப் புலவர்கள் ஆராய்ந்தனர். இதனால் இது "சங்கத்தமிழ்" எனவும், "கூடலின் ஆய்ந்த ஒண்தீம்தமிழ்" எனவும் பெருமை பெற்றது. சங்கங்கள் மூன்று இருந்தன என்றும். அவை ஒவ்வொன்றும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இடை வெளிகளையுடையதாய் இருந்தன வென்றும், முச்சங்கங்களிலும் அறிஞர்கள் கூடி ஆராய்ந்து செப்பினிடப்பட்ட மொழியே தமிழ் மொழியென்றும், "சங்கத்தமிழ்" என்றும் போற்றப்பட்டது என்பர். முதற் சங்கத்தில் அகத்தியரும், இடைச்சங்கத்தில் தொல்காப்பியரும், கடைச்சங்கத்தில் நக்கீரர் முதலியோரும் இருந்தனர். முதற்சங்க நூல்கள் கடல்கோள்களாலும் காலவெள்ளத்தாலும் அழிந்து போக மதுரையில் கூடிய தமிழ் சங்க நூல்களே பெரிதும் கிடைத்துள்ளன. அகத்தியரின் மாணாக்கர் தொல்காப்பியரினால் எழுதப்பட்ட தொல்காப்பியமும், இறைவனால் அருளிச் செய்யப்பட்ட இறையனார் அகப்பொருளோடு பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நாற்பது நூல்களும் சங்க நூல்கள் எனப்படுகின்றன.

தெய்வப்புலவர் தொல்காப்பியத்தை தமிழ் மொழிக்கு வழங்கினார். இது பழைமையும் பெருமையுமுடையது. இடைச்சங்க காலம் முதல் இன்று வரையும் இலக்கணத்தை உணர்த்தும் தலையாய நூலாக விளங்குகிறது. எழுத்து. சொல், பொருள் மூன்றினது இலக்கணத்தையும் கூறுகிறது. இதற்கு இளம்பூரனார், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், நச்சிநார்க்கினியார் என்போர்

உரையெழுதி உள்ளனர். யாவருரையிலும் சேனாவரையருரையே சிறந்ததென்பர்.

திருக்குறள் "உலகப் பொதுமறை" எனப் போற்றப் படுகிறது. இது உலகில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்கு இன்னொரு சிறப்பாகும். இனமத வேறுபாடின்றி எல்லோரும் கைக்கொள்ளக் கூடிய அறங்களைக் கூறுவ தோடு அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருடார்த்தங்களையும் எடுத்துக் கூறுகின்ற சிறப்பினையுடையது. இறையனாராகப் பொருள் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட அகத்தினை இலக்கண நூலாகும்.

## உயரிய கோட்பாடுகளையுடைய தமிழ்

இவ்வாறு ஈராயிரமாண்டுகட்டு முன்தோன்றிய ஆயிரத்துக்கு மேற்பட்ட இலக்கியங்கள் இன்றும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஆயிரத்தக்கு மேற்பட்ட புலவர்களின் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. "இருந்தமிழே உன்னால் இருந்தேன்" என்கிறார் ஒரு புலவர் "யாதுமூரே யாவருங்கேளிர்" என்கிறார் மற்று மொருபுலவர், இளம்பெருவழுதி என்பவரோ "உண்டாலம்ம இவ்வுலகம்....... பிறர்க்கென முயலுனர் உண்மையானே" என்கிறார், இவையாவும் சங்கத்தமிழன்றோ. இத்தகைய உயரிய வாழ்க்கைக் கோட்பாடுகளை உலகிற்கு எடுத்துக் கூறுவனவாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. பல்லாயிரமாண்டுகட்குப் பின்னரும் இவை மக்கள் வாழ்வை வளம்படுத்துவனவாக அமைந்துள்ளன.

சங்ககால மக்கள் வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என வகுக்கப் பட்டுள்ளன. அகவாழ்வு. காதலையும், புறவாழ்வு போரையும் பற்றியவையாகும். இவை இரண்டுமே சங்க இலக்கியப் பொருள் மரபாக அமைந்துள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலங்களை வகுத்து. நிலத்தின் பெயரால் ஒழுக்கங்களை வகுத்து அகத்திணைப் பாடல்கள் அமைந்தள்ளன. இவற்றிற்கு முறையே வெட்சி. வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை எனப் புற ஒழுக்கங்களும் பாடற் பொருள் மரபாக அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்த சங்க இலக்கியங்கள் கவிச்சுவை, பொருட்சுவை, சொற் செறிவு நிரம்பியவையாகவும், உவமை நயத்தோடு கூடியனவாகவும், குறிப்புப் பொருள் உணர்த்துபவையாகவும், அரசரின் கொடை, வீரம், போர் முதலிய அறஒழுக்கங்களை கூறுபவையாகவும் அமைந்துள்ளன. இம் மொழியானது மக்களைக் கலைஞர்களாகவும், கலாரசிகர்களாகவும், ஆன்மீகச்சிந்தனையாளர் களாகவும், பண்பாளர்களாகவும் வளர்த்துள்ளது.

## அன்புத்தமிழ்

சங்ககால நல்லிசைப் புலவர்களின் இலக்கியங்கள் உயிருள்ளவை. புலவன் தான் நுகரும் இன்பத்தைப் பிறரும் அனுபவிக்க வைக்கிறான். நல்லிசைப்புலவனின் நாவில் பிறக்கின்ற சொற்களின் சிறப்பையும், கேட்போர் அடைகின்ற இன்பத்தையும் தமிழ் மொழியின் சிறப்பாகக் கண்டுகளிக்கலாம். ஒரு தலைவன் பொருளீட்டுவதற்காக வெளிநாடு செல்கின்றான் காட்டிலே காதலை நினைவூட்டும் நிகழ்ச்சிகளே நிறைந்திருக்கும் என்பதைத் தலைவிக்குக் கூறியிருக்கிறான். தலைவன் சென்றபின் தலைவி அவற்றை நினைவு படுத்துகிறாள். தோழிக்குக் கூறுவாள்.

***"அடிதாங்குமளவின்றி அழலன்ன வெம்மையால்***
***கடியவே கனங் குழாய் காடென்றார் அக்காட்டுள்***
***துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்***
***பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு"***

எனவும் உரைத்தனரே.

***"இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்***
***தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை"***

எனவும் உரைத்தனரே (பாலைக்கலி)

என்று கூறுந்தலைவி, இக் காட்சியைக் கண்டதும் தலைவன் பொருளீட்டாமல் திரும்பிவந்து விடுவாரோ? என்ற ஐயப்பாட்டைத் தெரிவிக்கிறாள். பாலை நிலத்திலேயுள்ள

குட்டைநீரில் களிறும் பிடியும் அடைந்த இன்பவாழ்வின் இன்பத்தை மக்கள் வாழ்வில் இணைத்துத் தெய்வீக வாழ்வொன்று காட்டப்படுகின்றது. நீர் வேட்கையை மறந்த களிறும், பிடியும் தம் அன்புக் குட்டிக்குழவி குட்டைநீரைக் கலக்கி. உழக்கி, விளையாடி, நீர்குடித்து வரும்வரை அக்காட்சியைக் கண்டு களித்து இன்புற்றன. பின்பு ஆண்யானையானது தனது அன்புக்குரிய பெண்யானையை நீரருந்தவிட்டு. அதன்பின்பு தான் நீரை அருந்தி மகிழ்ந்தது. களிறும் பிடியும் கருத்தொருமித்த காதலன்பினால் இன்பங்கண்டன. ஓருயிர் இன்பத்தைத் தானுவந்து ஏற்று பிறிதொருயிருக்கு இன்பத்தை அளிக்கிறது. இதனை வள்ளுவர் பெருமான் "அன்போடியைந்த வழக்கு" என்பர். இங்கே தெய்வீகத்தைத் தியாக உணர்வைப் பார்க்கின்றோம். திருமூலரும் இக்கருத்துப் படவே "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்றார். அன்புதான் சிவம் என்பது சுட்டிக் காட்டுகிறது இப்பாடல் இங்கே தெய்வீகத்தைப் பார்க்கிறோம். இது போன்ற ஆயிரமாயிரம் பாடல்களைச் சங்க இலக்கியங்களில் காணலாம். தமிழ் ஒரு தெய்வமொழி என்பதை உணருகிறோம்.

## காப்பியத்தமிழ்

மொழி கலைவடிவம் பெற்றதினால் காப்பியங்களும், இலக்கியங்களும், இதிகாசங்களும் தோன்றின. தமிழிலக்கிய வரலாற்றில் காப்பியமென முதல் முதலில் தோன்றியது சிலப்பதிகாரமே. இதனை எமக்குத் தந்தவர் இளங்கோவடிகள். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். இவை சங்கமருவியகால நூல்களாகும். ஏனைய இலக்கியங்கள் பல்லவர், சோழர்காலமும், அதற்குப் பிந்தியவையுமாகும் இந்த வகையில் தமிழில் உள்ள சீவகசிந்தாமணி. சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையபதி, குண்டலகேசி என்பன பெரும் காப்பியங்கள் என்றும். சூளாமணி, யசோதரா காவியம், உதயண குமார காவியம். நீலகேசி, நாககுமார காவியம் என்பன சிறு காப்பியங்கள் என்றும் கூறப்படும். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழ் நாட்டுக்கதை கூற ஏனைய எட்டுக் காப்பியங்களும் வட நாட்டுக்கதை கூறுவனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழர்காலத்து எழுந்த காப்பிய வரிசையிலே கம்பராமாயாணம், பெரிய புராணம். கந்தபுராணம் என்பவை தமிழ் மொழிக்கு சிறப்பினை தேடித் தந்தவையாகும்.

சிலப்பதிகாரம் ஒரு குடிமக்கள் காப்பியம். வீட்டைவிட்டு வெளியே வராத ஒரு பெண் நாட்டைவிட்டு வேற்று நாட்டில் அரச சபை ஏறி வழக்குரைக்கும் அளவிற்கு புரட்சி செய்துள்ளார் இளங்கோவடிகள். சாதாரண வணிகக் குலத்துதித்த கோவலனையும் கண்ணகியையும் காப்பியத் தலைவர்களாக்கி நூலை தமிழக்கு அளித்தள்ளார். சோழ நாட்டில் பிறந்து, பாண்டிநாட்டில் வழக்குரைத்து, சேரநாட்டடில் தெய்வமாகிறாள் கண்ணகி. கணவனை இழந்த கண்ணகி பொங்கி எழுந்தாள். சூரியனைப் பார்த்து "காய் கதிர்ச் செலவனே என் கணவன் கள்வனோ"? என்றாள் "பாண்டியனிடம் நீதி கேட்பேன்" என எழுந்து சென்றாள். அக்காட்சியை இளங்கோவடிகள் படம்பிடித்துக்காட்டுகிறார். "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் கையிற் தனிச்சிலம்பும்" கொண்டு ஏகினாள் என்றும், ஆவி குடிபோன அவ்வடிவம் என்றும் கண்ணகியின் தோற்றத்தை வர்ணிக்கிறார். சென்றவள் சபையில் மன்னனை நோக்கினாள் "தேராமன்னா", "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என மன்னனை அஞ்சாது விளிப்பதும், "கள்வனென உன்னாற் கொலையுண்ட கோவலன் மனைவி கண்ணகி என்பெயர்" எனத் தன்னை அறிமுகம் செய்வதும், வழக்குரைப்பதும், என்காற்சிலம்பு மணியுடையரியே என அரசன் அறமற்று தன் கணவனைக் கொண்ற செயல் உணர்த்தலும், மாணிக்கப்பரலைக் கண்ட பாண்டியன்

நெடுஞ்செழியன் தன்பிழை உணர்ந்து "யானோஅரசன் யானே கள்வன்" என உயிர் துறத்தலும், மதுரை மாநகர் தீக்கிரையாதலும் கண்ணகி சேரநாடு சென்று தெய்வமாதலையும் காப்பியம் அழகாக எடுத்து கூறுகிறது. இதனால் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகின்றது. முத்தமிழ் காப்பியமாகப் போற்றப்படும் சிலப்பதிகாரம் மூன்று அறக்கருத்துக்களை எம்முன் வைக்கிறது. ஒன்று அரசியல் பிழைத் தோருக்கு அறங்கூற்றாவதும், இரண்டாவது ஊழ்வினை வந்துறுத்தும் என்பதும், மூன்றாவது உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏற்றலும் என்ற மூன்று தத்துவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் என்பர். கோவலன் பரத்தையர் குலப்பெண்ணான மாதவியையும். மணம் முடிக்கிறான். மாதவி கற்புடைப் பெண்ணாகக் காட்டப்படுகிறாள். கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாக மணிமேகலை தோன்றுகிறாள் இவள் சிறந்த துறவியாகவும், குருவாவும் காட்டப்படுகிறாள். சிறந்த இலக்கியங்கள் காலத்தால் அழிவதில்லை அவை மக்களுக்கு வழிகாட்டியாக அமைபவையாகும்.

மகாபாரதமும், இராமாயணமும் இதிகாசங்கள். இவை உயரிய இலட்சியங்களை கொண்டமைந்தவை. மக்கள் வாழ்வியலுக்குப் பயன்படுபவையாகும். வடமொழியில் வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணத்தை கம்பர் தமிழ் செய்தார். வீரத்தின் இலட்சணம் பேராண்மை அதிலும் ஒரு படி மேலானது ஊராண்மை இதனை இராமன் மேல் வைத்து காட்டுகிறார் கம்பர். இராம, இராவண யுத்தத்தில் யாவற்றையும் இழந்த இராவணன் நிராயுத பாணியாக நிற்கின்றான. இராமனின் பகைவன் இராவணன் நிராயுத பாணியாக நிற்கும் இராவணனை கொன்றிருக்கலாம். அதனை இராமன் செய்யவில்லை. பகைவனான இராவணனுக்கு இரக்கம் காட்டுகிறான். உபகாரியாக மாறுகிறான். "இராவணா இன்று போய் நாளை வா" என்கிறான். நாளைக்கு நீ சும்மா வராதே படைகளுடன் வா என்றான் இராமன். இந்த வீரனுடைய கொடையை மிகைப்படுத்திய கம்பர்.

"இன்றுபோய்ப் போர்க்கு நாளைவாவென நல்கினன் கோசலை நாடுடை வள்ளல்" என்று சிறப்பிக்கின்றார். வள்ளன்மையை விதந்து கூறி போர்த்தருமத்தை உணர்த்துகிறார் கம்பர்.

பல்வேறு இலக்கியங்களை இலட்சியங்களை எடுத்துரைத்த கம்பர் மருத நிலக் காட்சியிலும் எம்மைப் பிணித்து விடுகின்றார். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். வயல்களிலே தாமரைத் தடாகங்கள் இருப்பது இயற்கை, அன்னங்கள், எருமைகள் வாழ்வதும் இயற்கை. இவ்வழகிய வயலையும், தாமரைத்தடாகத்தையும் கவிதை செய்தார் கம்பர்

*"சேலுண்ட ஒண்கணாரிற்*
*திரிகின்ற செங்காலன்னம்*
*மாலுண்ட கமலப்பள்ளி*
*வளர்த்திய மழலைப் பிள்ளை*
*காலுண்ட சேற்று மேதி*
*கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த*
*பாலுண்டு துயிலப் பச்சைத்*
*தேரை தாலாண்டும் பண்ணை"* என்றார்.

வயல்களிடையே காணப்பட்ட தாடாகத்தில் தாமரைமலரில் அன்னப்பிள்ளைகள் கண் வளருகின்றன. எருமைகள் தமது கன்றை நினைக்குத் தோறும் பாலைச் சொரிய அதனை அன்னப்பிள்ளைகள் உண்டு துயில் கொள்ள, அவற்றின் நித்திரை குழம்பாமல் இருக்க தேரைகள் தாலாட்டுகின்றன. என்று தன்புலமையைத் தமிழ் செய்த கம்பர் மருதநிலத்தின் செழிப்பையும், அங்கு வாழ்கின்ற மக்களின் செழிப்பான வாழ்க்கையையும் உணரவைக்கின்றார். இயற்கைக் காட்சிகளினூடு மக்களின் பண்பட்ட ஒழுக்கங்களையும் உயர்ந்த இலட்சியங்களையும் புலவனாற் படைக்கப்படும் போது அவை செந்தமிழ் இன்பங்கனிந்த செம்மொழி என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இது வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புமாகும்.

செந்தாமரை மலர்கள் நிறைந்த அழகிய பொய்கை ஒன்றின் இயற்கைக் காட்சிகளைச் சீவகசிந்தாமணி ஆசிரியர் நயம்படக் கூறுகின்றார்.

*"நீலத்துகிலிற் கிடந்த*

*நிழலார் தழலம் மணிகள்*

*கோலச் சுடர் விட்டுமிழக்*

*குமரியன்னங் குறுகிச்*

*சால நெருங்கிப்பூத்த*

*தடந் தாமரைப் பூவென்ன*

*வாவிச் சுடர்கள் கவ்வி*

*அழுங்கும் வண்ணம் காண்மின்"* என்கிறார்.

பெண்ணொருத்தி செம்மணிகள் பதித்த நீலப்பட்டாடையுடன் நீராடப் பொய்கையை நோக்கிச் சென்றாள். கதிரவன் ஒளிபட்டு அவள் பட்டாடையின் மணிகளின் ஒளியானது பொய்கையில் விழுதலும், பொய்கையானது செம்மை நிறமெய்தியது. இதனைத் தூரத்திலே இருந்து கண்ட மட அன்னமானது விரைந்து ஓடி செந்தாமரை மலரென வாவியில் விழுந்த சுடரைக் கவ்விற்று, சுடர்கள் வாயில் அகப்படாமையால் தன் மடமையை எண்ணி நாண முற்றது. என்று அழகாச் சிந்தாமணிக் கவிஞர் தமிழ் செய்துள்ளமை எல்லோருடைய உள்ளங்களையும் உவகையில் ஆழ்த்துகிறது.

தமிழின் சிறப்பைப் பக்திச் சுவை சொட்ட உலகறியச் செய்தவர் சேக்கிழார். பெரியபுராணத்தின் பாட்டுடைத் தலைவன் சுந்தரர். சுந்தரர் பரவையாரைக் கண்டு காதல் வெள்ளத்தில் மூழ்கியதை அழகாகச் சேக்கிழார் செம்மொழியில் தருகின்றார்.

*"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ*

*பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து*

*விற் குவளை பவளமலர் பூத்த விரைக் கொடியோ*

*அற்புதமோ சிவனருளோ அறியேனென்று அதிசயித்தார்"*

எனப் பாடலமைத்தார். கற்பகத்தின் பூங் கொம்போ, காமன் பெருவாழ்வோ, புண்ணியத்தின் வடிவமோ, பவளமலர் விரைக் கொடியோ, இந்த உருவம் தான் என்னே! என்று பரவையாரை விதந்த சுந்தரர் அற்புதமோ, சிவனருளோ இது என்ன அதிசயம் என்று ஐயுற்றுக் காதல் வயப்பட்டு நிற்கும் காட்சியைச் சேக்கிழார் சுவாமிகள் அழகாக எடுத்துரைக்கின்றார். இவையாவும் செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பன்றோ.

**பிற்காலத்தமிழ்**

இவ்வாறு சங்ககாலம், சங்கம் மருவியகாலம் பல்லவர் சோழர் காலங்களில் செம்மொழின் சிறப்பைக்கண்ட நாம் பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களில் ஆத்மீக சிந்தனையையும் பக்தி வைராக்கியத்தையும் பார்க்கலாம், மேலும் பிற்காலத்தில் எழுந்த பிள்ளைத்தமிழ், உலா, பரணி, கோவை போன்ற சிற்றிலக்கியங்களும் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தன இதனாலேதான் பாரதியார் "நாமமது தமிழர் என கொண்டிங்கு வாழ்வதிலும் தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யதல் வேண்டும்" என்றார். அதலின் தமிழராகப் பிறந்த நாம் தமிழ் மொழியின் சிறப்பை உலகமெலாம் பரவும் வகை செய்வோமாக. யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம். வாழ்க! செம்மொழியாம் தமிழ் மொழி.



# பிரஞ்சுப் புரட்சி

**திருமதி சுலோசனா யோகராசா,**
ஆசிரியை,
யா/இராமநாதன் கல்லூரி

ஐரோப்பிய வரலாற்றில் பதினெட்டாம் நூற்றண்டில் பிரான்சில் ஏற்பட்ட புரட்சியானது ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகளுக்கு எல்லாம் வழி காட்டியாககக் காணப்பட்டது. நிலமானிய முறையில் இருந்த அரசாங்கத்தை நவீன காலத்திற்கு இட்டுச் சென்றது இப்புரட்சி ஆகும்.

இப்புரட்சி ஏற்படுவதற்கு பிரான்சில் உள்ள பல்வேறு மட்ட மக்களிடமும், மன்னனிடம் உள்ள விருப்பு வெறுப்புகளே காரணமாயிற்று. 1774ல் பிரான்சின் மன்னனாக இருந்த பதினாறாம் லூயி அவுஸ்தாரிய இளவரசி அன்ரனெயிட்டு என்பவரைத் திருமணம் செய்தார். இவர் பிரஞ்சு மொழி தெரியாதவர். பிரஞ்சு மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் ஆடம்பர வாழ்வில் ஈடுபட்டார். எவரையும் மதியாதவர் அதனால் மக்கள் அவரை வெறுத்தனர். பிரஞ்சு மன்னர்கள் சட்டம் இயற்றல், செயற்படுத்தல், இறுதி முடிவு எடுத்தல் போன்ற அதிகாரங்களை தம்மிடமே வைத்திருந்தனர். தெய்வீக வழி உரிமையுண்டு எனக் கூறி அளவுக்கு மிஞ்சிய அதிகாரங்களை, அடக்கு முறைகளை கையாண்டனர். இதனால் மக்கள் மன்னையும் வெறுத்தனர்.

பிரான்சிய அரசால் அளவுக்கு மிஞ்சிய நிதானமற்ற வரிகள் விதிக்கப்பட்டன. பிரபுக்கள் மதகுருமார் என்போர் இவ் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர். இவர்கள் செலுத்த வேண்டிய வரியையும் சாதாரண மக்களே செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ் வரியால் பெறப்படும் வருமானத்தால் பெரும் பகுதி ஆடம்பர செலவுகளுக்காகவே பயன்பட்டது. வேர்செயில்சிங் மாளிகையில் மன்னர் பிரபுக்கள், குருமாருடன் இணைந்த ஆடம்பர, களியாட்டங்களில் ஈடுபட்டார். இதனால் மக்களுக்கு நல்லன செய்ய முடியவில்லை. குறைகள் ஊழல்கள் அதிகரித்தன.

பிரான்சின் மன்னர்களில் 14ம் லூயி மன்னருக்குப் பின் பதவியேற்றவர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர். இதனால் பிரான்சிடம் இருந்த அமெரிக்க இந்தியக் குடியேற்றங்கள் பறிபோயின. இராணுவ அமைப்பிலும் குறைபாடுகள் காணப்பட்டன. சம்பளம் குறைவாக வழங்கப்பட்டன. ஆனால் அவர்களது நலன்கள் கவனிக்கப்படவில்லை இதனால் இராணுவத்தினரும் வெறுப்படைந்து இருந்தனர்.

பிரான்சின் பாராளுமன்றமான ஸ்ரேற் ஜெனரல் கூட்டப்படவில்லை. இதனால் மக்களின் குறைபாடுகளை அறிந்து கொள்ள முடியவில்லை.

பிரான்சின் அக்காலச் சமுதாயம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப் படவில்லை. மதகுருமாரும், பிரபுக்களும் செல்வாக்கு பெற்ற உயர் குடியாளவர்களாக கருதப்பட்டனர். மிகக் குறைந்த தொகையினரான இவர்கள் அதிகளவான சலுகைகளை அனுபவித்தனர். உயர்மட்டக் குருமார்கள் ஏராளமான நிலங்களைப் பெற்று சலுகைகளை அனுபவித்தனர். கீழ்மட்டக் குருமார் வறுமையில் இருந்தனர். இதனால் புரட்சி ஏற்பட்ட பொழுது புரட்சியாளர்களுடன் இவர்கள் இணைந்தனர். பிரான்சிய சமூகத்தினர் பிரபுக்கள் வேர்செயில்ஸ் மாளிகையில் சுகம் அனுபவிக்க சாதாரண குடியாளர் சலுகையற்று வாழ்ந்தனர். மத்தியவகுப்பினர், விவசாயிகள், தொழிலாளர்கள், என்போர் வரி செலுத்துவதால் தம் வருமானத்தின்

பெரும் பகுதியை இழந்தனர். நிலவரி, உப்புவரி, போன்றவரிகள் கட்டினார்கள் எழுதுவினைஞர், மருத்துவர் போன்ற மத்திய தர வகுப்பினர் கல்வியில் உயர்ந்த போதும் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டனர் இதனால் அவர்கள் வெறுப்பு கொண்டிருந்தனர்.

பிரான்சிய புரட்சிக்கு தத்துவ அறிஞர்களின் பங்களிப்பும் முக்கியம் வாய்ந்ததாக இருந்தது. ரூசோ, மொன்டொஸ்கியோ, வோல்ரெயர் போன்ற அறிஞர்கள் எழுத்தாற்றல், பேச்சாற்றல், என்பன மூலம் மக்கள் மனதில் புரட்சிக் கருத்துக்களை பதித்தனர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், என்பனவே புரட்சியின் வாசகங்களாகக் காணப்பட்டன. 16ம் லூயி ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து பொருளாதாரம் கீழ் நிலை நோக்கி சென்றது. லூயி நியமித்த மந்திரிகளான ராகோ, நெக்கர், கலோர், டி பிறின் என்போர் செலவைக் குறைக்க வேண்டும் என சிபார்சு செய்தனர். ஆனால் அரச குடும்பத்தவர்கள் செலவை குறைக்க மறுத்து மந்திரிகளை பதவி நீக்கம் செய்தனர்.

பிரான்சின் பாராளுமன்றம் நீண்ட காலத்திற்கு பின்பு கூட்டப்பட்டது. அதனால் மக்கள் பிரதிநிதிகள் சம உரிமை கேட்ட பொழுது மறுக்கப்பட்டது. இவர்கள் அருகிலிருந்த டெனிஸ் கோர்டில் கூடி புதிய அரசியலமைப்பு அமைக்க முயன்றனர். நிலைமை மோசமாக வேலையற்ற இளைஞர்களால் தொண்டர்படை ஏற்படுத்தப்பட்டு பஸ்ரீல் சிறைச்சாலையை உடைத்தனர். புரட்சி பரவியது வன்முறைகள் ஏற்பட்டன. அரசரும் குடும்பத்தவரும் நாட்டை விட்டுத் தப்பி ஓட முயன்றபோது கைது செய்யப்பட்டனர். இக் காலத்தில் கிரான்டியர்கள், ஜக்கோபின்ஸ் எனும் இரு பகுதியினரும் புரட்சிக்கு ஆதரவு அளித்தார்கள் நெருக்கடி நேரத்தில் ஜக்கொபின்ஸ் பதவி ஏற்றனர்.

பிரான்ஸ் நாட்டில் நடப்பதைப்போல் தங்களது நாட்டிலும் நடக்கலாம் என இங்கிலாந்து, ஆவுஸ்ரேலியா, நெதர்லாந்து போன்ற நாடுகள் பயந்தன. இதனைத் தடுக்க இந்த நேச நாடுகள் பிரான்ஸ் நோக்கி படையெடுதத்தன. இதனால் அரசாங்கம் பலரைக் கைது செய்தது. மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணியது. 1793 ஜனவரி 21ல் மன்னர் கொலைசெய்யப்பட்டார். படை எடுக்கும் நாட்களை எதிர்க்க படை திரட்டப்பட்டது. பொது நலக்குழு ரொபேஸ்பியர் தலைமையில் பயங்கர ஆட்சியை உருவாக்கியது. நேச நாடுகளில் படைகள் தோற்கடிக்கப்பட்டது. நாட்டில் எதிர்ப்பாளர்கள் வகை, தொகையின்றி கொல்லப்பட்டனர். 1794 ஜூலை 28ல் ரொபேஸ்பியர் கொல்லப்பட்டதும் கொடிய ஆட்சி முடிவுக்க வந்தது. இது வரை காலமும் இயங்கிய அமைப்புகள் கலைக்கபபட்டு ஐவரைக் கொண்ட டிரக்றி எனும் அமைப்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

ஐரோப்பிய அரசியலில் நீண்டகாலப் பாதிப்புக்களை ஏற்படுத்திய பிரஞ்சுப் புரட்சியானது பலரது உயிர்களையும் உடமைகளையும் சொத்துக்களையும் இழக்கச் செய்தது. சுகந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகள் பரவின. 1814ன் பின் பேச்சு உரிமை, எழுத்துரிமை போன்ற உரிமைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. மக்களாட்சியை நோக்கி நாடு செல்ல வழிவகுத்தது. கேளிக்கைகள் களியாட்டங்கள், வரிவிதிப்புக்கள் ஏற்படுத்தும் விளைவுகளை உலக நாடுகள் அறிந்து கொண்டன. வம்ச ஆட்சி முடிவுக்கு வந்தது. பதிய அரசியலமைப்பு சட்டமாக்கப்பட்டது. பிரான்சின் தேசியக்கொடி மூவர்ணக் கொடியாக மாற்றம் பெற்றது. நாட்டிலிருந்து பெரிய பண்ணைகள் சிறு சிறு நிலங்களாக்கி பலருக்கு வழங்கப்பட்டன. இப் புரட்சியானதுப் ஐரோப்பிய நாடுகளில் அடக்கு முறையையும், அடிமைத் தன்மைகளையும் ஒழித்தது. இந் நாட்டினைப் பின்பற்றி பல நாடுகள் முன்னேறின. பிரெஞ்சுப் புரட்சி இன்றும் சில விளைவுகளை அங்கே உருவாக்குகின்றது.

# பிஞ்சிலே பழுத்து வித்தாகின்றது



திருமதி. பகீரதி சிவஞானம்,
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

அன்று எம்மவர் கலை, கலாசாரம், விழுமியம் ஆகியவற்றில் நற்பண்புகளை வளர்த்து வந்தனர். இன்றைய சமுதாயத்தினர் இவற்றில் எவற்றைத்தான் கடைப்பிடிக்கின்றனர்? ஏனைய மொழி மற்றும் மேலை நாட்டுக்கலாசார பழக்க வழக்கங்களை இன்று எமக்குள் ஊடுருவியுள்ளதால் இந்த விசித்திரமான கோலம் எம்மவரிடம்.

எம் பாட்டன், பூட்டி காலத்தில் அவர்கள் அனைத்து அன்றாட வாழ்வாதாரங்களிலும் சிறந்தும், உயர்ந்தும் விளங்கினர். அவர்களிடத்தில் பொன், பொருள், கல்வி, தொழில், இல்லறம் போன்றன சிறந்து மேலோங்கி இருந்தது. நிம்மதியான, சந்தோசமான. நிறைவான வாழ்வு. இறையருளும் கூடவே அவர்களை உயர்த்தியது. இன்று, எம்காலத்தில் விஞ்ஞான தொழிநுட்ப விருத்தியின் தகவல் தொடர்பாடல் முன்னேற்றத்தினால் உலகமே உள்ளங்கையினுள் அடங்கி நிலையாயிற்று. மின்னஞ்சல், கணனி வலையமைப்புக்கள் எனப் பல புதிய தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் உருவாகியமையால் எல்லாம் இலகுவும், விரைவுமாயிற்று. இதனை முன்னேற்றகரமான முயற்சிகளில் பயன்படுத்த வேண்டிய இன்றைய எம்மவர் எமது கலை, கலாசார, விழுமியக் கட்டுபாடுகளை மீறி மேலைத்தேய மோகத்தில மாறி நிற்கின்றனர். இதனால் கல்வியே தலையான செல்வம், நோக்கம் என வாழ்ந்து வந்த யாழ் இளைஞர் இன்று அந்நோக்கத்தை, செல்வத்தைப் புறந்தள்ளி கைத்தொலைபேசிகள் கணனி வலையமைப்புக்களே உலகம் என வாழ்கின்றனர்.

இன்று சிறியவர் முதல் பெரியோர் வரையில அனைவர் கையிலும் விதம்விதமான கைத்தொலைபேசிகள். விரும்பியதைப் படம் எடுப்போரும், விரும்பிய பாடல்களைக் கேட்போரும். விரும்பியபடங்களைப் பார்ப்போரும், விரும்பியவர்களுடன் கதைப்போருமாக எத்தனை விதம். இவற்றிற்காக அதிகநேரம் செலவழிப்போர் இன்றைய சிறியோரும், இளைஞருமே. இவர்களில் இன்றைய கைத்தொலைபேசிகள், கணனிகளில் நெறியற்ற பாவனை அவர்களை கலாசார சீரழிவுகளுக்கே இட்டுச் செலகின்றது. இன்றைய பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் பலவும் இதற்குச் சான்றாகும். படித்து, தனக்கு ஏற்ற துறைகளில் பிரகாசித்து தொழிற்துறை, வாழ்க்கைத் தராதரங்களில் உயரவேண்டிய இன்றைய இளைஞர் சமூகம் இளவயதுத் திருமணம், தாய்மை, விவாகரத்து என முது நிலையடைந்து, ஏனைய பகுதியிலுள்ளோர் எள்ளிநகையாடும் வகையில் பிஞ்சிலே பழுத்து வித்துக்களையும் ஆக்குகின்றனர். முப்பது வயதினுள் இன்றைய இளைஞருக்கு எல்லாமே முடிவடைந்து வாழ்க்கையில் விரக்தியடைந்த நிலையில் நடமாடுகின்றனர். இவர்களின் வளமான எதிர்காலம் எங்கே? முன்னேற்றம் எங்கே?

"இன்றைய இளைஞர் இவ்வுலகின் நாளைய தலைவர்கள்." எனவே, யாழிலே எமது எதிர்காலத் தலைவர்கள் எங்கே? அவர்களின் வளமான எதிர்காலம் எங்கே? இது மிகவும் சிந்தித்து, செயற்பட வேண்டிய தருணமும், விடயமும் ஆகும். ஒருவனுக்கு சென்ற இடமெல்லாம் என்றென்றும் சிறப்பளிப்பது கல்வியே அக்கல்வியை நாம் எமது வளரிளம் சமுதாயத்திற்கு தொடர்ச்சியாக நன்முறையில் வழங்கி, கல்வியில் அறிவுள்ள சமுதாயமாக மாறிக் கொண்டிருக்கும் யாழின் எமது இன்றைய தலைமுறையினரை மீட்டெடுத்து அவர்களை விழிப்படையச் செய்து கலை. கலாசாரம், விழுமியம் என்பவற்றில் எமக்கே உரித்தானவற்றில் மேன்மையடையச் செய்து, மீண்டும் யாழை கல்வியில் உயர்வடையச் செய்வோம். வாழ்க்கையில் சிறப்போம் என நாம் திடசங்கற்பம் எடுப்போம்.

# விழிப்புலன் அற்றோர்க்கு வழித்துணையாகும் வெள்ளைப்பிரம்பு



**திருமதி தாமரைச்செல்வி கீதாக்கிருஷ்ணன்**
விசேடகல்வி ஆசிரியை,
யா/இராமநாதன் கல்லூரி.

வருடந்தோறும் ஒக்டோபர் மாதம் 15ம் திகதி வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புத்தினம் எனச் சர்வதேச ரீதியில் பிரகடனப் படுத்தப்பட்டு நினைவு கூறப்படுகின்றது. இவ் வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவத்தை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள உதவியாக இத்தினம் விளங்குகின்றது. பொதுவாக இன்றைய கால கட்டத்தில் மக்கட் தொகுதியில் ஒரு பகுதியாக விளங்கும் பார்வையற்ற அல்லது பார்வைக் குறைபாடுடையவர் கையில் ஒரு வெள்ளைப்பிரம்பை தாங்கியிருப்பதையும் அதன் துணையுடன் நடந்து செல்வதையும் நீங்கள் கண்டிருப்பீர்கள். பலருக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாகவோ அல்லது புரியாத புதிராகவோ இக் காட்சி இருக்கலாம்.

பார்வையற்றவர்கள் தனித்து வீதிகளில் நடமாடுவதன் அவசியமென்ன? அவர்கள் ஏன் தமக்குத்தாமே பாதுகாப்பின்மையை தேடிக்கொள்ளவோண்டும்? அதனை விட அவர்கள் தம் வீடுகளிலே தங்கியிருப்பது அதிக பாதுகாப்பானது அல்லவா? இங்ஙனமாகச் சிலர் வினவக்கூடும். இத்தகைய வினாக்களுக்கு உலகப்புகழ் பெற்ற நாடக ஆசிரியராகிய வில்லியம் சேக்ஸ்பியர் என்பவர் தன்னுடைய உலகப் பிரசித்த பெற்ற "வெனிஸ் நகரத்து வணிகள்" எனும் நாடகத்தில் எங்களுக்கும் உறுப்புக்கள், உருவம், உணர்வுகள், பாசம், உணர்ச்சிகள் இல்லையா? ஒரே உணவு எம்மையும் போஷிக்கின்றது, ஒரே ஆயுதங்கள் எம்மையும் காயப்படுத்துகின்றன, ஒரே நோய்கள் எம்மையும் பீடிக்கின்றன, ஒரே மருந்துகள் எம்மையும் குணப்படுத்துகின்றன, ஒரே பருவகாலங்கள் எம்மையும் உஷ்ணமாக்குகின்றன, குளிர வைக்கின்றன எங்களைக் குத்தினாலும் குருதி பீறிடாதா? கூச்சம் காட்டினால சிரிக்கமாட்டோமா, நஞ்சூட்டினால் சாகமாட்டோமா? எனக் கேட்பது பதிலாகின்றது.

ஆம் விழிப்புலனற்றவர்களுக்கும் ஓர் இதயம் உண்டு. எல்லோரையும் போலவே அதில் உணர்வுகளும், உணர்ச்சிகளும், பாசமும் நிறைந்திருக்கின்றன. அவர்களுக்கும் ஒரு வயிறு இருக்கிறது. அதற்கும் பசிக்கத்தான் செய்கின்றது. எனவே சாதாரண மாணவர்களைப் போலவே அவர்களுக்கும் கல்வி, தொழில், வாழ்க்கை போன்ற தேவைகள் அத்தியாவசியமாகின்றன. வெளியுலகத் தொடர்புகளும் கூட அவர்களுக்கு இன்றியமையாதவை யாகின்றன. சுருங்கக் கூறின் ஒரு சராசரி மனிதனுக்குத் தேவையான பல அடிப்படைத் தேவைகள்யாவும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய அவசியம் பார்வை இழந்தோருக்கும்

உண்டு. இதன் விளைவாகவே இன்று பல பார்வையற்றவர்கள் தங்களுடைய கரங்களிலே வெள்ளைப் பிரம்பினைத் தாங்கி பிறர் ஒருவரின் உதவியின்றி சுயமாக நடமாடுகின்றார்கள்.

வெள்ளைப்பிரம்பானது கனதி குறைந்த மூங்கில், பிளாஸ்ரிக் என்வனவற்றால் தயாரிக்கப்படுகின்றன. இன்று பாவிக்கப் படுபவை நான்காக மடித்து வைத்துக்கொள்ளக் கூடியதாகவும், நுனியில் இறப்பராலான ஒரு குமிழ் பொருத்தப்பட்டதாகவும் காணப்படும். இதன் மூலம் முன்புள்ள பொருளையும் வீதியின் நிலையையும் தட்டி அறிகின்றனர்.

இவ் வெள்ளைப்பிரம்பின் ஆரம்பக்கண்டு பிடிப்புக்கு 1921ம் ஆண்டு பிரிட்டனில் பிறிஸ்டல் நகரத்தில் வாழ்ந்த வாகன விபத்தில் பார்வையைப் பறி கொடுத்த புகைப்படத்துறை நிபுணரான ஜேம்ஸ்பிக் (James Biggs) என்பவரே உரித்தடையவராக கருதப்பட்டார். இவர் தனது சூழலை மாற்றியமைக்க வேண்டிய நிலையில் தனது சுயேட்சையான நடமாட்டத்திற்கு தனது கைப்பிரம்பையே உபயோகித்தார். ஆனால் அதிகரித்து வந்த வாகனப் போக்குவரத்தினால் அச்சமடைந்து வாகனச் சாரதிகள் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள ஏதுவாகத் தனது பிரம்புக்கு வெள்ளை வர்ணம் பூசி வெள்ளைப் பிரம்பாக்கினார். இதன் பின் 1931ல் பெப்ரவரியில் பார்வையற்றவர்களுக்காக பல தொண்டுகளைப் புரிந்த பிரான்ஸ் தேசத்து அம்மையாரான கில்லி டி.ஹேர்பமொன்ற் (Guilly D.Hearbomont) என்பவர் வெள்ளைப் பிரம்பு தொடர்பான பல பிரச்சாரங்களை தேசியளவில் முன்னெடுத்தார். இவ் விடயம் பிரிட்டிஸ் நாளேடுகளுடாக அந் நாட்டில் பரவி அந்த நாட்டு ரோட்டரிக் கழகங்களால் நாடு முழுவதும் இது பற்றி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 1931 மே மாதத்தில் பி.பி.சி ஒலிபரப்பு நிறுவனம் இப்பிரச்சாரத்தில் இணைந்து , பார்வையற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்பு கொடுகப்பட வேண்டும் எனவும் இது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் அதனைக் கையாள்பவர் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் என்பதை இப்பிரம்பு அடையாளம் காட்டும் எனவும் முன் மொழிந்தது.

எனினும் 1930ல் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள சர்வதேச அரிமாச் சங்கம் வெள்ளைப் பிரம்பின் அறிமுகத்தை ஏற்படுத்தி தேசிய மட்டத்தில் இதற்கான நடவடிக்கைகளையும முன்னெடுத்தது. அமெரிக்காவின் இலினொயில் மாநிலத்தில் உள்ள பெயோறியாவில் 1930 டிசம்பரில் 1வது வெள்ளைப்பிரம்பு பாதுகாப்பு பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

1960ல் அமெரிக்க நடாளுமன்றத்திற்கு பார்வையற்றவர்களுக்கு உதவி புரியும் நிறுவனங்கள் ஒக்டோபர் 15ம் திகதியை வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினமாக நிறைவேற்றக் கூடிய ஆலோசனையை 1964 ஒக்டோபரில் இரு மன்றங்களினாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டு ஜனாதிபதி லின்டன பி. ஜோன்சினால் (Lyndon B.Johnson) ஒக்டோபர் 15ம் திகதியை வெள்ளைப் பிரம்பு தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. கொழும்பில் 1969 ஒக்டோபர் 4ல் சர்வதேச விழிப்புலனற்றோர் கூட்டமைப்பு நடாத்திய மாநாட்டில் 1970 ஒக்டோபர் 15ம் திகதி முதல் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் பிரகடனப் படுத்தப் பட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வெள்ளைப் பிரம்பானது விழிப் புலனற்றோரின் அடையாளச் சின்னமாக மட்டுமன்றி அவர்களை தனித்தியங்க வைக்கும் ஒரு சாதனமாகவும் விளங்குகின்றது. அத்துடன் பார்வையுள்ளவர்களிடம் இருந்து உதவியைக் கோரும் ஒரு சின்னமாகவும்

விளங்குகின்றது அதாவது போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் வீதிகளில் கடப்பதற்கும், சில இடங்களை அறிவதற்கும் வெள்ளைப் பிரம்பானது பொதுமக்களிடம் உதவி கோரும் சின்னமாகவும் அமைகின்றது.

அத்துடன் முன்னால் நிறுத்தப் பட்டிருக்கும் வாகனம் அல்லது ஏதேனும் தடைகளில் மோதாமல் செல்வதற்கு சக பாதசாரிகளிடம் அழைப்பு விடும் ஒரு சின்னமாகவும் விளங்குகின்றது.

இவ் வெள்ளைப் பிரம்புடன் வீதியில் செல்பவர்கள் பாதையில் முதல் நடந்து செல்லும் உரிமையுடையவர் ஆகினறார். அதாவது அவர் வெள்ளைப்பிரம்புடன் தனியாக வரும் பொழுது ஏனைய பாதசாரிகள் அவருக்கு பாதையை தடை செய்யா வண்ணம் விலகிக் கொடுத்தல் வேண்டும்.

பார்வையற்ற ஒருவர் வெள்ளைப் பிரம்புடன் வீதியைக் கடக்கும் பொழுது வரும் வாகனங்கள் நின்று அவர் செல்ல உதவ வேண்டும்.

வெள்ளைப் பிரம்புடன் பார்வையற்ற ஒருவர் வீதியில் பஸ் தரிப்பிடம் இல்லாத இடத்தில் நின்று மறித்தாலும் வாகனம் அவரை ஏற்றிச் செல்ல வேண்டும்.

வெள்ளைப்பிரம்புடன் செல்லும் ஒருவருக்கு விபத்து ஏற்படின் நீதி மன்றமானது அதை பராயமற்ற ஒருவருக்கு ஏற்பட்ட விபத்தாக கருத இடமுண்டு. பார்வையற்றவர்களுக்கு தற்போது மேலை நாடுகளில் ஒலி எழுப்பி உதவக் கூடிய வெள்ளைப் பிரம்புகளும் பயிற்றப்பட்ட நாய்களும் வழித்துணையாக இருக்கின்றன.

ஒக்ரோபர் 15ம் திகதி வெள்ளைப் பிரம்பு தினம் என்பது பார்வையற்றவர்களுக்கு மட்டுமல்ல எமது சக மனிதர்களாக அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை ஏனைய மக்களுக்கு நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். என்பதை உறுதிசெய்கின்றது. ஆதலால் இத்தினத்தை அவர்களை அணைத்து இந்நாளை அனைவரும் சேர்ந்து அனுட்டிப்பதன் மூலம் அவர்களை உற்சாகப் படுத்துவது மட்டுமன்றி எமது மனத்தலும் அவர்கள் நினைவை உறுதியாக்கிக் கொள்ள முடியும்.

● ● ●

பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது

-சுவாமி விவேகானந்தர்-

# கோபம் மனிதநேயத்திற்கு எதிரான செயல்.

**செல்வி கீ. நிவேதினி,**
13, கலைப்பிரிவு

கோபம் என்பது சாதாரண மனிதராகிய நமக்கு இருக்கும் ஓர் குணம். இதனால் நாம் எதையும் சாதிக்க முடியாது. இதனால்தான் வள்ளுவர் "சின மென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி" என்றார். கோபம் ஒருவரின் உயிரையும் கொல்லக்கூடியது. அது ஒரு விஷப்பாம்பு. அன்பானவர்களிடத்தே கோபமும் இருக்கத்தான் வேண்டும், ஆனால் வாழ்வு முழுவதுமே காரணமின்றி கோபப்படுபவர்களை என்ன செய்ய முடியும்.

மனிதநேயம் ரோஜாப் பூவைப்போல மலர்வது. அதை அழிக்கும் முள்ளாக கோபம் காணப்படுகிறது. நாம் கோபப்படுவதால் பிறர் வேதனை கொள்கின்றனர். என்பதை நாம் உணர்ந்து வாழ்ந்தால் சமுதாயத்தில் நாம் உயர்ந்தவர்களாக வாழலாம். எதற்கெடுத்தாலும் அயலவனுடனும், ஏனையவர்களுடனும் கோபப் படுபவர்களை சமுதாயம் எப்படி மதிக்கும்? கோபம் வாழ்வில் இருக்கவேண்டிய இயல்புதான். ஆனால் கோபமே வாழ்வு என்ற முடிவுக்கு நாம் வருதல் ஆகாது. எம்மைச் சுமந்து கொண்டு நாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு இருக்கின்றாளே! பூமாதேவி அவள் கோபப்பட்டால் நாம் இந்தப் பூமியில் உயிர் வாழ முடியுமா? நிச்சயம் முடியாது.

சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருடனும் கோபப்படுவோமாயின் எம்முடன் யார்தான் கதைப்பார்கள். அனைவரும் எம்மைக் கண்டு பயந்தே ஒதுங்கி விடுவார்கள் எமது முகத்தைப் பார்த்து நாம் மகிழ்ச்சியுடன் இருந்தால் மட்டுமே நம்முடன் கதைப்பார்கள். கோபமாய் காணப்பட்டால் யாரும் அவ்விடம் வரமாட்டார்கள். "ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்" என்பது பழமொழியாகும் கிறீஸ்தவ வரலாற்றில் இயேசுக்கிறிஸ்து கோபப்பட்டிருந்தால் கடவுளின் வாக்கு பொய்யாகி இருக்கும். எம் வாழ்வில் எவ்வளவுதான் சோதனை வந்தாலும் கோபப்படாமல் சாதிப்பவர்களே உண்மையான மனித நேயம் கொண்டவர்கள். கோபம் கொள்பவர் ஆயின் நிச்சயம் உலகம் அவனை ஆழ் குழியில் தள்ளி விடும். யாரும் நம்மிடம் கோபம் கொள்ளும் வகையில் கதைத்தால் அதை அவர்கள் முன் கோபப்படாமல் நிதானத்துடனும், புத்திசாலித்தனத்துடனும் சமாளித்தால் அதைவிடக் கெட்டித்தனம் ஒன்றும் கிடையாது. எனவே நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் மனித நேயத்தை மேலும் மேம்படுத்தலாம். பிறர் நம்மீது கோபம் கொள்ளக் கூடாது. என்று நினைப்பது போல் நாமும் பிறர் மீது கோபம் கொள்ளாது வாழ்வதே மனிதநேயப்பாண்பாகும்.

எனவே மனிதநேயத்துடன் முரண்படும் கோபத்தை போராட்டத்துடன் தடுத்து வாழ்வில் முன்னேறுவோம்.

# கல்லூரிக்கு பெருமை சேர்த்த ஆளுமைமிக்க அதிபர்.



**திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை**
ஓய்வு பெற்ற ஆரம்ப பிரிவுத் தலைவர்,
முன்னாள் பழைய மாணவர் சங்கச் செயலாளர்,
யா/இராமநாதன் கல்லூரி

1992ல் எமது கல்லூரி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர் அமரர் திருமதி மங்கையக்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள். அன்னாரின் தலைமையில் இராமநாதேஸ்வரர் ஆலய குடமுழுக்கு வைபவம் 14.10.1992ல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த நல்ல சகுனத்தில் எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய முன்னைநாள் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் இராமநாதன் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். "காலா காலமாக உப அதிபர்களுக்கே அதிபர் பதவி வழங்கப்பட்டு வந்தது. ஆயினும் வயது முதிர்ந்தவர்களுக்கு அப்பதவியினை வழங்கின் அடிக்கடி அதிபர்களைத் தேடவேண்டிய நிர்ப்பதந்தம் ஏற்படும். எனவே தான் ஆளுமை மிக்கதோர் இளம் அதிபரை உங்கள் கல்லூரிக்கு நியமிக்கின்றேன்" என அந்நாளய கல்விப்பணிப்பாளர் காலஞ்சென்ற திரு.இரா.சுந்தரலிங்கம் அவர்கள் எமக்குக் கூறினார். அவர்தம் கூற்றில் முழுக்க முழுக்க உண்மையிருந்ததைப் பின்னர் நாம் உணர்ந்தோம்.

கல்லூரியோடு எவ்வித தொடர்பும் அற்ற ஒரு பெண்மணி அதிபர் பதவியேற்று 19 ஆண்டுகள் தொடர்ந்து சேவையாற்றியபின், உரிய வயதில் ஓய்வு பெற்றார் என்றால் அவரது மனோதிடம், ஆளுமை, விவேகம், சகிப்புத்தன்மை என்பன தான் காரணமெனில் மிகையன்று. அவர் பொறுப்பேற்றதும் ஆசிரியர் கூட்டத்தினை நடாத்தினார். தம்மைப் பற்றிய அறிமுக உரையின் போது அவர் தம் பேச்சில் இனிமை, எளிமை, குழைவு, அமைதி, தெளிவு, பொருளடக்கம், கேட்போரை ஈர்க்கும் வசீகரத்தன்மை என்பவற்றை நாம் உணர்ந்து கொண்டோம்.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக வலி. வடக்குப் பாடசாலைகள் பலவற்றுடன் ஏனைய கல்வி நிறுவனங்களும் நமது கல்லூரியில் இயங்கிக் கொண்டிருந்தன. கல்லூரி வளாகத்தைச் சுற்றிலும் இராணுவ முகாங்கள், இராணுவச் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கல்லூரி வளாகத்தில் இராணுவ நடமாட்டம் ஒருபுறம். இத்தனை இடர்பாடுகளின் மத்தியில் ஒரு கல்லூரியை நிர்வகிப்பது என்பது சாதாரண விடயமன்று. ஆயினும் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கள் தமது புத்தி சாதுரியத்தினால் நிர்வாகத்தினை சுமூகமாக நடாத்தி வந்தமை பாராட்டத்தக்கதாகும்.

கல்லூரிச் சொத்துக்களனைத்தையும் தமது சொத்தாகவே கருதிப் பேணிக் காத்தார். கல்விசார்ந்த செயற்பாடுகளை அந்தந்தப் பிரிவுத் தலைவர்களிடமும், பாடப் பொறுப்பாசிரியர்களிடமும் ஒப்படைத்து, வேண்டிய வேண்டிய அறிவுறுத்தல்களையும் வழங்கி வந்தார். அவர்களும் வெகு உற்சாகமாகச் செயற்பட்டுக் கல்லூரிக்கும், அதிபருக்கும் பெருமை சேர்த்தனர்.

திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்களிடம் நாம் எளிதிற் காணமுடியாதது கோபம் ஒன்றேயாகும். குற்றங் கண்டாலும் புன்சிரிப்புடன் மறை முகமாகக் கண்டித்து அறிவுரை பகரும் பெருந்தன்மை அவருக்குரியது. இது ஓர் அதிபருக்கு இருக்கவேண்டிய சிறந்த பண்புகளில் ஒன்றாகும்.

இன்னும் கல்லூரியில் நடைபெறுகின்ற வைபவங்களின் ஒழுங்கு நடவடிக்கைகளில் தானே முன்னின்று வழிப்படுத்தவதில் திருப்தி

காண்பவர். இத்தனை திறமைகளுக்கும் பின்னணிக் காரணமுண்டு. அவர்தம் தந்தையார் திருவாளர் நடராசா அவர்கள் சிறந்த எழுத்தாளர், கவிஞர், அவர்தம் நெறிப்படுத்தலில் வளர்ந்த வல்லவர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள். "கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவி பாடும்" என்பது பொய்யல்ல. குடும்ப வாரிசு இவர் ஒருவரேயாயினும், இவரது கல்வித் தகைமைகள், தொழில் மேம்பாடு, சிறந்த குணநலன்கள் யாவற்றையும் கண்டு ஈன்றவர்கள் திருப்தி கண்டார்கள்.

*"மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்"*

என்னும் வள்ளுவன் வாக்கிற்கு உதாரணமாக விளங்கியவர் என்றால் மிகையன்று. தமக்கு ஆண்பிள்ளை இல்லையே என இவர்தம் பெற்றோர் கலங்கியதேயில்லை. தம்மை ஈன்றோருக்கு அவர் ஆற்றிய, ஆற்றிவருகின்ற பணி மகத்தானது. நோயுற்றவேளை பராமரிக்கும் தாதியாக, பசிப்பிணி போக்கும் தாயாக, அன்பான பேச்சாற்றலால் ஆறுதலளித்துப் பேணிக்காத்தவர். தற்போது வயோதிபத் தந்தையாரை ஒரு குழந்தைபோல அரவணைத்து வேண்டிய தேவைகளை நிறைவேறிக் கண்ணை இமைகாப்பது போலக் காத்துவருகின்றமை போற்றத்தக்க விடயமாகும்.

இவை மட்டுமா? செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் பண்பு இவருக்குண்டு. இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குச் சென்று அல்லலுற்ற வேளையில் எத்தனையோ பேரின் பசிப்பிணி போக்கி ஆறுதலளித்த பெருமாட்டி. பெற்றோரைப் பிரிந்து விடுதியில் தங்கியிருக்கும் மாணவிகளுக்குத் தாய்போலப் பரிவுகாட்டி ஆதரவு நல்கி வந்தவர் நம் அதிபர். உயர்கல்விக் குடும்பத்திற் பிறந்தவர்களுக்கும் நோய் என்பது பொதுவானது. அதற்கு அம்மையாரின் அன்புக் கணவர் விதிவிலக்கல்லர். அவர் நோய்யுற்ற வேளை அவரைக் குணப்படுத்த வேண்டுமென்ற ஆவலால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பலமுறை அழைத்துவந்து வைத்திய நிபுணரிடம் ஆலோசனையும் சிகிச்சையும் பெற்று வந்தனர். எப்படியாவது அவரைக் குணப்படுத்திவிட வேண்டும் மெனற உறுதிப் பாட்டுடன் செயற்பட்டும் தோல்வியே கண்டார். நினைப்பதெல்லாம் நடப்பதில்லை இது இறைவன் நியதி என்பது உண்மையாயிற்று.

1993இல் எமது பழைய மாணவர் சங்கம் கலைவிழா ஒன்றினை நடாத்தி நிதி சேகரிக்க முற்பட்டது அந்த வேளையில் அம்மையார் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் நியமிக்கப்படவில்லை. எனினும் பூரண ஆதரவு நல்கி வந்தார். அனுமதிச் சீட்டுக்கள் விற்பனைக்காக கல்லூரிச் சமூகத்திடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. விழாவிற்குச் சில தினங்களே இருந்தன செயலாளரான எனக்கு நிதியினை முழுமையாக வசூலிக்கவோ, இந்நிகழ்வில் முற்றுமுழுக்க ஈடுபடவோ இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் அதிபர் அவர்களது திறமையால் நான் செய்யவேண்டிய அனைத்து செயற்பாடு களையும் எனைய அங்கத்தவர்கள் மூலம் செய்வித்து கலைவிழாவினையும் நடாத்தி வைத்தார். இந்தப் பேருதவியை என்னால் என்றுமே மறக்க இயலாது, நன்றி கூறும் கடமைப்பாடும் எனக்குண்டு.

திருமதி. ஆ. சிவஞானசுந்தரம் அவர்களுக்கும் எனக்கும் ஒரு விதத்தில் ஒற்றுமையுண்டு நான் 19 ஆண்டுகள் தொடர்ச்சியாக செயலாளராகப் பதவி வகித்த பின் விலகிக் கொண்டேன். எமது அம்மையார் அவர்கள் 19 ஆண்டுகள் ஒரே கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய பின் ஓய்வு பெற்றார்.

அவரது அருமருந்தன்ன ஏக புத்திரன் ஆரூரனின் ஆனந்த வாழ்வினைக் கண்டு பூரிப்படைய வேண்டும். அம்மையாரும் வாழ்வுடன் நீண்டகாலம் வாழ்ந்து பணிகளைத் தொடர வேண்டும். என எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை இதயபூர்வமாக இறைஞ்சுநின்றேன்.

# அரவணைத்து ஆதரவளிப்பவர்.



**திருமதி ப. பத்மநாதன்,**
ஓய்வுபெற்ற உப அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.

*"பொன் பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்கு பண்மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி"*

இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்லூரி சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகும். பெண்களின் கல்விக்காக முதன் முதலில் யாழ்ப்பணத்தில் ஆரம்பிக்கப்பட்ட உயர்ந்த கல்விக்கூடமாகும். தீர்க்கதரிசியும், ஆன்மீக வாதியும்பேரறிஞருமாகியசேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 1913ம் ஆண்டு இக்கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்கள். சைவத்தமிழ் பண்பாட்டுவிழுமியங்கள் சார்ந்த ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்ற பரந்த நோக்கில்தான் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1913ம் ஆண்டிலிருந்து 1936ம் ஆண்டு வரை பிற நாட்டினைச் சேர்ந்த மேற்கத்தைய நாட்டுப் பெண்களே அதிபர்களாகக் கடமையாற்றினார்கள் 1937ம் ஆண்டிலிருந்து 1992ம் ஆண்டு செப்ரெம்பர் வரை 13 பெண் அதிபர்கள் ஆன்மார்த்தமாகத் தம்மை அர்ப்பணித்துக் கடமையாற்றினார்கள் இவர்கள் இந்து கலாச்சார, தமிழ்ப் பண்பாட்டு மேம்பாடுகளுன் கூடிய ஒரு உயந்த கல்விச் சமுதாயத்தை உருவாக்கிய பெருந்தகைகளாக விளங்கினார்கள்.

இப் புகழ்பூத்த கல்லூரியில் திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் அவர்கள் 1992ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ம் திகதி அதிபராக நியமனம் பெற்று வருகை தந்தார்கள். அன்று இராமநாதேஸ்வர ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றுக்கெண்டிருந்தது. அந்த நற்தினத்தில் கல்லூரித் வளாகத்தில் காலடி எடுத்து வைத்த காரணத்தால் போலும் 18 ஆண்டுகள் தொடர்ச்சியாக அதிபராக கடமையாற்றிக் கல்லூரி வரலாற்றின் சாதனை நாயகியாகத் திகழ்கின்றார். இக்காலம் அவரது சேவைக்காலத்தின் ஒரு மைற்கல் என்று கூறின் மிகையாகாது. இவரது ஆளுமைத்திறனாலும், அன்பாலும், பண்பாலும் அனைத்துக் கல்லூரிச் சமூகத்தினரையும் அனுசரித்துப் பழகும் தன்மையினாலும், கல்லூரியின் சார்பில் சாதித்த சாதனைகள் பெறுமதிமிக்கவையாகும்.

பாடவிதானச் செயற்பாடுகளில் ஆசிரியர் களின் கற்பித்தலில் நுட்பங்களைத் திட்டமிட்டு, செயற்திறன் மிக்கதாக வடிவமைப்பதில் அதீத கவனம் செலுத்துவார். இதன் காரணமாகப் பரீட்சைகளின் போது சிறந்த அடைவு மட்டங்ளை அடைய வழிசமைத்ததெனலாம். ஒரு சிறந்த தலைமைத்துவம் உள்ளவர்கள் நடவடிக்கைகளை யாரிடம் ஒப்படைப்பது, எவ்வாறு செயற்படுவது, வடிவமைப்பது என்பவற்றில் ஆனந்தி அவர்கள் நுட்பமான கவன ஈர்ப்புடையவராகவும் இருந்தார் இது அவரது ஆளுமை வெற்றிக்கு ஒரு காரணமாய் அமைந்தது. "இதனை இதனால் இவன் முடிப்பன் என ஆய்ந்து அதனை அவன் கண் விடல்" என்ற பொய்யாமொழியாரின் வாக்கிற்கு அமைவாகப் பணிக்கும் இயல்பு, திணிக்கும் இயல்பு என்பவற்றில் அதீத கவனம் செலுத்துவார். இது ஒரு சிறந்த தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் இக்காலப் பகுதியில் ஈட்டிய சாதனை களுக்கு ஆனந்தி அவர்களின் சிறந்த முகாமைத்துவமே காரணமாக அமைந்தது. விளையாட்டுப் போட்டி, தமிழ்விழா, திருமுறை விழா, கலைவிழா போன்ற நிகழ்ச்சிகளின் போது திட்டமிடல், நேரமுகாமைத்துவம், ஒழுங்கமைப்பு, ஆசிரிய மாணவர்களின் கூட்டுப்பொறுப்பு, அழகுணர்ச்சியாவற்றிலும் தன்னை ஈடுபடுத்தி அதீத கவனம் செலுத்தி அவற்றின் மூலம் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொள்ள வழிவகுப்பார். அடுத்து கோட்ட மட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டம், என நுண்கலை நிகழ்ச்சிகள் பெரு விளையாட்டுக்கள் ஏனைய போட்டிகளுக்கு மாணவர்கள் செல்லும் பொழுது அதிபர் அவர்களும் உடன் சென்று அவர்களை ஊக்குவித்து அவர்களின் வெற்றிக்கு உந்து சக்தியாகச் செயற்படுவார். திருகோணமலை, கொழும்பு பிற மாவட்டங்களுக்கு செல்லும் போதும் அவர்களது தேவைகளை கவனிப்பதற்காக உடன் சென்று முற்று முழுதாகத் தன்னை அர்ப்பணிக்கும் ஆற்றல் அவரிடம் காணப்பட்ட ஒரு முன்மாதிரியான செயலாகும் அத்துடன் அவரது கணவர் திரு.சி.சிவஞானசுந்தரம் அவர்களும் மாணவர்களின் தேவைகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து ஆதரவளிப்பார். இது ஆசிரியர் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுதக் கூடியதாக அமைந்தது.

கல்லூரியின் வளங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதிலும் தானே பொறுபேற்று செயற்படுவார். 1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையினர் கல்லூரிவளாகத்தில் முகாமிட்டு இருந்ததினாலும். 1995, 1996 களில் இலங்கை இராணுவ நடவடிக்கை களினாலும் ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்வதற்கு பலவிதமான இடர்பாடுகளை எதிர்கொண்டார். எனினும்

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணிய திண்ணிய ராகப் பெறின்"*

என்ற குறட்பாவிற்கு அமைவாக திட சிந்தையுடனும், விடாமுயற்சியுடனும் கருமமாற்றி அனைத்து வளங்களையும் சீர்செய்து கல்லூரித்தேவைகளை நிறைவு செய்தார். இவற்றுக்கெல்லாம் அவருடைய தொடர்பாடற் திறன்தான் மூலகாரணமாய் அமைந்தது. அதவாது தொடர்பாடற் திறன் எவ்வளவுக்கு சிறப்பானதாகவும், வினைத்திறனுடையதாகவும் அமைகின்றதோ அந்த அளவுக்கு தலைமைத்துவப் பணி சிறப்படையும் இதற்கு உதவியாக இருந்தது. அவரது மும்மொழித்திறன் என்றே கூறலாம். கல்வித்திணைக்களம், பழைய மாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர் அரசசார்வற்ற நிறுவனங்கள் ஆகிய அனைத்துச் சமூகத்தினருடனும் தொடர்பு கொண்டு வேண்டி வளங்களைப் பெற்று கல்லூரி பூரணத்துவமான புதுப்பொலிவுடன் காட்சி அளிக்க வழி ஏற்படுத்தினார்.

1995ம் ஆண்டு பாரிய இடம்பெயர்வு ஏற்பட்டு 1996ல் மீள் குடியமர்வின் பின் 1987ல் மூடப்பட்ட விடுதிச்சாலை 1997ம் ஆண்டு சொற்ப மாணவிகளுடன் பல கஷ்டங்களின் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக மாணவர் தொகை அதிகரித்து 100க்கு மேற்பட்ட மாணவிகளுடன் விடுதிச்சாலை இயங்கிக் கொண்டு இருக்கின்றது. ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று மிகச் சிறப்பாகக் கூடிய மாணவிகளைக் கொண்ட விடுதிச்சாலை உள்ள கல்லூ ரியாக இராமநாதன் கல்லூரி உள்ளது. இது ஆனந்தி அவர்களின் தலைமைத்துவச் சிறப்பிற்கும், அன்புடன் அனுசரித்துப் பழகும் பெரும் தன்மைக்கும் ஓர் உதாரணமாகும்.

இராமநாதன் கல்லூரியில் ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் அதிபாரக இருந்து ஆற்றிய செயற்பாடுகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது கல்லூரி ஸ்தாபகர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் உருவச்சிலையைக் கல்லூரி

முன்றலில் அமைப்பித்தமையாகும் கேடில் விழுச் செல்வமான கல்விச் செல்வத்தை தமிழ் பெண்களுக்காக அர்ப்பணித்துச் சென்ற பெரு வள்ளின் கம்பீரத்தோற்றம் காலங் காலமாக வாழுகின்ற சைத்தமிழ் சமூகத்தினரின் கண்களுக்கு விருந்தாக மிளிர வேண்டும் என்ற அவாவினைச் செயல்வடிவமாக்கினார். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற முதுமொழிக்கமைவாக அவரது உயர்ந்த எண்ணம் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 80 ஆண்டுகளுக்குப் பின்னராவது அவரது சிலை வடிவமைக்கப்படுவது போற்றற்குரிய செயல் எனக்கருதிய பாடசலை அபிவிருத்தி சங்கத்தினரால் 1994ம் ஆண்டில் அதிபர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று உடனடியாக செயற்பட்டு உருவச்சிலை உருவாக்கப்பட்டது. ஆனந்தி சிவஞான சுந்தரம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இப்பணியானது இராமநாதன் அவர்களின் உத்தம பணியினை நன்றியுடன் நினைவுகூர வைப்பதுடன், அதிபர் அவர்களின் அரும்பணி காலங்காலமாக கல்லூரி வரலாற்றில் இடம்பெறும் என்பதில் ஐயம்மில்லை

"ஆனந்தி" என்ற பெயர்ப்பொருத்தம் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற் பதிலும், "மனிதம்" என்ற உயர்ந்த பண்பினை வெளிக்காட்டும் உதாரண மங்கையாகவும் அவரைக் காணமுடிந்தது. அனைவரது இன்ப, துன்ப நிகழ்வுகளின் போது தவறாது இணைந்து கொள்வதுடன் கல்லூரிச் சமூகத்தினரையும் பங்குகொள்ளவேண்டும் என்று பணிக்கும் இயல்பினை உடையவர். கண்டிப்பான நிர்வாகியாகத் தோற்றமளிப்பார் ஆனால் நெகிழ்வுத்தன்மை அங்கே இலைமறைகாயாகக் காணப்படும். இத்தகைய நெகிழ்வுத்தன்மை அவருக்கு சிலசந்தர்ப்பங்களில் நிர்வாகச் சிக்கல்களை ஏற்படுத்தினாலும் நெஞ்சில் உரத்துடனும், நேர்மைத்திறத்துடனும் எதிர்கொண்டு சுலபமாக பிரச்சினைகளை தீர்க்கும் திறன் படைத்தவர்.

இவரது தந்தையாரின் தமிழ்ப் புலமையும் இவரது திறமைக்கு மூல காரணமாயமைந்தது. அத்துடன் குடும்பக் கல்விப்புலம் தலைமைத்துவத்திற்கும் ஆளுமைத் திறனுக்கும் உந்து சக்தியாக அமைந்தது. மேலும் இவரது அறிவுத்திறன் வெளிப்படுவதற்குச் காரணமாக அணி சேர்த்தது கல்வி நிர்வாக சேவையில் சித்தி அடைந்தமையாகும். இதன் மூலம் ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் சேவையில் பூரண திருப்தியை மணிவிழாக்காலத்தில் பெற்றுள்ளமை இராமநாதன் கல்லூரிச் சமூகத்தினருக்கு பெருமை சேர்ப்பதாகவும், மனமகிழ்ச்சியளிப்பதாகவும் அமைந்துள்ளது. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் ஓய்வு காலத்தில் பூரணமகிழ்ச்சியுடனும், தேக ஆரோக்கியத்துடனும் வாழவேண்டும் என சிவகாமிசுந்தரி சமேத நடராஜப் பெருமானை பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

# நான் கண்ட அதிபர்



**திருமதி க. சிவசோதி,**
ஓய்வு பெற்ற உப அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.

*"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்"*

இக்குறளுக்கு ஏற்ப தம் ஏக புத்திரியை வளர்த்தெடுத்து பெருமை பெற்று விட்டனர் திரு. நடராசா தம்பதிகள் இதற்குக் கைமாறாக மகளும் "இவன்(ள்) தந்தை என்நோற்றான் கொல்" எனும் சொல் பொய்த்துவிடாது நன்றிக் கடனை செலுத்திக் கொண்டிருக்கிறார். அவர்களின் வாழ்நாளிலேயே பெற்றோருக்கு பெருமை தேடிக் கொடுத்துத் தானும் அடக்கமான பெருமையுடன். அதிபராக கடமையாற்றிப் பல சாதனைகள் செயற்திட்டங்களை பாடசாலையில் முன்னெடுத்துப் பாடசாலையைச் சோலை வனமாக மாற்றிப் பலராலும் பாராட்டப் பெற்றவர்தான். திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள்.

கல்லூரிப் பழைய மாணவிகள் தான் இராமநாதன் கல்லூரி அதிபராகக் கடமை ஏற்க வேண்டும் என்ற கல்லூரி யாப்பை மாற்றி அமைத்தவர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள். அதற்கு ஏற்றவாறு நிர்வாகம், ஆக்கம், கல்வி விளையாட்டுத்துறை, கலைத்துறை, ஆங்கில அறிவுப் போட்டி என ஒவ்வொரு துறையிலும் மாணவர்களை ஊக்குவித்து அந்தந்தத் துறை சார்ந்த ஆசிரியர்களையும் உற்சாக படுத்திப் பல வெற்றிகளைத் தேடிக்கொண்டவர்.

அவர் பாடசாலையில் தங்கியிருந்த படியால் விடுதிச் சாலையை வளர்க்க முடிந்தது. பாடசாலை சம்பந்தமான சகல தொழிற்பாடுகளுக்கும் அன்னாரது கணவரும், தந்தையாரும் தோள்கொடுத்து உதவினர். ஆனந்தி பிறர் மதிப்புக்கும் போற்றுதலுக்கும் இலக்கானார். எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் ஆற்றலையும் பெற்றார்.

**சேவைக்காலத்து சாதனைகள்:-**

7 பேருடன் ஆரம்பித்த விடுதிச்சாலை இன்று 100க்கும் அதிகமான பெண் பிள்ளைகள் தங்கியிருந்து படிக்கும் வசதி கொண்டதாக வளர்ந்துள்ளது. அதிபரது கணவரும், தகப்பானாரும் விடுதி மாணவர்களுக்குக் கற்பித்தனர். வகுப்பு 8 - 11 வரை ஆங்கிலம், விஞ்ஞானம் கணவராலும் மற்றும் தமிழ், சமயம், சமூகவியல் தகப்பானாராலும் சொல்லிக்கொடுக்கப்பட்டது.

பெண் குழந்தை இலலாத குறை விடுதிமாணவர்களால் நீக்கப்பட்டது. விடுதி மாணவகள் நோய்வாய்ப்பட்ட சமயங்களில் தானே ஏற்ற உணவுகளைச் செய்து கொடுத்து பராமரித்து ஒரு தாய் போல் அவர்களைப் பாதுகாத்தார். ஆம், விடுதி மாணவர்கள் அவர்களது செல்லப்பிள்ளைகளாயினர்.

தேசிய கல்வியற் கல்லூரி ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக கட்டப்பட்டது என்றால் அது எமது அதிபரையே சாரும். இடுக்கண் வந்த போது கைகொடுத்த பெருமை - அதாவது கல்வியியற் கல்லூரி இயங்க வேண்டுமாயின் தங்குமிடத்துடன் கூடிய வசதி வேண்டும். அதற்காக விடுதியின் ஒரு பகுதியை அவர்கள் தங்கிப் படிக்கவும், சமைப்பதற்குச் சமையலறையும் கொடுத்து உதவினார். கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணத்தில் உருவானது என்றால் அது எமது அதிபர் ஆனந்தி அம்மாவின் அனுசரணை என்றே கூறலாம்.

எல்லாவற்றிற்கும் மேலானபெருமை எந்தப்பாடசாலையிலும் இல்லாத பெருமை ஸ்தாபகர் உருவச்சிலை வைத்தது. சேர் பொன் இராமநாதன் அவர்களின் உருவச்சிலையைப் பல இடர்பாடுகளின் மத்தியில் கல்லூரி முன்றலில் பதித்த பெருமை திருமதி ஆனந்தி அவர்களை சேரும். பயங்கரவாத யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களை பாடசாலையில் தங்கவைத்தும், உணவளித்தும், ஆதரித்ததும் சமூகசேவையை எத்துக் காட்டும். மேலும் அண்மையில் ஏற்பட்ட நிஷா புயல் தாக்கத்திற்கும் புலம் பெயர்த்தோரை பாடசாலையில் தங்க வைத்தும் ஆதரித்தார்.

பௌதிக வளத்தைப் பெருக்கிப் பல புற நிகழ்வுகள் நடத்த ஒழுங்கு செய்து கொடுத்துள்ளார். மாணவிகளின் பல துரைற வளர்ச்சிக்கும் அந்தந்த ஆசிரியர்களுடன் தோள் கொடுத்து வழிநடத்திப் பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்தார். பாராளுமன்றத்திற்கு வாணிவிழாவிற்காக கலை நிகழ்ச்சி கொண்டு போனது எமது கல்லூரிதான். சிங்கள மொழியை அதிபர் கற்றிருந்தபடியால் எமது நீண்ட பயணங்கள் இலகுவாக முடிந்தது. எமக்குச் சோதனைச் சாவடிகளில் ஏற்படும் இடர்களை நீக்க அவரது மொழியாற்றல் பயன் பட்டது. நாமும் எமது போட்டிகளுக்கு பயமின்றிச் சென்றோம். வெளிமாவட்டத்தில் நடாத்தப்படும் இயல், இசை, நாடகப் போட்டிகள் விளையாட்டுப்போட்டிகள் ஆங்கில தினப் போட்டிகள் யாவற்றிற்கும் தானும் கூடவே சென்று உதவிபுரியும் பெருந்தன்மையும் அடக்கமான பண்பும் உடைய அதிபர்தான் ஆனந்தி அவர்கள்.

முத்தமிழ் விழா எடுத்து தன் சேவைக் காலத்தில் கல்லூரிக்கு புகழ் தேடிக்கொடுத்தார். சங்கீத நடன ஆசிரியர்கள் அனைவரையும் பொன்னாடை போத்திக் கௌரவித்த பெருமை திருமதி ஆனந்தி அவர்களை மட்டுமே சாரும். மற்ற எந்தப் பாடசாலையிலும் இப்படி ஒரு நிகழ்வு இடம் பெற்றதாக இல்லை.

அன்னாரது கலை உணர்வு உயர்கல்வி வளர்ச்சி சகலதையும பார்த்து பெருமையடையும் தந்தையுடன் சேர்ந்து நாமும் பெருமை அடைவோமாக. தந்தையார் இயற்றிய "இராமநாதம்" என்றும் இக்கல்லூாயில் ஒலித்துக்கொண்டிருக்கும். தொண்டு செய்யும் நற்பண்புடைய இவர்கள் எங்கிருந்தாலும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி வணங்குகின்றோம்.

# ஆளுமைமிக்க அதிபர்.



**திருமதி ப. தியாகலிங்கம்,**
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.

எமது கல்லூரியின் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் கல்லூரியில் மிக நீண்ட காலமாக, கிட்டத்தட்ட 18 வருடங்களாக சேவையாற்றியுள்ளார். இது வரை எந்த அதிபருக்கும் கிடைக்காத பாக்கியம் அவருக்குத் கிடைத்திருக்கிறது.

அவரது நீண்டகாலச் சேவையின் போது அவருடன் அவரது காலம்வரை ஆசிரியராக, உபஅதிபராக உடன் இருந்து பணியாற்றும் சந்தர்ப்பத்தை இறைவன் எனக்கும் அளித்திருக்கிறார். அதன் பயனாக அவரது ஆளுமை, செயற்றிறன், நற்பண்புகள் என்பவற்றை என்னால் உணர முடிந்தது. கல்வி, செல்வம், வீரம் இவை மூன்றும் ஓரிடத்தில் அமையாது என்பார்கள். ஆனால் ஆனந்தியிடம் இவைகள் மூன்றும் ஒருங்கே கூடி இருந்ததை யாரும் அறியாமல் இருக்கமாட்டார்கள்.

இவர் மும் மொழிகளிலும் ஆற்றலுடையவர். இவருக்கிருந்த மும்மொழி ஆற்றல் அவரது நிர்வாகத்தை செயற்றிறனுடையதாக ஆற்றுவதற்கு உதவியாக இருந்தது. தான் எடுத்த எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலுடன் தானே களத்தில் இறங்கிச் செய்து முடிக்கும் திறன் படைத்தவர்.

கல்லூரியின் நிர்வாகத்தில் மட்டுமல்ல அங்கு நடைபெறும் சகல நிகழ்வுகளும் அவரது ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனுமே நடைபெறும். சோர்வு, பின்வாங்கல், தட்டிக்கழித்தல் என்பவற்றிற்கு இவரிடத்தில் இடமே கிடையாது.

நாட்டின் இக்காட்டான சூழ் நிலைகளிலும் கூட தற்துணிவுடன் செயற்பட்டு கல்லூரியின் உயர்வுக்காக உழைத்தவர் என்றால் மிகையாகாது. கலைத்துறை, விளையாட்டுத்துறை போன்ற இணைப்பாட விதானங்களுக்கும் ஊக்கமளிப்பவர். இவரது ஊக்கத்தின் பயனாக இத் துறைகள் தேசிய மட்டம் வரை சென்று வெற்றியீட்டி உள்ளன.

அதிபர் அவர்கள் கல்லூரியைப் பொறுப்பேற்கும் பொழுது பல அழிபாடுகளுடனும், பாடசாலைப் பொருட்கள் களவாடப்பட்ட நிலையிலும் தளபாடங்கள் சிதைவடைந்த நிலையிலும் இருந்தது. அழிபாடுகளை திருத்துவதற்கும், ஒவ்வொரு பொருட்களாக வாங்கி சேர்ப்பதற்கும், இவர் எத்தனையோ தனிநபர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும் நாடிப் பொருளுதவிகளையும் நிதியுதவிகளையும் பெற்றுள்ளார்.

அது மட்டுமல்ல நாட்டுச் சூழல் காரணமாக மூடப்பட்டிருந்த மாணவர் விடுதியை மீள ஆரம்பிப்பதற்கு அவர் எடுத்த பிரயத்தனத்தைப் கூறவே முடியாது. இரு பிள்ளைகளுடன் ஆரம்பித்து படிப்படியாக

நூற்றிற்கு மேற்பட்ட பிள்ளைகள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தியவர். தனது வசதிக் குறைவுகளையும் பாராது கல்லூரியிலே தானும் தங்கி இருந்து விடுதியைத் தனது மேற்பார்வையில் வைத்திருந்தார். விடுதி மாணவர்களின் தாயாக இருந்து அவர்களது தேவைகளையும் நிறைவேற்றி வந்தார்.

ஆசிரியர் குழாத்தின் நன்மை தீமைகளில் தவறாது பங்கு கொள்ளும் மனித நேயங் கொண்டவர். வீட்டுக்கு வருபவர்களை இன் முகத்துடன் வரவேற்று விருந்தோம்பும் பண்பு இவருக்கு ஆண்டவன் கொடுத்த தனிக் கொடையாகும். ஆனந்தி அவர்களுக்கு பெருமை சேர்க்கும் பண்பாளர்களாக அவரது தந்தையாரும் கணவரும் திகழ்ந்தார்கள்.

கல்லூரியைத் திறம்பட நடாத்துவதற்கு கணவரின் செயற்பாடான விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு அவருக்குக் கிடைத்தது. இதனால் கல்லூரியிலேயே தங்கி இருந்து நிர்வகிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இவரது தந்தையார் கல்லூரியின் உயர்வுகளுக்கு மாணவர்களை ஆற்றுப் படுத்தி போட்டிகளில் பங்கு பெற வைத்து அவர்கள் பரிசில்களைப் பெறுவதைக் கண்டு மகிழ்வார்.

இத்தகு பொருமைகளையும், சிறப்புக் களையும் பெற்றவர் ஏனையோரைப் போலல்லாது ஓய்வு பெறும் போதும் பதவி உயர்வுடன் ஓய்வு பெறும் பேற்றினைப் பெற்றுள்ளமை எல்லோராலும் பாராட்டிற்குரியதாகும். பதவி உயர்வுடன் மணிவிழாக்காணும் ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களைப் பல்லாண்டுகாலம் இன்னும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுச் சேவையாற்ற வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது தந்தையையும், மகன், மருமகள் யாவரையும் குடும்பச் சிறப்புடன் வாழ வாழ்த்துவதில் மகிழ்வும் மனநிறைவுமடைகிறேன்.

உடல் பலவீனத்தையோ மன பலவீனத்தையோ
உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.

- சுவாமி விவேகானந்தர் -

# கல்லூரிப் பெருமையை பேணிக்காத்த பெருந்தகை.



**திரு. வை. பாலேந்திரா**
ஓய்வு பெற்ற உபஅதிபர்
யா/இராமநாதன் கல்லூரி

சைவப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காகச் சேர் பொன். இராமநாதன் அவர்கள் பல பாடசாலைகளை ஆரம்பித்தார். அதில் சைவ மங்கையரின் கல்வியில் கருணை கொண்டு சகல வசதிகளும் கொண்ட இராமநாதன் மகளிர் கல்லூரியை 1913ம் ஆண்டு நிறுவினார். இக்கல்லூரியில் ஆரம்பகாலத்தில் ஆங்கிலேயப் பெண்மணிகள் அதிபராகக் கடமையாற்றினார்கள். 1936ம் ஆண்டிற்குப்பின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள். இவ் அதிபர்களின் வரிசையில் 1992ம் ஆண்டு திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரிடம் ஆளுமை, நினைத்த காரியத்தைத் திறம்படச் செய்து முடிக்கும் ஆற்றல் நிறைந்து காணப்பட்டது. இதனால் இவர் கல்லூரிக்கு அதிபராக கிடைத்தமை கல்லூரி செய்த பேறு என்றே கருதவேண்டும்.

கல்லூரிக்கு விஜயம் செய்த அதிபர் கல்லூரி வளாகத்தைச் சுற்றிப் பார்த்தபோது அவர் மனதில் இவ்வளவு வசதிகளையும் செய்து தந்த வள்ளலுக்கு ஒரு நினைவுச் சின்னம் இல்லையே என்பது அவர் மனதில் பெரிய குறையாகத் தென்பட்டது. நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டதனால் அதை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் செயலில் இறங்கினார். இச் செயலுக்குப் பல தரப்புகளிலும் ஆதரவு பெருகியது. இதில் காலம் சென்ற தங்கம்மா அப்பாக்குட்டி, காலம் சென்ற கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் குறிப்பிடத்தக்கவர்கள். இது தவிரப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்போடு இராமநாதனின் சிலை பாடசாலை நுழைவாயிலில் கட்டி முடித்து கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. இச்சிலை 30.11.1994ம் ஆண்டு மிகவும் கோலகலமாக அதிபர் தலைமையில் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்பட்டது. இச் சிலையை ஸ்தாபித்தது அதிபருக்கு கிடைத்த பெரிய பேறு என்றே கருதவேண்டும்.

இக்கல்லூரியில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பழைய மாணவர்கள். இது மாணவர்களுக்கும் முன்பு கற்ற பழைய மாணவருக்கும் அக்கா என்ற உறவை ஏற்படுத்தியது இதனால் மாணவர்கள் ஆசிரியர்களை அக்கா என்றே அழைக்கலாயினர் இது மாற்றப்படவேண்டிய ஒரு செயற்பாடாக இருந்தது. இதனால் அதிபர் அக்கா என்று கூப்பிடும் பிள்ளைகளுக்கு "Teacher" என்று கூப்பிடும் படி வலியுறுத்தினார். ஆரம்பத்தில் இது சற்றுச் சிரமாக இருந்தது. நாளடைவில் அதுவும் வெற்றியளித்தது. இவ்வாறு எடுத்த காரியங்களில் வெற்றி கண்டு பாடசாலை சுமூகமாக இயங்கிக் கொண்டிருந்தது.

இவ்வேளையில் நாட்டில் அசாதாரண நிலை தோன்றிற்று இது பாடசாலையைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாயிற்று. அதிபர் அப்போது பாடசாலையில் தங்கியிருந்தார், எல்லோரையும் வலிகாமத்தை விட்டு வெளியேறும் படி பணித்தமையால் ஆசிரியர்கள் அதிகமானோர் தென்மராட்சி சென்று விட்டனர். அதிபர் அவர்கள் தன்னந்தனியே சில முக்கிய ஆவணங்களை எடுத்துக் கொண்டு இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் தென்மராட்சி வந்து சேர்ந்தார். அவர் முக்கிய ஆவணங்களை எடுத்து வராவிடில் நாங்கள் மாதாந்தச் சம்பளம் பெறுவதற்கு சிரமப்பட்டிருப்போம். அவரின் சுயநலமற்ற இச்செய்கை பெரும் பொறுப்புணர்ச்சியை காட்டுகின்றது. இது தனது ஆசிரியர்களின் நன்மை கருதி செய்த செயலேயாகும்.

மீண்டும் நாங்கள் யாழ்ப்பாணம் வந்து பாடசாலையைப் பார்த்தபோது பொருட்கள் களவாடப்பட்டும், சேதமாக்கப்பட்டும், ஒருபுறம் அகதிகள் நிறைந்தும் காணப்பட்டது. இச் சூழலில் பாடசாலையை அதிபர் மீள ஆரம்பித்து படிப்படியாக முன்னேற்றம் செய்தார். இந்நேரத்தில் வலி வடக்குப் பாடசாலைகள் ஏழு இக்கல்லூரி வளாகத்தினுள் கல்வித்திணைக்களத்தின் பணிப்பின் பேரில் அடைக்கலம் புகுந்தன. இதனால் அதிபர் அவர்களுக்குப் பிரச்சினை இரட்டிப்பு மடங்காகியது. புலம் பெயர்ந்த பாடசாலைகளில் அனேகமானவை கலவன் பாடசாலைகளாகும் இதனால் ஏற்படும் பிரச்சினைகள் ஒரு புறம் இருக்க, தண்ணீர்ப்பிரச்சினை, மலசலகூடப் பிரச்சனை, பாடசாலை தொடங்கும் முடிவடையும் நேரப்பிரச்சினை இவை எல்லாவற்றையும் ஏனைய அதிபர்களோடு கலந்தாலோசித்துச் சுமூகமாகத்தீர்த்துப் பாடசாலையை அதன் தரத்தில் குறைய விடாமல் பாதுகாத்தார். போட்டிகளில் வெற்றியீட்டிக் கல்லூரி முன்னணியில் திகழ்ந்தது. இவற்றிற்கெல்லாம் எங்களின் அதிபரின் சாதுரியமும், செயற்திறனும் என்றால் அது மிகையாகாது.

பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரதும் தனிப்பட்ட பிரச்சினைகள் அறிந்து வைத்திருப்பார். இது அவருக்கு முகாமைத்துவத்திற்கு பெரிதும் உதவின. அதேபோல ஆசிரியர்களின் செயற்திறமையை நன்கு அறிந்து வைத்திருப்பதால் அவர், அவர்களுக்குரிய வேலைகளை வழங்கினார். அதிபர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியை நடத்துவதானால் அது அவருக்கு பூரண திருப்தியாக இருக்க வேண்டும். அன்றேல் அந்த நிகழ்ச்சியை நடத்த அனுமதிக்கமாட்டார். பாடசாலையைப் பொறுத்த மட்டடில் எல்லோருடைய ஒத்துழைப்புடனும் பாடசாலையை நடாத்தி வந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் 17 வருடங்கள் அதிபரோடு கடமையாற்றி உள்ளேன். இறுதி ஐந்து வருடங்களும் என்னை உப அதிபராக நியமித்திருந்தார் முதலாவது ஆண் உப அதிபர் என்ற கௌரவத்தையும் பெற்றேன். இது அவர் ஆசிரியர்கட்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப கடமைகளை வழங்கும் செயலாகும்.

பாடசாலைக் குழுக்கள் போட்டிக்குக் கொழும்பு செல்ல நேரிட்டால், முதலாவது கேள்வி அதிபரும் வருவாரோ? என்பதுதான். ஏனெனில் அதிபர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மும்மொழிகளிலும் ஆற்றல் உள்ளவர். அவர் துணையாக வந்தால் முகாம்களில் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை பகருபவர். நாம் பிரச்சினையின்றிப் போய் வரலாம் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தது. சேர். பொன் இராமநாதனால் கட்டப்பட்ட சைவப் பெண்கள் கல்லூரியை நாலாதிசையும் பெருமை பேசும் அளவிற்கு வளர்த்த பெருமை எங்கள் அதிபரையே சாரும்.

# அகவை அறுபதின் அனுபவமுதிர்வில்
# ஆனந்தியிடம் ஆனந்தத்துடன்
# பெற்றுக்கொண்ட நேர்காணல்



திரு சி. சிவராஜன்
அதிபர்/உளவளத்துணையாளர்,
யா/பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயம்,
தெல்லிப்பழை.

22.09.2011 ஆம் திகதி இனிய மாலை வேளைப் பொழுதில் வலிகாமம் கல்வி வலயப்பணிமனையில்......

**சிவா** :- வணக்கம் அம்மா! அகவை அறுபதிலும் ஆனந்தமாகப் பணிபுரியும் தங்களுடன் நேர்காணலில் ஈடுபடுவதில் மகிழ்வடைகிறேன்.

**ஆனந்தி** :- நன்றி; நீங்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப நேரம் ஒதுக்கியுள்ளேன்.

**சிவா** :- இரண்டு தசாப்தகாலத்திற்கு முன் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் உங்களை சந்தித்த போது இருந்ததை நினைக்கிறேன். அந்த மலர்ச்சியுடன் இப்பொழுதும் பணியில் உள்ளீர்கள் அது பற்றிச் சொல்லமுடியுமா?

**ஆனந்தி** :- பல காரணங்கள் இருக்கின்றன. என்னுடைய கடமைக் காலத்தில் பெரும் பகுதி மாணவர்களுடன் இருந்திருக்கின்றது. மனத்தில் ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு வாழ்தல். கோபம் வரும் வேளைகளிலும் அன்பைக்காட்டுதல். கூட பிரச்சினைகளை பெரிதுபடுத்தாமல் இலகுவாகத் தீர்த்துக் கொள்ளல். அனுபவமான விடயங்களை உள்வாங்கி வாழ்தல். குறுகிய வட்டத்துள் இல்லாது இருந்தமையுடன் வெளிமாவட்டத்தில் நீண்ட காலம் வாழ்ந்தமை போன்றவையே என நான் கருதுகிறேன்.

**சிவா** :- சரி, தங்கள் ஆரம்பக்கல்வி பற்றிச் சொல்ல முடியுமா?

**ஆனந்தி** :- மகிழ்ச்சிகரமானது. எனது ஆரம்பக் கல்வி களுத்துறை மாவட்டத்தில் அகலவத்தை தோட்டப் பாடசாலையில் ஆரம்பமாகியது. மிக அழகான சூழல் அங்கு கல்வி கற்ற மாணவர்களின் அடிமைத்தனத்துடனான அப்பாவித்தனம் வறுமை என்பன என்னில் இரக்கமான சுபாவத்தை ஏற்படுத்தி விட்டது. அந்த நாட்களில் காணப்பட்ட உண்மையான அன்பினை நினைத்துப்பார்க்கும் போது இன்றும் மகிழ்சிசியடைகின்றேன்.

**சிவா** :- நீங்கள் கூறுவதைப்பார்க்கும் போது "ஆரம்பமே ஆனந்தமாக ஆரம்பித்து இருக்கின்றது" Madam! தங்களுடைய இடைநிலைக் கல்விக் காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களில் பல தங்களுடைய வளர்ச்சியில் பெரும்பங்காற்றி இருக்கலாம் என கருதுகிறேன் மாணவ சமுதாயத்திற்கு அதில் ஒன்றைக் கூறுங்கள்.

**ஆனந்தி** :- என்னுடைய இடைநிலைக் கல்வி யா/இந்துமகளிர் கல்லூரியில் தான் தொடரப்பட்டது. அன்று ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் காட்டிய உள்ளார்ந்த பற்று இன்றும் சிந்திக்க வைக்கிறது. ஆங்கில ஆசிரியைகள் திருமதி இராஜேஸ்வரி சண்முகம், திருமதி குமாரசாமி, புவியியல் ஆசிரியை செல்வி பரமேஸ்வரி பாப்பையா, அரசியல் ஆசிரியை திருமதி சிவகாமசுந்தரி பாலசுப்பிரமணியம் போன்றவர்களை மறக்க முடியாது. இந்துமகளிர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் விவாத மேடையில் பங்கேற்றமையும் பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றியமையும் நல்ல பதிவுகளாகும். எனது திறமைகளை தட்டிக் கொடுத்து வெளிக் கொணர்ந்த ஆசிரியர்களின் உணர்வினை நினைத்து பெருமையடைகின்றேன்.

**சிவா** :- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாங்கள் கல்வி கற்ற காலத்தில் மறக்கமுடியாத பல சம்பவங்கள் இருந்திருக்கலாம். அதில் சுவாரசியமான நிகழ்வு ஒன்றைக் கூறி எம்மை மகிழ்விக்குமாறு கேட்கிறேன்.

**ஆனந்தி** :- பேராதனைப் பல்கலைக்கழகம் பல அனுபவங்களைத் தந்திருக்கிறது. அந்த நாட்களும் அந்த பல்கலைக்கழகத்தின் சூழலும் அங்கு கல்வி கற்ற எந்த மாணவர்களாலும் மறக்க முடியாது. ஆதனால் இன்று நினைவு கூரக்கூடியதாக இருக்கும் ஒரு அனுபவத்தைக் கூறுகின்றேன். அங்கு விடுதியில் கல்வி கற்ற காலத்தில் விடுதிப்பொறுப்பாளருக்குத் தெரியாமல் பல மாணவிகள் ஒன்றிணைந்து பேராதனைப் பூங்காவிற்கு சென்று மகாவலிகங்கையில் குளித்துவிட்டு வந்தபோது ஏற்கனவே worden எங்களுக்காக காத்திருந்து கண்டித்ததையும், (திருமதி மதியாபரணம்) எமது இளவயது அசட்டுத் துணிச்சலையும், எண்ணிப்பார்க்கும் போது பேராதனைப் பல்கலைக்கழகச் சூழல்தான் சமூகமயப்படுத்தியது என்பது உண்மையேதான்.

**சிவா** :- தாங்கள் ஆசிரியத்தொழிலை ஏன் தெரிவு செய்தீர்கள்?

**ஆனந்தி** :- எனது கல்வி பல்கலைக்கழகத்தில் நிறைவு பெற்றதும் அங்கு உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினேன். ஆசிரியத் தொழில் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதில்லை. பல்கலைக்கழகத்தில் அன்று பொருளியல் துறைத் தலைவர் தான் எனக்கு கொடுத்த வாக்குறுதியை தவறவிட்டு திடீரென வேறு ஒருவரை உதவி விரிவுரையாளராக நியமிக்காமல் இருந்திருந்தால் ஆசிரியத் தொழிலுக்குள் நான் வந்திருக்க முடியாது. ஆனால் ஆசிரியத் தொழிலுக்குள் வந்தமையினால்தான் பெரும் தொகையான மாணவர்களின் உறவை இன்றும் கொண்டிருக்கிறேன.

**சிவா** :- நன்றி "Madam" அதிபர் பதவி, உதவிக்கல்விப்பணிப்பாளர் பதவி என்பவற்றில் இருந்த, இருக்கும் தாங்கள் எவ்வாறு இப்பதவிகட்கு வந்தீர்கள் எனச் சொல்ல முடியுமா?

**ஆனந்தி** :- ஆம் போட்டிப்பரீட்சைகள் நேர்முகத்தேர்வில் தகுதி அடிப்படையில் தான் எனது பதவிகள் கிடைத்தமையை உறுதியாக என்னால் கூறமுடியும்.

(திருமதி ஆனந்தி அவர்களிடம் முகமலர்வு, பெருமிதம் என்பன காணப்பட்டதை என்னால் நேரடியாக உணரமுடிந்தது. இந்நிலை எதிர் கால சந்ததிக்கு ஒரு எடுத்துக்காட்டான சம்பவம் என நான்கருதுகிறேன்)

**சிவா** :- அம்மா! அதிபர் பதவியில் தாங்கள் சாதித்த விடயங்களில் முக்கியமான விடயம் ஒன்றையும் எதிர் நோக்கிய சவால்கள் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**ஆனந்தி :-** பல விடயங்கள் இருந்தபோதிலும் ஒன்றை மட்டும் கேட்கிறீர்கள். 1987 காலப்பகுதியில் பாடசாலையில் ஏற்பட்ட தளர்வு நிலை, பெண்கள் பாடசாலை என்பதால் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கும் தேவை, அவற்றிக்கு மேலாக சமூகம் போதியளவு ஒத்துழைப்புத்தராமை, சாதாரண நிலையில் கூட பாடசாலைகளை இயக்க நிதி வளம் தேவை இங்கு நிதிவளம் அற்ற நிலையிலும் கூட பல சவால்களின் மத்தியில் பாடசாலையை முன் நோக்கி நகர்த்தியுள்ளேன். கலாச்சாரத்தைப் பேணும் இராமநாதன் கல்லூரி தனது பழைய உன்னத நிலையை காலத்தின் மாற்றங்களில் இழந்து வந்த போதும் மாணவிகளிடம் கலாசாரத்தையும் கலை வளர்ச்சியையும் என்னால் முடிந்த வரைக்கும் பேணிவந்துள்ளேன். நீண்டபாவாடையும் தாவணிபுடவையுடன் இருந்த இந்தக் கல்லூரி மாணவிகள் இன்று நவீன யுகத்திற்கு பொருத்தமுடையவர்களாக மாற வேண்டும் என்பதில் எனது ஆதங்கம் நிறைய இருந்தது.

**சிவா :-** ஆனந்தி Miss "உங்களுடைய உயர்வுகளில் அப்பா அம்மா என்ன பங்களிப்புச் செய்தார்கள்"?

**ஆனந்தி :-** சகல விடயங்களிலும் பக்கபலமானவர்கள் ஆதரவு தருபவர்கள். (என சுருக்கமாக கூறிக் கொண்டார்)

**சிவா :-** அதிபர் பதவிக்காலத்தின் போது ஆசிரியர்களை உங்கள் பக்கம் ஈர்த்து செயல்திறன் மிக்க அதிபராக என்ன உத்திகளைக் கையாண்டீர்கள் என புதிதாக அதிபர் பதவியில் இணைந்து கொண்டவர்கட்குச் சொல்ல முடியுமா?

**ஆனந்தி :-** ஆம் ஆசிரியர்களின் நிறைவுகளை பாராட்டுவது எனது வழக்கமாகும். தேவையான போது களத்தில் இறங்கி எல்லாவிடயங்களிலும் அவர்களில் ஒருவாராகச் செயற்படுவேன். விடயங்கள் எல்லம் நேர்த்தியாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்திருக்கிறேன். ஆசிரியர்கள் மீது மிகுந்த அன்புடன் நான் நடந்து வந்ததை பலரால் ஏற்றக் கொள்ள முடிந்த போதும் சிலர் அதில் ஒருமைப்பாடு அற்றவர்களாகவும் இருப்பதுண்டு. அதனால் அதிபர் பதவியில் பல விதமான உறவுகளை பேண வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாததாகும்.

**சிவா :-** நன்றி அம்மா! "ஒரு உளவளத்துணையாளர் போன்று செயற்பட்டதை நினைத்து மகிழ்வடைகிறேன்" தங்களுடைய கவிதை ஒன்றை யா/மகாஜனாக் கல்லூரியின் கவிதை தொகுப்பு மலரில் பார்த்தேன் உங்களுடைய இலக்கிய ஆர்வம் பற்றி வாசகர்கட்கு சொல்ல முடியுமா?

**ஆனந்தி :-** கவிதை கட்டுரை குறுங்கதைகள் எழுதுவதில் எனக்கு மிகுந்த ஆர்வம் இருந்தபோது அக் கவிதை எழுதப்பட்டது. எனது கல்லூரி வாழ்க்கையிலும் பல்கலைக்கழக வாழ்க்கையிலும் பல கட்டுரைகள் கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. இன்றும் நான் புத்தகங்கள் நிறைய வாசிப்பதில் ஆர்வமாக இருக்கின்றேன்.

**சிவா :-** Madam! தாங்கள் கலை உணர்வு கொண்டவராக காணப்படுகின்றீர்கள் இதற்கு காரணம் என்ன?

**ஆனந்தி :-** நான் கல்வி கற்கும் காலத்தில் நடனம், சங்கீதம் என்பவற்றிற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கபடாத போதும் என்னுள் ஒளிந்திருந்த கலையுணர்வை வெளிக்கொண்டுவர இராமநாதன் கல்லூரி வழி சமைத்துக் கொடுத்தது என்பது மகிழ்ச்சியாக உள்ளது. கலைக் கோயிலான இக் கல்லூரியில் எனது ஆர்வத்தினாலும்

உந்துசக்தியாலும் கிடைத்த வெற்றிகள் ஏராளம். ஒவ்வொரு வெற்றியின் போதும் நான் பெற்ற மகிழ்ச்சி அளவிட முடியாதது.

**சிவா** :- சந்தோஷமாக வாழ்வதற்கு அகப்புறச் சூழல் செல்வாக்கு செலுத்துகிறது." அது பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**ஆனந்தி** :- நிட்சயமாக உண்மை. ஆனந்தமாக வாழ்வது அவரவர் மனநிலையிலும் தங்கியுள்ளது.

**சிவா** :- அம்மா இன்னும் ஒரு சில கேள்விகளுடன் எனது நேர் காணலை நிறைவு செய்யலாம் என நினைக்கிறேன். கல்வித்துறையில் ஏணிப்படியாக உயர்ந்த தாங்கள் போர்ச் சூழலில் இருந்து கல்வி மேம்பாடு நோக்கி உயர்வடையச் செல்லும் மாணவ சமுதாயத்திற்கு என்ன ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்கள்?

**ஆனந்தி** :- நல்ல கேள்வி கேட்டிருக்கிறீர்கள் இழந்ததை மீளப்பெற தீவிரமாகச் செயற்பட வேண்டும். எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து வாழ எம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டு விஞ்ஞானத்தின் விளிம்பில் வெற்றி நடைபோடும் எமது இளைஞர்கள் எமது விழுமியங்களில் உன்னதமான பெரியவர்களை மதித்தல், நன்றி உணர்வுடன் இருத்தல் என்பவற்றை கட்டிக்காத்துச் செல்ல வேண்டும்.

**சிவா** :- நேர்காணலின் இறுதிக்கேள்வியாக சமூகத்தின் உயர்விற்குத் தாங்கள் கல்வித்துறையின் ஒரு அனுபவசாலி என்பதால் என்ன ஆலோசனை கூற விரும்புகிறீர்கள்?

**ஆனந்தி** :- மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் இழந்தவற்றை பற்றி சிந்திப்பதைவிட எதிர்கால வளர்ச்சி பற்றி சிந்தித்து செயல்படவேண்டும். கல்வி தான் எமது சமூகத்தை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ளும் என்பதால் துணிந்து நின்று எமது மாணவர்கள் யாழ்ப்பாணக்கல்விப் பாரம்பரியத்தை தளர விடாமல் வீறு நடை போட செய்ய வேண்டும்.

**சிவா** :- நன்றி Madam இவ்வளவு நேரமும் என்னுடைய சமூகமேம்பாடு கருதிய அனுபவப் பகிர்வு நேர்காணலில் பங்கு பற்றியமைக்கு மனம் நிறைந்த நன்றிகளுடன் விடை பெறுகிறேன்.

**ஆனந்த** :- நன்றி சிவராஜன் Sir

நேர்காணலை அன்புடன் நிறைவு செய்பவர்

**திரு. சி. சிவராஜன்**

இளைஞனே வலிமை அளவற்ற வலிமை -
இதுவே இப்போது தேவை.

-சுவாமி விவேகானந்தர்-

# Farewell to our Madam



**Mrs. P. Kesavan**
President,
Teachers' Guild

It is my humble duty to say bye to our madam **Mrs. Ananthy Sivagnanasundaram** for her long and successful 18 years of service as the principal of this College. It has been great privilege to work with her and I was fortunate enough to have her as my leader in my teaching career.

She had the ability to mould each and every individual and motivate them to develop personality. The advice and the genuine support which was given by her in times of difficulties still haunt in my memory. She took great pride in providing opportunities for both staff and students to excel their talents in various fields.

I find no words to appreciate her attitude towards every single activity held in this College premises. She had the habit of working hard behind the screen to make everything successful. She found pleasure in doing everything perfect and made us to be perfect.

I hope she will be remembered with gratitude and appreciation by those who gained experience under her leadership.

I wish her most warmly a happy, healthy and peaceful retirement.

**Thank you**

# புத்துயிர் பெற்றது இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலை



**திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன்**
நூலக உதவியாளர்,
யா/இராமநாதன் கல்லூரி.

19ஆம் நூற்றாண்டில் தமிழ் பெண்களின் வாழ்வில் ஒளியூட்டிய இந்துப்பெண்கள் கல்லூரிகளில் இராமநாதன் கல்லூரி தன்னகத்தே பல பெருமைகளைக் கொண்டுள்ளது. இந்துதமிழ் பெண்களின் கல்வியில் புதிய பாரம்பரியத்தை பேணுவதற்காக 1913 இல் உருவாகிய இக்கல்லூரி ஆளுமைமிக்க கலாச்சாரத்தை பேணுகின்ற பெண்களை உருவாக்குவதன் மூலம் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது.

இக்காலப்பகுதியில் கிறிஸ்தவக் கல்லூரிகள் இயங்கி கல்விமேம்பாட்டுக்கு பணிபுரிந்த காலத்தில் இவ்வள்ளளாரின் தூய எண்ணத்தால் பாரிய நிலப்பரப்பில் விடுதி, ஆலயம், விளையாட்டு, மைதானம் நூலகம் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இப் பெண்கள் கல்லூரி அமைக்கப்பட்டது.

மனைக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் சேவை செய்யும் ஆற்றலையும் திறனையும் கொண்ட பெண்கள் சிறுவயதிலேயே வாழ்வில் நல்லோர்களாகவும் செயலில் நேர்மையினையும் ஒழுக்கதினையும் கடைப் பிடிக்கக் கூடியவர்களாகவும் சைவப் பண்புள்ளவர்களாகவும் வாழவேண்டும் எனும் நோக்கத்திற்கிணங்க 400 க்கு மேற்பட்ட மாணவியர்கள் தங்கியிருந்து கல்விகற்ககூடிய வசதிகொண்ட விடுதி ஆரம்பத்தில் இராம நாதவள்ளலால் அமைக்கப்பட்டது. பெண் பிள்ளைகள் சைவநெறி மரபுகளை பேணிநல்வாழ்வு வாழ்வதற்கேற்ற பயிற்சி பெறுவதற்குரிய சிறந்த இடமாக இக்கல்லூரி விடுதிச்சாலை திகழ்ந்தமையால் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் விடுதிச்சாலையை நோக்கி மாணவர்கள் வந்து கல்விபயின்றார்கள்

யாழ்பாணத்தில் தம்பிள்ளைகள் உயர்கல்வி கற்கவேண்டும் என விரும்பிய பெற்றோர்கள் விடுதிக்கு பிள்ளைகளை அனுப்பிவைத்து பாதுகாப்பாக கல்வியை புகட்டினார்கள் என்பது வரலாறு. ஆக்காலத்தில் வெளியில் இருந்து வந்து கல்விபயிலும் மாணவர்களைக் காட்டிலும் விடுதிமாணவர்களே அதிக சித்திபெறுவது வழக்கம். இவ்வாறு புகழ்பூத்த பெண் கல்வியியலாளர்களை உருவாக்கியது இவ்விடுதிச்சாலையே. இவ்வாறு 10 தசாப்தங்களாக உன்னத நிலையை அடைந்து வந்த விடுதிச்சாலை இந்திய இராணுவ யுத்தத்தின் போது பாரிய பிரச்சினையை எதிர்நோக்கியது. அதாவது அப்போது தங்கியிருந்த 68 மாணவியர்களும் ஊழியர்களும் அகதிகளாக கல்லூரியை விட்டு வெளியேற நேர்ந்தபோது உடுவில்மகளிர் கல்லூரி அவர்களை அணைத்துக் கொண்டது. அப்போது அக் கல்லூரியில் அதிபராக இருந்த செல்வி செ.செல்லையா அவர்களின் ஆதரவை மறக்க முடியாது. அன்றுடன் மூடப்பட்டதுதான் இவ்விடுதி.

1987 ஆம் ஆண்டு மூடப்பட்ட விடுதிக்கு எவரும் புத்துயிர் கொடுக்க நினைக்கவில்லை. பின் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளாலும் இடப்பெயர்வுகளாலும் பல பாடசாலைகள் எமது பாடசாலையில் இயங்கவேண்டிய தேவை ஏற்பட்டதாலும் விடுதிச்சாலைகள் அனைத்தும் வகுப்பறைகளாகவும், தெல்லிப்பளை துர்க்காபுர மகளிர் இல்ல மாணவர்களுக்கு இருப்பிடமாகவும் ஆதரவளித்து உதவியது.

தொடர்ந்து கல்வியியற் கல்லூரிக்கு இடமளித்து யாழ்ப்பாணத்தில் கல்வியியற் கல்லூரியை நிலைபெறச்செய்தது. இவ்வாறு இவ்வள்ளலாரின் விடுதிக்கட்டடம் பலருக்கு உதவிற்று.

இவ்வாறு 12 வருடங்களாக மூடியிருந்த விடுதிச்சாலையினை பல பெற்றோர்களின் ஆதங்கத்திற்கிணங்க எங்கள் அதிபர் மிகவும் துணிச்சலுடனும் மனஉறுதியுடனும் 5 மாணவர்களுடன் இவ்விடுதிச்சாலையை ஆரம்பித்து வைத்தார். இவருக்கு பக்கபலமாக அப்போதிருந்த உபஅதிபர் திருமதி ப.பத்மநாதன் ஆசிரியர் திருமதி வி.நரேந்திரா என்பவர்கள் காணப்பட்டனர். அக்காலப்பகுதியில் விடுதிக்கான ஊழியர்களை வைப்பதில் சிரமம். அப்போதெல்லாம் அவர்களுக்கான உணவுகளை அதிபரும் உப அதிபரும் ஆரம்பத்தில் வீட்டிலிருந்தே கொண்டுவந்து கொடுத்தார்கள் மாணவர்களுக்கான போதிய வசதி இங்கு இருக்கவில்லை எனினும் தனது விடாமுயற்சி நம்பிக்கை மனத்துணிவு இவை இவரிடம் என்றுமேயுள்ள ஒன்று. இவரது இந்நம்பிக்கை வீண்போகவில்லை. 2002 ஆம் ஆண்டு 100 க்கு மேற்பட்ட மாணவர்களுடன் விடுதிச்சாலை பிரகாசமடையத்தொடங்கியது. நம்பிக்கை வைத்த பெற்றோர்கள் மீண்டும் மாணவர்களை அனுப்பிவைக்கத் தொடங்கினார்கள். மீண்டும் பழைய பொலிவுடன் இந்துப்பண்பாடு நிரம்பிய விடுதியாக மிளிர ஆரம்பித்தது.

கொக்குவிலில் இருந்து வந்து கொண்டிருந்த அதிபர் பிள்ளைகளின் தொகை அதிகரிக்க அவர்களின் பாதுகாப்புக் கருதி வசதிகளற்ற கட்டடத்தில் வயது முதிர்ந்த தன் தகப்பனாரையும் அழைத்து வந்து தங்கியிருந்தார். அவரது தந்தை விடுதிமாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசானாகவும் நல்ல அறிவுரைகளை எடுத்தியம்புபவராகவும் காணப்பட்டார்

எமது அதிபரிடம் எவருக்கும் கட்டளையிட்டு அதிகாரம் காட்டும் பழக்கம் இல்லை. ஏந்தச் செயலையும் மற்றவர்களோடு தானும் சேர்ந்து நின்று செய்யும் ஒரு நிர்வாகத்திறன் மிக்கவர். அதுமட்டுமல்லாது அன்பாகவும் பண்பாகவும் மாணவர்களுடன் அளவளாவுவார். பிழைகள் விடும் சந்தர்ப்பங்களில் இன் சொல்லால் திருத்த முயல்வார். பெண் பிள்ளைகள் இல்லாத குறையை நிவர்த்தி செய்து பார்த்தார். தான் ஒரு அதிபர் என்ற நிலையில் இல்லாது மாணவர்களுடன் மாணவர்களாகவும் விடுதிமேற்பார்வையாளருடன் விடுதிமேற்பார்வை செய்யும் ஒருவராகவும் சமையல்காரர் வராத சந்தர்ப்பங்களில் சமையலாளராகவும் பிள்ளைகள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் வைத்தியராகவும் இறங்கி வந்து செயற்படும் பெருந்தகை.

இவரின் காலத்தில் தான் விடுதிமாணவர்களின் அவசரதேவைகளுக்கு உதவ வாகன வசதிகள் தேவை என்ற காரணத்திற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கத்திடம் விடுதிக்காக முச்சக்கரவண்டி ஒன்றினைப் பெற்றுக்கொண்டார். காலையிலும் மாலையிலும் தன்வேலைகளின் மத்தியிலும் விடுதியைச் சுற்றிப்பார்க்கத்தவறியதில்லை. பிள்ளைகளிடத்தே பூந்தோட்டம் அமைக்கும் பழக்கத்தையும் கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தையும் வெள்ளிக்கிழமைகளில் கோயிலில் பொங்கிப்படைக்கும் பழக்கத்தையும் விடுதிமாணவர்களிடத்தில் ஏற்படுத்தினார்.

விடுதிமாணவர்களை மட்டுமன்றி ஏனைய மாணவர்களையும் ஏன் ஆசிரியர்களையும் கூட அழகுபடுத்திப் பார்ப்பதில் அலாதிப்பிரியம். விடுதிமாணவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்திற்கமைய இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு சுற்றுலா கூட்டிச்சென்றவர் இவரே. இவ்வாறு மகிழ்ச்சிகரமான சூழலில் வாழ்ந்த பிள்ளைகளின் கல்வி அவர்களது பெறுபேறுகள் என்பன எல்லாம் நல்ல நிலையில் இருந்தன. பெற்றோர்கள் எதற்காக பிள்ளைகளை விடுதியில் இணைத்தார்களோ அந்த நோக்கத்தை அடைந்தார்கள்.

இவ்வாறு வளர்ந்து கொண்டு வரும் வேளையில் மீண்டும் ஓர் அடி விழுந்தது. 2007ஆம் ஆண்டு பாதை அடைபட்டு ஊரடங்கு பிறப்பித்து பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவிய வேளையிலும் தானும் சேர்ந்து நின்று மாணவர்களுடன் பல பிரச்சனைகளை எதிர்கொண்டார். இருந்தும் அவர் தளர்ந்து விடவில்லை. ஊரடங்கு தளர்த்தும் நேரங்களில் அப்போதிருந்த விடுதிமேற்பார்வையாளரான திருமதி ச.சுபரசினியுடன் சேர்ந்து கடைகடையாக ஏறி பொருட்களை சேர்த்தது இன்றும் என் கண்முன்னே நிற்கிறது. அந்தச் சந்தர்ப்பங்களில் அப்போதிருந்த உப அதிபர்களான திருமதி ப.தியாகலிங்கம் திருமதி சி.கந்தசாமி திரு வை.பாலேந்திரா ஆகியோர் அவருக்கு பக்கபலமாக இருந்தார்கள். நாட்டுப்பிரச்சனையால் வெளியில் ஏதும் அசம்பாவிதங்கள் நடந்தாலும் யாரையும் உள்ளே நுழைய அனுமதிக்கமாட்டார். துணிச்சல் மிக்கவர். மூன்று மொழிகள் தெரிந்த இவரால் எந்தபிரச்சனைகளையும் தக்க சமயத்தில் எதிர்கொள்ள முடிந்தது இது எமது பாடசாலைக்கு கிடைத்த வரப்பிரசாதம்.

மாணவர்களுடன் மாலையில் தானும் சேர்ந்து சுற்றுப்புறத்தை துப்பரவு செய்வதும் பூமரங்களுக்கு தண்ணீர் ஊற்றுவதும் அதனை அழகுபடுத்தி ரசிப்பதும் இவரது அன்றாட கடமைகளில் ஒன்று. இரவுநேரங்களில் நாம் அவரிடம் சென்றால் இரவுக்காவலாளிகளுடன் தானும் ஒருவராக இருந்து உரையாடிக் கொண்டிருப்பார். விடுதியில் அவர் தங்கியிருக்கும் வேளையில் நாம் பாடசாலை நேரங்களிலும் சரி விடுமுறை நேரங்களிலும் சரி களைத்து வரும் எவரது களைப்பையும் நீக்கத் தவறுவதில்லை. நிறைந்த மனம் உபசரணை செய்யும் மனப்பாங்கு என்றும் புன்னகையுடன் வரவேற்கும் திறன் மற்றவர்களின் மனத்தை அறிந்த நடக்கும் தன்மை கடவுள் வழிபாடு எல்லாவற்றையும் விடுதியில் இருந்த மாணவர்கள் கற்றது மட்டுமல்ல நானும் நிறையவிடயங்களை அவர் மூலம் கற்றுக்கொண்டேன் என்பதைக் கூறுவதில் பெருமை அடைகிறேன்.

விடுதி மாணவர்களின் தூணாக நின்று உழைத்த எங்கள் அதிபர் ஓய்வு பெறப்போகும் நாள் வந்ததும் விடுதிமாணவச்செல்வங்களின் கண்களால் ஓடிய நீருக்கு அளவேயில்லை. ஒரு தாயைப்பிரியப்போகின்றோமே என்ற வேதனையில் துடிதுடித்தார்கள் ஓடிச்சென்று அவரைக் கட்டி அணைத்து அழுதமாணவர்களை நான் இன்று நினைத்துப்பார்க்கிறேன்.

இவ்வாறு ஒவ்வொரு தேவைகளிலும் இவரது சேவைகள் மிகவும் உன்னதமானது. இவ்வாறான எமது அதிபர் உயர்பதவி பெற்று வலிகாமம் கல்விவலயத்திற்கு சென்றதையிட்டு பெருமையடைவதுடன் அவரது சேவை மேலும் உயர்வடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.





விடுதி மாணவர்களுடன் அதிபர்

# அன்பும் அழகியல் உணர்வும் மிக்க அதிபர்



**திருமதி. கோணேஸ்வரி இராமசந்திரன்**
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

புகழ் பூத்த அதிபர்கள் அணி செய்த இராமநாதன் கல்லூரியில் பதினெட்டு ஆண்டுகள் தன் கடன் பணிசெய்து கல்லூரிப் பெருமைகளைக் கட்டிக்காத்த அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களை நாம் என்றும் மறக்கமுடியாது. கல்வி அழகாலும், சொல் அழகாலும், நடை உடை அழகாலும், ஆளுமை அழகாலும் அரவணைப்பு அழகாலும், அகங்களில் நிறைந்த பண்புமிக்க அன்னை. இவர் எந்தவொரு மாணவியையும், ஆசிரியரையும் அழகுபடுத்தி அவர்களை ஆற்றுப்படுத்தும் தனித்துவம் மிக்கவர். போர் நிறைந்த காலத்தில் இராமநாதன் கல்லூரிப் பொறுப்பை ஏற்று அல்லல்கள் பல கண்டும் அஞ்சா நெஞ்சத்தோடு கல்லூரியைக் கட்டி வளர்த்தவர். கல்லூரியின் மேலைத்தேய கீழைத்தேய வாத்திய அணிமுதல் தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறை, இசை, நாட்டியத்துறை, வெற்றிகளைச் சந்திப்பதற்கு வித்திட்ட விவேகி. இவர் கப்பலாலும், கிளாலியாலும், இராணுவ போர் விமானத்திலும் கல்லூரி மாணவிகளை அழைத்துச் சென்று சாதனைகளை நிலை நாட்டிய சரித்திரம் என்றும் மறக்க முடியாது. கல்லூரியின் எந்த விழாவானாலும் மேடை அலங்காரம் முதல் ஆசிரியர் மாணவரின் ஒழுங்குவரை மிகக்கவனமாக ஒழுங்குபடுத்திக் கண்காணித்த செயல் மறக்க முடியாது. எவர் வீட்டு இன்ப துன்பகளானாலும் கலந்து கொள்ளும் பெருந்தன்மையுடையவர். இராமநாதன் கல்லூரிக்கான சமூகத் தொடர்பைக் கட்டி வளர்த்தவர் மொழிப் பாண்டித்தியம் மிக்க அவரது புலமையைக் கண்டு மெச்சாதவர்களில்லை இராமநாத வள்ளலுக்கு சிலை எடுத்தும் சரஸ்வதி சிலை அமைத்தும், அருணசலம் மண்டபம் அழகு மிளிரச் செய்ததுமாகிய பணிகள் மறக்கவோ மறைக்கவோ முடியாதவை. மூடிய விடுதிச்சாலையை மீளத்திருப்பதற்காக இவர் பட்ட பாட்டையான் நன்கு அறிவேன் அவலத்தோடு அல்லல்பட்டு வந்த வன்னிப் பெரு நிலப்பரப்புப் பிள்ளைகளுக்கு ஆறுதல் செய்து, தன் அன்பால் அரவணைத்து, அவர்களது கல்வி தொடர அரும்பாடு பட்டவர். கல்லூரி வரலாற்றில் இவர் சாதித்த சாதனைகள் ஏராளம். கல்லூரி உள்ளவரை நன்றியோடு சமூகம் போற்றும் தகுதி பெற்ற அதிபர் ஆனந்தி அவர்களை எவரும் மறந்து விட முடியாது.

கண்டிப்பாலும் அவருக்கு நிகர் அவரே. ஏசுவார் இதயத்தால் நேசிப்பார். வாழ்த்துவார் வாடிய நிலை கண்டால் வருந்துவார். உண்ணும் உணவை பகிர்ந்து உண்பார். சிரிப்பை பகிர்ந்து கொள்வார். உறவை என்றும் உரிமையோடு உறுதிப்படுத்துவார். இவ் அன்னையிடம் கற்றவை ஏராளம். காலமெல்லாம் மறக்க முடியாத வழிகாட்டியை நன்றியோடு வாழ்த்துகிறேன்.

# எங்கள் அதிபரின் காலத்தில் இந்து மன்றம்



**திருமதி. சுகுணா சீனிவாசகம்**
இந்து மன்ற பொறுப்பாசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

*"கருணாகரக் கடவுளே.....*
*திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்"*
என்பது கல்லூரியின் தாரகமந்திரம் இதற்கு அமைவாகவே சேர். பொன் இராமநாதன் அவர்கள் எங்கள் இராநாதன் கல்லூரியை அமைத்துள்ளார். மாணவர்கள் தினமும் வழிபாடு செய்யும் ஆலயமாக நடராஜர் ஆலயம் கல்லூரியுடன் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. அதன் கீழே சரஸ்வதி மண்டபம் அமைந்துள்ளது.

இக்கல்லூரியின் விடுதி மாணவர்கள் தினமும், காலை மாலை நேரங்களில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வர் பூசைக்கு தேவையான பூக்கள், மாலைகள் என்பவற்றைக் கொடுத்து வருவது வழக்கம் இப்பணி ஆரம்பகாலம் தொட்டு இருந்து வந்தது. எனினும் இடைக்காலத்தில் காலத்தின் கோலத்தால் நலிவுற்றது இதனை சற்றும் நழுவிடாமலும் மேலும் சிறப்பாக நடாத்துவதற்கும் தம்மாலான முயற்சிகளை விடுதியில் இருந்து கொண்டே ஆற்றி வந்தார். எமது அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம். நவராத்திரி காலங்களில் ஆசிரியர் மாணவர்களுடன் தானும் இணைந்து செயற்பாடுகளில் ஈடுபட்டார். சரஸ்வதி மண்டபத்தை அலங்கரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். அத்தோடு படிக்கும்பம் வைத்தல், கொலுவைத்தல் என்பன விசேட வழிபாடுகள் ஆகும். கொலுவைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியவரும் எம் அதிபர்தான். தோரணங்கள் கட்டி மிகவும் அழகுடன் விளங்கும் நடராஜா ஆலயத்தைப் பார்ப்பது அழகுதான். அத்தோடு மாணவர்களுக்கு, தோரணம் பின்னுதல், மாலைகட்டல், பேச்சு, பண்ணிசை, புராணபடனம், கதாப்பிரசங்கம் போன்ற போட்டிகளை வைத்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் வாணிவிழாவில் நடைபெறும். விஜயதசமி அன்று குழந்தைகளுக்கு அதிபரால் ஏடு தொடக்கிவைக்கும் நிகழ்வும் இடம்பெறும். இவர் காலங்களில் திருமுறை விழாக்களும் மிகவும் சிறப்பாகவும் நடைபெற்றன.

இவர் கல்லூரியின் பழைய மாணவியாக இல்லாத போதும் இராமநாதன் விரும்பிய சைவத்தமிழ் பண்பாட்டோடு கூடியவராகவும், இராமநாதனின் இலட்சியங்களை நிறை வேற்றுபவராகவும் இருந்த படியால் கல்லூயின் வளர்ச்சியில் குறிப்பாக இந்து மன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து இந்துக் கலாசாரம், ஒழுக்கம் முதலியவற்றைப் பேணிக்காத்தார் காலைப் பிரார்த்தனையின் போது நற்சிந்தனை வழங்குவதற்கு ஆசிரியர்களை ஒழுங்கு முறையில் நடைமுறைப்படுத்தினார் வெள்ளிக் கிழமைகளில் சமாதி ஆலயத்திற்கு

சென்று சிவபுராணம் ஓதும் வழக்கத்தையும் ஏற்படுத்தினார். தைப்பொங்கல் தினத்தன்று விடுதிமாணவர்கள் பொங்கல் செய்வார்கள் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிராத்தனை செய்வார்கள். இப்படியாக விடுதிமாணவர்களிடம் சைவப் பழக்கவழக்கங்கள் மேலோங்கி வளர்ந்து வருவதற்கு பெரும்பாடுபட்டார்.

நடராஜர் அபிசேகங்கள், ஆனி உத்தரத்தில் நடைபெறும் மணவாளகோல விழா, இராமநாதன் குருபூசைதினம் என்பன உரிய முறைப்படி நடைபெறுவதற்கு அதிபர் அவர்கள் உறுதுணையாக இருந்து செயற்பட்டார் மணவாளக்கோலம் மாலையில் நடைபெறுவற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்போடு கூறி அவர்கள் வந்து அவ்விழாவை சிறப்பிக்க செய்வார் பழைய மாணவர்களும் அதில் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். மணவாளக்கோல விழாவின்போது பார்வதி சமேதராக பரமசிவன் எழுந்தருளி ஊஞ்சலில் ஆடுவது வழக்கம். எங்கள் அதிபரின் காலத்தில்தான் ஆலயத்திற்கு என்றே ஊஞ்சல் செய்யப்பட்டு, ஊஞ்சல்பா பாடப்பட்டது.

2003.07.18ம் திகதி நடைபெற்ற மண்டலபிசேகப் பூர்த்திவிழாவின் போது அதிபரின் ஆசியுடன் திருமதி. வை. கணேசபிள்ளை ஆசிரியர் பாடிக்கொடுக்க பழைய மாணவர்சங்கம் அதனை வெளியிட்டது. ஊஞ்சலும் அவரால் இராமநாதனின் உறவினரைக்கொண்டு செய்து கொடுக்கப்பட்டது. அன்றிலிருந்து பெருமான் பார்வதி சமேதராகி ஊஞ்சலில் ஆடி அடியவருக்கு அருள்பாலிக்கும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கும். உண்மையில் அக்காட்சியைப் பார்ப்பது அழகுதான் இவையாவும் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும் நடைபெற்றவை.

அதுமட்டுமல்ல ஆசிரியர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையில் நடக்கும் இன்ப துன்பங்களில் கலந்து கொண்டு சிறப்பிப்பார். அவர்களது தனிப்பட்ட பிரச்சினைகளைக் கூட இனங்கண்டு அவர்களோடு கலந்துரையாடி எங்கள் பாடசாலையில் உள்ள நடராஜர் ஆலயத்தையும் சமாதி ஆலயத்தையும் நம்பிக்கையோடு வழிபடுங்கள் உங்கள் குறைகள் தீருமென கூறியிருக்கின்றார். அவர்கள் வணங்கி பலனும் கண்டுள்ளார். இதுதான் கண்ட உண்மை இப்படி பட்ட ஒரு நல்ல அதிபரை எம்வாழ்நாளில் நாம் மறக்க முடியாது. அவரின் நல்ல குணங்களுக்கு ஏற்றவாறு வரவேற்கும் தன்மையும் விருந்தோம்பல் பண்பும் கொண்ட மகன் வாய்த்திருக்கின்றார். நல்லமருமகளும் கிடைக்கப்பெற்றுள்ளார். "உண்மையில் இராமநாதன் கல்லூயில் படிப்பது பெருமை அதில் ஆசிரியராக இருப்பது பெருமை அதை விட அதில் அதிபராக இருப்பது பெருமை அதிலும் மிகப்பெருமை உயர் பதவி பெற்று பிரதிக் கல்விப பணிப்பாளராக இருப்பது." எனவே எமது கல்லூரியில் அதிபராக இருந்து தற்போது வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து எமது கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்த எமது அதிபர் சீரும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என இந்து மன்றம் சார்பில் வாழ்த்துகின்றேன்.

# வாழ்வகச் சோலையுடன்.....



திருமதி மோகனவதனி ரவீந்திரன்
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

அன்று திங்கட்கிழமை அதிகாலை, எனக்கே உரிய பரபரப்புடன் கடமைகளில் மூழ்கியிருந்தேன். மனதிலே ஒரு நெருடல், "இன்று அனந்தினியைப் பாடசாலையில் சேர்க்கவேண்டும்." என்னைவிட வேகமாக எண்ணங்கள் செயற்பட்டன. "அந்தப் பிள்ளை படித்து நல்ல நிலைக்கு வரவேணும்... அதுதான் எனது அபிலாசை."

நான் இராமநாதன் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியை. கட்டாயக் கல்விப் பொறுப்பாசிரியர். பாடசாலைக்குச் செல்லாத பதின்நான்கு வயதிற்கு குறைந்த மாணவர்களைப் பாடசாலையில் சேர்க்கும் பணியில் உள்ளவள். அத்தோடு விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்தின் உப தலைவர். அங்கே எங்கள் குடும்பத்துக்கென அமைக்கப்பட்டுள்ள இல்லத்தில் தங்கியிருந்து சேவைசெய்பவள். விழிப்புலவலுவிழந்த பிள்ளைகளைத் தேடிச் சென்று அவர்களை வாழ்வகத்தோடு இணைத்து அவர்களுக்குக் கல்வி வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதில் அதிக ஆர்வமுடையவள். இவ்விதமாய்ச் சேர்க்கப்பட்ட பிள்ளைகளில் ஒருவர்தான் அனந்தினி.

தும்பளை முருகன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அனந்தினியின் கண்களில் முற்றாகவே ஒளியில்லை. அதனால் கல்வியெனும் ஒளியைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட வழியில்லாது போயிற்று. பாடசாலைகள் எதுவும் அவளைச் சேர்த்துக்கொள்ள மறுத்த நிலையில் அந்தச் சிறிய வீட்டின் ஒரு மூலையே அவளின் தஞ்சமாயிற்று. நான் அந்த வீட்டுக்குச் சென்றபோது தானும் கல்வி கற்கவேண்டும் என்ற ஆர்வம் அந்தப் பிள்ளையிடம் மிகுந்திருந்ததைக் காணமுடிந்தது. பெற்றோருடன் பேசி, பல விடயங்களை எடுத்துக் கூறியதன் பயனாய் ஒரு மாதத்துக்குள்ளேயே அனந்தினியை வாழ்வகத்தில் இணைத்துக்கொள்ள முடிந்தது.

30.04.2007 அன்று அனந்தினியின் கையைப் பிடித்தவாறு பாடசாலைக்குள் சென்று கொண்டிருந்தேன். நேர்த்தியாகச் சீவப்பட்ட தலையிலே இரட்டைப் பின்னல். அதிலே பச்சை றிபன். பளிச்சென்ற வெள்ளைச் சீருடையும் அதிலே படர்ந்திருந்த பச்சை நிற கழுத்துப்பட்டியும், ஒரு பள்ளி மாணவிக்கே உரிய உன்னத அழகை அவளிலும் கண்டேன். பத்து வயது வரை பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே முடங்கியிருந்ததால் சப்பாத்துடன் அவளால் சரியாக நடக்க முடியவில்லை. மெதுவாக அழைத்துக்கொண்டு அலுவலகத்தினுள் சென்றேன். "இந்தப் பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதில் ஏதாவது சிக்கல்கள் வருமோ? சிலவேளை, சேர்க்க முடியாமலே போய்விடுமோ?" பலவிதமான எண்ணக் குமுறல்களுடன் அதிபரை நெருங்கினேன்.

அதிகமான பணிகள். இருந்தாலும் முகத்தில் என்றும் மாறாத அதே புன்னகை. அந்த முகத்தைக் கண்டபோது என் மனத்திலும் ஒருவித தெளிவு. மெதுவாக அவரை நெருங்கி "மெடம், இந்தப் பிள்ளை வாழ்வகத்தில் சேர்ந்துள்ளா. இவவைப் பாடசாலையில் சேர்க்கவேணும்" என்றேன். எந்தவித மறுப்புமின்றி "அதற்கென்ன" என்றவாறு நிமிர்ந்து அந்தப் பிள்ளையின் முகத்தை ஊன்றிக் கவனித்தார். என் மனம் குளிர்ந்தது. இருந்தாலும், "மெடம், இவ மற்றப் பிள்ளைகள் மாதிரியில்லை. பதினொரு வயது வரை பாடசாலைக்கே போகேல்லை..." என்றவாறு அதிபரின் முகத்தைப் பார்த்தேன்.

"பதினொரு வயது.... பாடசாலை எதற்கும் போகவில்லை.... அப்படியானால் இவவை எந்த வகுப்பில் சேர்ப்பது?" என்றவாறு சற்றே சிந்திக்கலானார். பாடசாலைப் பக்கமே செல்லாத அந்த அப்பாவிப் பிள்ளையைத் தட்டிக்கழித்துவிட நினைக்காமல் தட்டிக்கொடுத்துத் தூக்கிவிட நினைக்கும் அந்தத் தாயுள்ளத்தைக் கண்டு என் மனம் ஒரு கணம் நெகிழ்ந்துபோனது. "இப்போதைக்கு மூன்றாம் வகுப்பில் சேர்ப்போம். பின்னர், இவவின் திறமையைப் பார்த்து அடுத்தடுத்த தவணைகளில் வகுப்பேற்றிவிடுவோம்" என்றவாறு "கெட்டிக்காரியாய்ப் படிக்க வேணுமென்ன?" என்று பிள்ளையின் முதுகில் செல்லமாய்த் தட்டினார்.

"நூறு வீத சித்தி" என்ற அந்த ஒரு இலக்கினை மட்டுமே நோக்காகக் கொண்டு எத்தனையோ பிள்ளைகளைச் சேர்க்க மறுக்கின்ற, பரீட்சை எழுதவிடாது தடுக்கின்ற அதிபர்கள் மத்தியில் இப்படியும் ஒரு அதிபரா? ஒரு பிள்ளை கூடப் பாதிக்கப்படக்கூடாது என்ற உயர்ந்த உள்ளத்தோடு தன்னை நாடிவந்த அத்தனை பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கொடுத்தவர். சில பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் "இவர்கள் படிக்காவிட்டாலும் பரவாயில்லை. குறைந்தபட்சம் சிறிது காலம் பாடசாலைக் கட்டமைப்புக்குள் இருந்துவிட்டாவது போகட்டும் அதுகூட அவர்களின் வாழ்வுக்கு உதவும்" என்று அவர் அடிக்கடி கூறுவது இப்போதும் என் காதுகளில் ஒலிக்கின்றது.

அனந்தினி பாடசாலையில் சேர்க்கப்பட்ட மன நிறைவுடன் சில வாரங்கள் கழிந்தன. மீண்டும் ஒரு பிரச்சினை. அனந்தினியைப் போலவே பத்து வயதுவரை பாடசாலை செல்லாத முற்றாகப் பார்வையற்ற அருண்குமார். பார்வையற்ற பிள்ளைகளைத் தேடும் எனது முயற்சியின்போது கிடைத்த ஒரு முத்து.



வாழ்வக நிகழ்வுகளில் அதிபர்

பருத்தித்துறைப் பகுதியில் சில பார்வையற்ற பிள்ளைகள் இருக்கின்றார்கள் என்று அறிந்து ஒரு சிலரின் முகவரிகளை மட்டுமே கொண்டு எனது துணைவருடன் சென்றிருந்தேன். பல இடங்களிலும் அலைந்து திரிந்ததால் ஏற்பட்ட அசதியுடன் மதிய உணவுக்காக கம்பர் மலையிலுள்ள எனது சகோதரன் வீட்டுக்குச் சென்றோம். அங்கு எமது பயணம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது "பிள்ளைகளைத் தேடி ஏன் எங்கெங்கோ எல்லாம் அலைகிறீர்கள்? எங்கள் வீட்டுக்கு அருகிலேயே ஒரு பையன் இருக்கிறான். பாடசாலைக்கே போகேல்லை: ஆனால், நல்ல கெட்டிக்காரன்" என்றான் என் சகோதரன். "இப்பவே பார்க்கலாமா?" இது

என் துணைவர். ரவீந்திரன், வாழ்வகத்தின் தலைவர். பசியும் களைப்பும். என்னால் அசையக்கூட முடியவில்லை. அதனால் அவர்கள் இருவரும் அருண்குமாரின் வீட்டை நோக்கிக் புறப்பட்டு விட்டார்கள். அதன் விளைவு, ஒருசில நாட்களில் அருண்குமாரும் வாழ்வகத்தி இணைந்துகொண்டான். அவனையும் இராமநாதன் கல்லூரியில் சேர்க்கவேண்டும். இம்முறை அதிபரிடம் முன்னரே அனுமதி பெற்ற பின்னர் அவனைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லலாம் என்று எண்ணினேன்.

அன்று ஒரு சனிக்கிழமை. கட்டாயக் கல்விக் கூட்டத்துக்காகச் சற்று முன்கூட்டியே பாடசாலைக்குச் சென்றேன். அதிபரும் கூட்டத்துக்குத் தயாராக நின்றுகொண்டிருந்தார். இருவருமாய்ப் பேசியவாறே நடந்துகொண்டிருந்தோம். அங்கு நின்ற மரங்கள், செடிகள் ஒவ்வொன்றையுமே அவர் அர்த்தத்தோடு பார்த்துக்கொண்டு வந்தார். "இந்த இலுப்பை, அந்த மரமுந்திரிகை எல்லாமே நான் நட்டவை" என்றவாறு தான் முன்பு வெறும் காடாய்க் கிடந்த அந்த



வாழ்வக அன்னையால்
கௌரவிக்கப்படும்போது

வழாகத்திலே தான் நாட்டிய மரங்கள் பற்றி, செடிகள் பற்றி, வைத்த பூச்சாடிகள் பற்றிஒவ்வொன்றாய்க் கூறிக்கொண்டுவந்தார். அங்கு நின்ற அத்தனை மரங்களும் செடிகளும் அவரைக் கண்டு மகிழ்ந்து தலையசைப்பது போலிருந்தது எனக்கு. செடிகொடிகள் மீது இயற்கை மீது அவருக்கிருந்த அதீத நாட்டம் என்னை ஒரு கணம் சிலிர்க்கவைத்தது. அவரின் உள்ளத்தில் இயல்பாகவே குடிகொண்டிருக்கின்ற அழகுணர்ச்சிக்கு இயற்கை மீதான இந்த ஈடுபாடுதான்



வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வில்

காரணமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். மாணவர்கள் எப்போதும் அழகாக, நேர்த்தியாகக் காட்சியளிக்கவேண்டுமென எண்ணுகின்ற, எந்த வேலையைச் செய்தாலும் அதில் ஒரு நேர்த்தி, அழகு இருக்கவேண்டுமென எண்ணுகின்ற அவரின் மனப்பாங்கு எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்துக்கொண்டேன்.

எங்கள் பேச்சு மெதுவாக மாணவர் பக்கம் திரும்பவே, நான் அருண்குமார் பற்றிக் கதைக்கத் தொடங்கினேன். "மெடம், இன்னுமொரு பத்து வயதுப் பையன் வாழ்வகத்தில் இணைந்திருக்கின்றார். பார்வை முற்றாகவே இல்லை: பாடசாலைக்கும் இதுவரை செல்லவில்லை. அவரையும் பாடசாலையில் சேர்க்கவேணும்..." என்று நிறுத்தினேன். "அதற்கென்ன, அந்தப் பிள்ளையும் படிக்கவேணுந்தானே" என்றார் அதே மாறாத புன்னகையுடன். இந்த இருவர் மாத்திரமல்ல. இன்னும் பல மாணவர்கள் இராமநாதன் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்கள். சேர்த்தது மாத்திரமன்றி இவர்களுக்குத் தன்னாலான வசதிகளையும் செய்துகொடுத்தார். நன்மனதோடு அவர் மேற்கொண்ட அந்த நற்பணிகள் வீண்போய்விடவில்லை.

பாடசாலையில் சேர்க்கப்பட்டு ஓராண்டின் பின் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அனந்தினி நூற்று ஐந்து

புள்ளிகள் பெற்று அனைவரையும் வியப்பிலாழ்த்தினாள். அருண்குமார் இதற்கும் பல படிகள் மேற்சென்று அடுத்த ஆண்டில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் நூற்று அறுபத்துமூன்று புள்ளிகளுடன் சித்திபெற்று, ஒரு மாபெரும் சாதனையை நிலைநாட்டினான்.



பல்கலைக்கழகத்துக்கு தெரிவான
வாழ்வக மாணவிகளுடன்

விழிப்புலவலுவிழந்த மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும்போது வயது சற்றே அதிகமாக இருப்பது ஒரு பிரச்சினையாக வருவதுண்டு. அப்போதெல்லாம் பரீட்சை ஆணையாளரோடு தொலைபேசி மூலமாகவும் ஏன்? கொழும்புவரை சென்று நேரிலும் தொடர்புகொண்டு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட அனுமதியைப் பெற்றுவந்திருக்கின்றார். இவர் காலத்தில் கல்வி கற்ற விழிப்புலவலுவிழந்த மூன்று மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி தற்போது சிறப்பாக கற்றுக்கொண்டு இருக்கிறார்கள் இதற்கெல்லாம் அவரின் துணிச்சலும் மும்மொழிகளிலும் அவருக்கிருந்த பாண்டித்தியமும் எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளைகள் மீது அவர் கொண்டிருந்த அன்புமே காரணம் எனலாம்.

வாழ்வகப் பிள்ளைகளின் உயர்வில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தது மாத்திரமன்றி அவர் வாழ்வகத்தோடும் நல்லுறவினைப் பேணி வருபவர். சுனாமி அரக்கனின் கோரப் பசிக்கு எமது பிள்ளை நிரஞ்சனா இரையான செய்தி கேட்டு ஓடோடிவந்து துயர் பகிர்ந்தவர்களில் ஆனந்தி அம்மையாரும் ஒருவர். அது மாத்திரமல்ல, எமது வாழ்வக ஸ்தாபகர் அன்னலட்சுமி அம்மையாரைக் காலன் சடுதியாய்க் கவர்ந்துகொண்டபோது திக்கற்றுக் கலங்கி நின்ற எம் கண்ணீர் துடைக்க வந்தவர்களில் இவரும் ஒருவர்.



வாழ்வக அன்னையின் இறுதி
நிகழ்வின் போது

வாழ்வகத்தின் இன்ப துன்ப, நிகழ்வுகள் எதுவானாலும் தவறாது கலந்துகொள்பவர். என்றும் எமது இதயங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அதிபர் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அம்மையார் அவர்களின் அதிபர் பணி நிறைவாகியிருக்கின்றது. ஆனால், அவரின் கல்விப்பணி தொடர்ந்தவண்ணமுள்ளது. அது இன்னும் தொடர, வளர இன்னும் பல்லாண்டு காலம் அவர் வாழ்வு சிறக்க இறையருள் கிட்டுவதாக.

# அழகியல் ஆளுமை மிக்க அதிபர்



**திருமதி ஷர்மிளா ரதிதரன்**
உ. த. மா. ம பொறுப்பாசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

யா/இராமநாதன் கல்லூரி ஒரு பழமையான இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியங்களுடன் சேர் பொன். இராமநாதனின் வழிகாட்டலின் தொடர்ச்சியாக மிளிர்ந்து வருகிறது. இத்தகைய சிறப்பு மிக்க கல்லூரி பண்பாடுகளில் தொடர்ந்து கட்டிக்காத்த பெருமை திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரத்தையும் சாரும்.

இவர் கலையை ரசிப்பவர், அழகை விரும்புவர், அழகியல் உணர்வு மிகுந்தவர் (Aesthetics sence) பாடசாலை விழாக்களின் போது பாடசாலையினை அழகுபடுத்திப் பார்ப்பதில் அவருக்கு அலாதி பிரியம் அத்தோடு நின்று விடாமல் தனது மனதுக்கு பிடிக்குமளவும் நின்று அலங்காரம் செய்த பின்பே அவ்விடத்தை விட்டு அகல்வார். இத்தகைய விழாக்களிலே தரமான கலைநிகழ்வுகளையும் நடாத்துவதற்கு காரணமாக இருந்தவர்.

கலைநிகழ்வுகளைப் பார்வையிட்டு அவற்றில் உள்ள குறைநிறைகளைக் கூறி அந்த நிகழ்வுகள் மிகுந்த தராதரத்துடன் மேடையேற வேண்டும் என்ற கொள்கை உடையவர்.

தன்னை நன்றாக வளப்படுத்தியும் அழகுபடுத்திப் பார்ப்பதிலும் வல்லவர். அது மட்டுமல்லாது தனது தலைமையின் கீழ் உள்ள ஆசிரியர்களும் அவ்வாறே செயற்பட வேண்டும் எனவும் விரும்புவர்.

ஒருமுறை எமது அதிபரின் பிறந்தநாள் விழாக்கொண்டாத்தின் போது எமது ஓய்வுபெற்ற உப அதிபர் திரு க. பாலேந்திரா பின்வருமாறு குறிப்பிட்டார். "இக்கல்லூரியின் எந்த கட்டிடத்தை எடுத்துக்கொண்டாலும் அது ஆனந்தியின் காலத்திலேதான் நிர்மாணிக்கப்பட்டது." என்றார் அந்த வகையில் கல்லூரியின் பல மாற்றங்கள் இவரது காலத்திலேதான் நடந்திருக்கின்றன என்பது தெரிகின்றது.

பாடசாலைக்கு வரும் விருந்தினர்களை இன்முகத்துடன் உபசரிப்பதில் வல்லவர் அத்துடன் அவரது விருந்தோம்பல் பண்பில் ஒரு தனித்துவ இயல்புண்டு. இராமநாதன் கல்லூரியிலேயே கல்விகற்று அங்கேயே ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள பலரிடம் வெளிப்படும் திறமை, பண்பு, கடமை, ஒழுக்கம் என்பன வாயிலாக இக்கல்லூரியின் பெருமையை அதன் பழமையிலும் காண்கிறோம்.

இத்தகைய சிறப்பு மிக்க கல்லூரியில் அதிபராக நீண்ட ஆண்டுகள் அவர் ஆற்றிய பணிகளை பாடசாலை சமூகம், மாணவர்களும், ஆசிரியர்களும் நன்கு அறிவர். அதுவே அவரை காலத்துத்துள் தக்க வைக்கும் சான்றாகவும் அமைகிறது.

***இன்றும் அவரது பதவி உயர்வுக்கு வாழ்த்துக்கள்!***
***இனியும் அவரது நீண்ட இருப்பிற்கு ஆசிகள்!***





விசேட கல்விப் பிரிவுடன்

# அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள்

செல்வி செ.அபிராமி
12, கலைப்பிரிவு

யாழ் மாவட்டத்தில் புகழ் பூத்த பழம் பெரும் சைவத்தமிழ் பாரம்பரியங்களை கொண்ட பெண்கள் பாடசாலையாக யா/இராமநாதன் கல்லூரி திகழ்கிறது. இக் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்ற இவர் 18 ஆண்டுகள் (1992-2010) சிறப்பாக பணியாற்றி உள்ளார். இவர் பெற்றோர்களிடமும், மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் ஏன் சமூகத்துடனும் கூட சிறந்த உறவினைப் பேணும் இயல்பு கொண்டவர். இவர் நல்ல குரல் வளமுள்ள பேச்சாளர். இவர் தமிழ், சிங்களம். ஆங்கிலம் ஆகிய பேச்சாற்றலினால் பாண்டித்தியம் பெற்றவர். இவரது பேச்சாற்றலினால் அனைவரும் கவரப்பட்டனர்.

ஆனந்தி அம்மா சகலரினதும் இன்ப, துன்பங்களிலும் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. சிரித்த முகத்துடனும், அழகிய தோற்றப் பொலிவுடனும் பாடசாலையை வலம் வந்த காட்சி எமக்கு இன்னமும் மனதில் உள்ளது.

இவருடைய காலத்தில் நாம் இங்கு கல்வி பயின்றது எமக்கு புது வரவேற்பையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

மணிவிழாக்காணும் ஆனந்தி அம்மா அவர்கள் தன்னலம் இல்லாத பல நற்பண்புகள் நிறைந்த ஒரு பெண் தலைவர் (அதிபர்) ஆகவும், விளங்குகின்றார். இவரின் அரவணைப்பும், தேசிய மட்ட போட்டிகளுக்கு செல்லும் போது கூடவே சென்று அவரும் மகிழ்வடைவதும் அனைவரினதும் மனதை கவர்ந்துள்ளது.

தற்போது பதவி உயர்வு பெற்று சென்றாலும் 18 ஆண்டுகள் அதிபராக ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றியுள்ளார். இவர் தற்போது கல்வி நிர்வாக சேவையில் தரமுயர்ந்து பதவி வகிக்கின்றார்.

ஆனந்தி அம்மா சிறந்த குணாதிசயங்கள் கொண்ட அதிபர், அவர்கள் கல்விப்புலச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் எமக்கு வழிகாட்டல்களை வழங்க வேண்டும். நீண்டகாலம் நலத்துடனும் வளத்துடனும் வாழ இறைவனை வேண்டுவோம்.

# அது ஒரு அழகிய நிலாக்காலம்

பண்மகள் சமுகம் சார்பில் ஆசிரியர்
**திருமதி கிருஸ்ணவேணி புஸ்பகுமார்**
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரபாடசாலை

அது ஒரு அழகிய நிலாக்காலம்
எங்கள் மனங்களில் அது ஒரு பொற்காலம்
பண்மகள் வளாகமெங்கும்
ஆனந்தங்கள் அசைந்தாடிய காலம் - அது
ஆசானாய் நானும் பணியேற்று
பண்மகளில் நுழைந்த வேளைதனில்
ஆனந்தி எனும் அன்புருவை
அதிபராகக் கண்டேன்

பண்மகளை மட்டுமல்ல
பணியாற்றிய ஆசான்களையும் - தன்
அன்பால் பண்பால் அறிவால்
அரவணைத்த வெற்றித்திருமகள்
நிர்வாகத் திறனால் - எம்
பண்மகளுக்கென்றொரு
நிமிர்வைக் கொடுத்து நித்தமுமெம்
நெஞ்சங்களில் நிரந்தரமானவர்.

நித்திய கல்யாணி எங்கள் அதிபர் ஆனந்தி
அதற்கு அர்த்தங்கள் ஆயிரம், ஆயிரம்
நித்தமும் எங்கள் கல்யாணி மலர் சூடி
நிமிர் நடை போட்டு
வலம் வரும் போதெல்லாம்
பூ மட்டுமல்ல அவர் பொலிவும்
கல்லூரிக்கு என்றென்றும்
கல்யாணக் களை கொடுக்கும்.
அவ்வேளை தனில் போர்மேகங்கள் சூழ
அந்தோ எங்கள் பாடசாலை
வட்டு இந்துக் கல்லூரியில், காலடி எடுத்து வைத்து

வாடியே நின்றது எம் கல்லூரி
நிர்க்கதியான வேளை எங்களதிபர்
சொல்லொணாத் துன்பத்தில் துவண்டார்.
துயரங்களின் மத்தியில் பாடசாலை இயங்கிற்று.
அவ்வேளை தனில் வந்ததுவோ இடமாற்றம்
அணைத்துக் கொண்டது இராமநாதன் கல்லூரி

கொஞ்சிடும் சலங்கை ஒலிகளாலும்
காற்றினில் அசைந்து வரும் கீதங்களாலும்
கலைகள் நிறைந்த சூழலையும் இணைபாட விதானத்தையும்,
விஞ்ஞானத்தையும்
கல்லூரியில் கட்டியெழுப்பி ஒரே குடும்பமென
பாடசாலை முதல்வராய்த், தாயாய்
கொத்தணித் தலைவராய் நின்ற பெருமகளின்
இந்தப் பெருமைகளைக் கூற வார்த்தைகள் போதாது
பண்மகளுக்கென்றொரு முத்திரை பதித்த
அதிபர் ஆனந்தியை ஆனந்தமாய்
என்றென்றும் பண்மகள் பராட்டி வாழ்த்துகின்றாள்.

# மணிவிழாக் காணும் மணிமான்

**திருமதி தாமரைச்செல்வி கீதாக்கிருஷ்ணன்**
விசேடகல்வி ஆசிரியை, மாணவர்கள்
யா/இராமநாதன் கல்லூரி.

அளவையம் பதியினிலே அவதரித்த அன்னையம்மா - நல்
ஆசானாய் அதிபரான ஆனந்தி அன்னையம்மா
ஆறுபதாம் அகவையிலே அகம் மகிழும் நாயகியே - இன்னும்
ஆண்டு பல நலமுடனே அவனிதனில் வாழியவே.
அங்கமதில் குறைவோடும் அகமதனில் நிறைவோடும் - எம்
அலகதினில் பயின்று வரும் அனைவருக்கும் தாய் அம்மா
அன்புடனே அணைத்து எமக்கு ஆறுதல்கள் அளித்திடுவாய் - இந்த
அவனியதை வியக்கவைத்த அன்னையென ஒளிர்ந்திடுவாய்.

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால்
மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

-சுவாமி விவேகானந்தர்-

# தாயை வகுப்பறையில் பார்த்தேன்

செல்வி சி. உமையாழினி
12 கலைப்பிரிவு

நான் என் அன்னையை பார்த்தேன்
எனது தாயை வகுப்பறையில் பார்த்தேன்
எனது தெய்வத்தை பாடசாலையில் பார்த்தேன்
எமது அதிபர் தெய்வமாக இருந்தார்

எல்லா பிள்ளைகளையும் அரவணைத்தார்
பாசத்தையும் ஊட்டி வளர்த்தார்
அறிவையும் ஊட்டி வளர்த்தார்
எல்லோருடனும் பாசமாக இருந்தார் அதிபர்

மாணவர்கள் ஆகிய நாம் மட்டும் போற்றவில்லை
பாடசாலை ஆசிரியர்கள் ஊழியர்கள்
பெற்றோர்கள் வெளிநபர்கள் எல்லோரும்
போற்றுகின்றவராக இருந்தவர் எங்கள் அதிபர்

எமது பாடசாலையை விட்டு நீங்கினாலும் - அம்மாவின்
புகழும் செயலும் பணியும் தொடர்ந்து உள்ளது
எங்கள் அதிபரின் பேச்சிலே கவரப்படுபவர்
இனிமையாகவும் பண்பாகவும் இருப்பார்கள.

எம் அதிபரின் வார்த்தைக்கு கட்டுப்பட்டோம்
அதிபரின் ஆசைப்படி நற்பிள்ளைகளாக வாழ்ந்து
இராமநாதன் கல்லூரிக்கும் எமது அதிபருக்கும்
பெருமையைத் தேடிக் கொடுப்போம்.

# நாம் பார்க்கும் பூமி

**செல்வி. சி. சிவாஜினி.**
13, கலைப்பிரிவு

ஆயிரம் கனவுகள் கண்களில்
ஆற்றிடக் கடவுள் மனதினில்
ஓடிடும் சொந்தங்கள் மனதினில் – ஆனால்
மனப்பயம் மட்டும் விழிகளில்

ஏனோ கலங்குகிறாய்?
எதையோ தேடுகிறாய்?
சாவு நமக்கொன்றும் புதிதில்லையே
உயிருக்குப் பெறுமதி இங்கில்லையே


ஒவ்வொரு விடியலும் சாபமோ?
எமது கனவுகள் கலைந்திடுமோ?
சாதிக்கப் பிறந்தவர்கள் நாதில்லையோ?
தோல்விகள் எங்கள் தலைவிதியோ?
தமிழராய்ப் பிறப்பது சாபமோ?
நரகம் என்பது ஈழ தேசமோ?
அன்பும் பரிவும் எமக்கில்லையோ?
அடக்குமுறைதான் நியாயமோ?










அதிபர் காலத்தில் இடம்பெற்ற ஆசிரியர் தினங்களில் சில

# வணங்கி நிற்கின்றேன்

செல்வி க. பிரவீணா
12, கலைப்பிரிவு

வையகத்துள் மனிதனை மனிதனாக
வாழ வைப்பது கல்வி
கல்வியைப் புகட்டுவது ஆசான்
இவ் ஆசான்களை வழி நடத்துபவர் அதிபர்
கல்லூரி சிறந்த முறையில் இயங்குவதற்கு
தலைமைத்துவப் பதவி வகிக்கும்
எமது அதிபர் எமது அன்னைக்குச் சமன்

பதினெட்டு வருடங்களாய் எமது
பல வெற்றிகளைக் குவித்தது
தலை நிமிர்ந்த கல்லூரியாக
கல்லூரியைத் தலை சிறக்க வைத்த
உங்களது ஆளுமைக்கு நான் தலை
தலை வணங்குகிறோம்

பெண்ணிற்கு இலக்கணமாக நின்று
அவனியில் வீறு நடை போட்டு
அகிலம் பாராட்டும் உன்னத
நாயகியாகத் திகழும் - நீங்கள்
இன்று போல் என்றும் நலமுடன் வாழ்ந்து
இன்னும் பல சேவைகளாற்றி
புதுப் பொலிவுடன் திகழ
எமது பாடசாலைச் சமூகத்தில்
ஒரு மாணவியாக உங்களது மகளாக
இருந்து வாழ்த்த வயதின்றி
வணங்கி நிற்கின்றேன்.

# பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றேன்

செல்வி பிரியதர்சினி
12 கலைப்பிரிவு

அதிபரே அம்மா
உங்களது சேவையைப் பாராட்டி
மாணவி எழுதும் கவிதை

நினைவில் உங்களைப் பாராட்டியபடி
என் மனக் கோயிலில் உங்களைத்
தெய்வமாக நினைத்தபடி

தாயின் மடியில் சில நாட்கள்
எங்கள் கல்வியோடு பல வருடங்கள்
துணையாக நின்று பாடு பட்டீரே!

உங்களின் ஒவ்வொரு துடிப்பும் எங்களது கல்வியில்
இன்னும் தேடிக் கொண்டே இருக்கின்றேன்
நீங்கள் வருவீர்கள் என்று

உங்களது பெயரை உச்சரிக்கும் போது
எனது மனம் மகிழ்கிறது
என்றும் இளமையுடன் சுகத்துடன்
பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

# அம்மா உங்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்...

**செல்வி சி. சுகன்ஜா**
12, கலைப்பிரிவு

அன்பான ஆசானே
கையெடுத்து வணங்குகிறேன்
நன்றியுடன் நினைத்துப்பார்க்கின்றேன்

நாம் வாழ நாம் முன்னேற
எமக்காக உழைத்தீர்கள்
நாம் இன்று இன்பம் காண - நீங்கள்
அன்று துன்பம் பொறுத்தீர்கள்

என் இளம் வயதில் கண்ட
நடமாடும் தெய்வம் நீங்கள்
என் குரு ஆனந்தியம்மா
எங்கள் அதிபர் ஆனந்தியம்மா

நாங்கள் செய்த தவறுக்கு
தண்டனை தந்து விட்டு
வேண்டிய வேதனையை
அனுபவித்தது நீங்கள் அன்றோ?

எத்தனை அன்பு, அரவணைப்பு?
எத்தனை அறிவுரை, ஆலோசனை?
எல்லாம் எதற்கு?
எங்கள் வாழ்வு வளம்பெறத்தானே!

உங்கள் குடும்பத்தை விட
எங்கள் நலனில்தானே
உங்களுக்கு அக்கறை அம்மா!
எமக்காக விடுதியில் இருந்த நாட்களை

நினைத்துப்பார்க்கிறோம்.
இன்று வரையிலும், இனிமேலும்
கல்வியிலும் சரி, விளையாட்டிலும் சரி
நாங்கள் காணும் வெற்றிக்கும்
நாங்கள் அடையும் புகழ்களுக்கும்
உரியவர் நீங்கள் தானே!

நாங்கள் பரீட்சை எழுத
நீங்கள் அல்லவா படித்தீர்கள்
நாங்கள் வெற்றிபெற
நீங்கள் அல்லவா உழைத்தீர்கள்

கல்லும் உடையாமல்
சிலையும் சிதறாமல்
எங்களை செதுக்கிய
சிற்பி அல்லவா நீங்கள்

மழையின் அருமை தெரியாமல்
மழையை கண்டு ஓடுபவர்போல்
உங்களை கண்டு ஓடினோம்
மழையின் அருமை கோடையில் தெரியும்
உங்களின் அருமை பெருமை இப்போது தெரிகிறது

உங்கள் சேவைக்கு நன்றி
நீங்கள் தந்த கல்விக்கு நன்றி
நன்றி சொல்வது போதாது
என் ஆயுள் முழுவதும் நன்றி நன்றி.

# எமது அதிபர்

செல்வி இ. சர்மிளா
12, கலைப்பிரிவு

எமது அதிபர்
பள்ளியின் காலந்தனை
பக்குவமாய் வழிநடத்த
பண்புடனே பாரினில்
தேவையாய் வந்தவர்
எம் பண்பான அதிபர்
பச்சிளம் பாலகர்கள்
அன்பினில் திழைத்திட
ஆதரவாய் அரவணைத்து
அன்பு வழிகாட்டுபவர்
எமது அரிய அதிபர்

தோல்வியைக் கண்டு துவளாமல்
தோல்வியே வெற்றியின் அத்திவாரம்
எனும் கருத்தை மனதினால்
பக்குவமாய் எடுத்துரைத்தவர்
எம் உயர்ந்த அதிபர்

என்றும் ஆனந்தமே இனிய வாழ்வின் இரகசியம்
என்பதைப் புரிய ஆனந்தி எனும் பெயரைச்
சூட்டியவர் தாம் எம்மை விட்டு விலகினாலும்
தம் பணியை தொடர் வழியாகக் காட்டி
மறவாத நினைவுகளை விட்டுச் சென்றவர்
என்றும் பொக்கிஷமாம் எம் அதிபர்

# இறைவனை வேண்டுகிறேன்

செல்வி ச. சோபனா
12, கலைப்பிரிவு

அன்புள்ள அருமை அம்மாவே
நீங்கள் அன்று கூறிய வார்த்தைகள்
இன்றும் என்மனதில் அலை மோதுகின்றன
என் கல்வியைத் தொடர உந்து சக்திகளவை
நீங்கள் செல்கிறேன் என்ற போது - அது
என் மனதில் ஆறாத வலிகள்
ஆனால் அன்று ஒரு நாள்
நீங்கள் வந்து சென்றபோது - என்
மனதில் நீங்கின அவ் வலிகள்
நீங்கள் எங்கு சென்றாலும்
பல வெற்றிகளை பெற்று
வளமோடு வாழ இறைவனை வேண்டுகிறேன்.

## அன்பு மழையில்...

செல்வி இ. நிரோஜா
செல்வி ர. கபிலமி
செல்வி ஸ்ரீ. ஜெஸ்மி
தரம் 11

நாம் போட்ட மாக்கோலம்
அழிந்து விடக் கூடாது - என்பதற்காய்
ஓர் அழகான மழைநாளில்
குடை பிடித்து நின்றீர்கள்

நீங்கள் எம்முள்ளே இருந்து கொண்டே
எம் அன்பு மழையில் நனைந்தீர்கள்
எம் அன்பு மழையில் நனைந்தபடி
எம் பள்ளி வாயிலில்
குடை பிடித்து நின்றீர்கள் - எம் கல்விக்காக

என்றும் எம் மனதில் பூரணநிலவாய்
விளங்கியது உங்கள் முகம்
இப்போது உங்கள் பிரிவால்
இருட்டாகியது எங்கள் மனம்

# Making the Most of Retirement

Dave Erhard

Goodbye to work, you are on a high — you don't have to ask why!

You now gladly say adieu to your working life — goodbye to toil and strife.

Tomorrow, when morning comes at noon, you will lie in bed and look up at the ceiling.

There will be no one there to give you orders or more work — what a great feeling.

As the noon sun shines through your window, you will hear a dog bark and the noise of someone's feet.

It's the letter carrier, poor working soul, delivering your mail, you can hear him in the street.

Within you will come a warming glow — your new life will have just begun.

This is the day that you have looked forward to — knowing that all your work has been done.

Shortly, you will arise, get dressed, relax — there's still time left in the day for much merry-making.

You will make the most of it — knowing that most of your friends are at work stressed and mentally aching.

Will there be any reason to feel any stress or guilt at this time of your life?

Only when you forget to wake up early and make breakfast for your poor working wife.



நடராஜர் ஆலய வழிபாட்டில்



சமாதி ஆலய வழிபாட்டினல்



ஆசிரியர்களுடன்



விளையாட்டு விழாவில்




Light house opening ceremony



With P.T. squad



Basket ball court opening ceremony



With prefects

# கொடிக்கீதம்

இராகம்: காம்போதி　　　　　　　　**தாளம்: ஆதி**

மருதனார் மடத்தில் இராமநாதன் தந்த மகளிர் கல்லூரி
இதில் பெரிதும் சைவமும் தமிழும் வளர்க்கும் முதற்பெண்கள் கல்லூரி
மகுடமாகத்திரி கரணசுத்தியும் காரியசித்தியுமே - அதை
உறுதியாய்க் கொண்டு உழைக்கும் இராமநாதன் கல்லூரி வாழ்கவே

வன்னி அரச பரம்பரை தனில் தோன்றிய சேர்பொன் இராமநாதன்
வாழ்வினில் சைவமும் தமிழும் வளர்த்த பெருவள்ளல் சிவபக்தன்
தேசப் பற்றாளரைக் காரிய வீரராய் கண்ணியம் காத்தவராய்
எங்கள் கல்லூரி மண்ணிலே உறங்கும் இராமநாதன்
கழல் போற்றி ஏற்றுவோம்

(மருதனார்...)

பத்தொன்பதாம் நூற்றுப் பதின்மூன்றாண்டில் செல்லப்பா சுவாமி வித்திடவே
பத்திரமாகவே கல்வியுடன் பண்பும் விளையாட்டுடன் வினைத்திறன் அனைத்தும்
நர்த்தனம் வீரத்தில் நாடுபுகழ்ந்திடும் நயந்து போதிக்கும் கல்லூரி
முத்திரை பதிக்கும் அன்னையின் பாதம் போற்றியே கொடி ஏற்றிடுவோம்

(மருதனார்...)

வெற்றிகள்மேல் வெற்றி தந்தமை நோக்கிடும்
அன்னைகல்லூரி வாழியவே அதிபரோடு நல்லாசிரியர்களும்
மாணவிகளும் நன்கு வாழியவே
பச்சை மஞ்சளாய்க் கொடியை ஏற்றி அன்னையின் பாதம் பணிந்திடுவோம்
மெச்சிடும் வகையில் உச்சமாய்ப் பணிபுரி அன்னை கல்லூரி வாழியவே.

(மருதனார்...)

ஆக்கம்
**பொன். ஸ்ரீ. வாமதேவன்**
இசை ஆசிரியர்.



# இராமநாதேஸ்வரர் திருவூஞ்சல்

(புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் பூர்த்திதின வெளியீடு,
பழைய மாணவர் சங்கம் - 18.07.2003)

## யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.

காப்பு

ஏரார்ந்த பொழில் விளங்கு எழில் சூழ்ந்த
மருதனார்மடத்தில் மேவியுயர்
பாரார்ந்த புகழ்படைத்த இராமநாதன்
கல்லூரி வழாகத்தின் முன்றலிலே
சீரார்ந்த சிறப்புடனே வீற்றிருக்கும்
இராமநாத ஈஸ்வரர்மேல் ஊஞ்சல்பாட
காரார்ந்த கருணை மழைபொழியும்
கணபதியாம் பரராசசேகரனே காப்பு.

1.

பக்தியுடன் பரவும் அடியவர்தம்
அகலாத அன்பதுவே வடங்களாக
முக்திபெற வழிகாட்டும் ஞானிகளின்
உள்ளமே உகந்த பீடமாக
கொத்துமலர்க் கோதை பார்வதியும்
இடமாய் இனிதமர்ந்த கோவே
நித்த மருள் பொலி மருதனார் மடமுறையும்
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்.

2.

நந்தியொடு நாரதரும் இசைகள் பாட
நாரணனும் நான்முகனும் வடந்தொட்டாட்ட
முந்திவந்த பூதகணம் பொலிந்துஆட
பூமகளும் நாமகளும் வாழ்த்துக்கூற
கந்தமலர்தூவிப் பணிப்பெண்கள் வந்து
வழிபாடுசெய்து நின்று, நடனமாட
எந்தை இராம நாதஈஸ்வரரே இறைவியொடு
இங்கிதமாய் இனிதமர்ந்து ஆடீரூஞ்சல்.

3.

வேதவொலி மந்திரங்கள் பூசனைகளேற்று
பாடுமடியவரின் பண்ணிசையுங் கேட்டு
தீதகற்றும் திருவிழாப் பொலிவுங்கண்டு
உளமகிழும் இராமநாத ஈஸ்வரரே
போதுமலர்க் கரங்கள் கூப்பி வழிபாடாற்றும்
அடியவர்தம் அகத்திருளை அகற்றியென்றும்
ஆதியயன் மாலொடு அகில மெல்லாம்வாழ
அருள்பொழிந்து நின்று ஆடீரூஞ்சல்.

4.

பொன்கொன்றை தாதுசிந்திப் பொலிந்திலங்கப்
பொருந்திய நற்பூமரங்கள் அலங்கரிக்க
தேன்சிந்தும் கனிகள்தரும் மாமரங்கள்
பலாமரமும் வாழையொடு வில்வமேவி
வான்சிந்தும் மாமழையால் பொலிந்திலங்கும்
வாழிடங்கள் வனப்புமிக்க மரநிழற்கீழ்
மன்னும் மருதனார் மடமுறையும் மாமணியே!
இராமநாத ஈஸ்வரரே! ஆடீரூஞ்சல்.

5.

செந்தமிழும் செழுங்கலையும் ஓங்குபதி
மருதனார் மடமுறையும் தேவதேவே!
பைந்தமிழில் பண்ணிசைத்துப் பாடலோடு
ஆடல்கண்டு மகிழப்பெரும் பார்புகழும்
இராமநாதன் கல்லூரிவழாகந் தன்னில்
நுண்கலைப் பீடந்தனை நன்கமைத்தீர்
சீர்பரவும் சிறப்புடையோய் இராமநாத
ஈஸ்வரரே! அருள்சிறக்க ஆடீரூஞ்சல்.

6.

கருதரிய சிற்சபையில் நர்த்தமிடும்
கருணாகரக் கடவுளே! கருணைக்கடலே!
அரிபிரமாதி யார்க்கும் காண்டற்கரிய
சிவனே! கற்பகமே! இராமநாதேஸ்வரா!
திரிபுரமெரித்தாயன்று தீயவர்க்கு அருளும்
செய்தாய் முக்கண்ணா! முனிவரேறே!
வருமிடர் களையவென்று கல்லூரியமர்ந்த
எங்கள் இராமநாதேஸ்வரரே! ஆடீரூஞ்சல்.

7.

ஏழுலகும்வாழ ஆகமங்கள்வாழ மறைவாழ
சைவநெறி தானும் வாழச்
சூழுலகில் அரசரோடு அறவோர்வாழ
அந்தணரும் ஆனினமும் மகிழ்ந்துவாழ
நீழுலகம் நீதியுடன்நின்று நீடுவாழ
பூவையர்தம் கற்புநெறி பொலிந்துவாழ
வாழும் மருதனார்மடம் உறையும் செல்வ
இராமநாத ஈஸ்வரரே! ஆடீரூஞ்சல்.

8.

கங்கையும் மதியுமாடக் காதிலணி
கண்டிகையும் செஞ்சடையும் மானுமாட
அங்கையினில் ஏந்துமனலுமாட அணிசெய்
உடுக்குடனே படம்விரித்து அரவுமாட
நங்கையவள் பார்வதியும் நயந்துஆட
பல்லப்ப வைரவரும் முன்னின்றாட
பொங்கரவம் அசைந்தாடும் இராமநாத
ஈஸ்வரரே! ஆரள்பொலிய ஆடீரூஞ்சல்.

9.

இந்திரனும் சந்திரனும் இமையவரும்
போற்றநாளும் நயந்து ஆடீரூஞ்சல்.
தொந்திக் கணபதியும் குமரேசனோடு
சேர்ந்து மகிழ்ந்திடவே அடீரூஞ்சல்
தக்கனுக்குத் தக்கபடி தலையைக்கொய்து
தண்டனைகள் தந்தவரே! ஆடீரூஞ்சல்
திக்கற்றவர் புகலிடமே! ஆடீரூஞ்சல்
திருமேவும் பெருமானே ஆடீரூஞ்சல்.

10.

முத்துமணித் தாமமாட ஆடீரூஞ்சல்
முழுவைரத் தோடாட ஆடீரூஞ்சல்
உத்தரியப் பட்டாட ஆடீரூஞ்சல்
உத்தமி பார்வதியுடனே ஆடீரூஞ்சல்
சித்தம் களிகூர ஆடீரூஞ்சல்
பத்தர்கட்கு அருள்செய்ய ஆடீரூஞ்சல்
எத்திக்கும் புகழ்மணக்க ஆடீரூஞ்சல்
எந்தை இராமநாதேஸ்வரரே! ஆடீரூஞ்சல்.

### வாழி

திருவிழிகள் ஓர் மூன்றும் வாழி வாழி!
திங்களுஞ் செஞ்சடையும் வாழி! வாழி!
திருப்புயங்கள் இரண்டும் வாழி வாழி!
செழுங்கருணைத் திருவருளும் வாழி! வாழி!
திருமுறைகள் பன்னிரண்டும் வாழி வாழி!
திரு மறைகள் ஒரு நான்கும் வாழி! வாழி!
திரு விளங்கும் கல்லூரி வாழி! வாழி!
கல்விகற்கும் மாணவரும் வாழி! வாழி!

### ஜெயமங்களம்

பார்வதி சமேதருக்கு ஜெயமங்களம்
பல்லுயிரும் காப்பவர்க்கு ஜெயமங்களம்
ஊரும் பேரும் அற்றவர்க்கு ஜெயமங்களம்
மருதனார் மடத்துறைபவர்க்கு ஜெயமங்களம்
ஆண்டி வெடம் பூண்டவர்க்கு ஜெயமங்களம்
அம்பலத்தில் ஆடுவார்க்கு ஜெயமங்களம்
வேண்டும் வரம் தருவோர்க்கு ஜெயமங்களம்
வெள்ளை ஊர்தி வாகனர்க்கு ஜெயமங்களம்

### எச்சரிக்கை

பஞ்ச பூதமானவா பழவினை தீர்ப்பவா
வேதாகமமானவா எச்சரீக்கை
வஞ்சகப் பேய்களை வேரோழிப்பவா
மருதனார்மடத்துறைபவா - எச்சரிக்கை
ஆண்டி, அரசன், வேடன், புலவனாய்
புலையனாய் குருவாய் வந்தவா எச்சரிக்கை
வேண்டியய வரங்கள் தந்து சைவநெறி காப்பவா
பார்வதியின் மணவாளா (பரமனே) எச்சரிக்கை

### பராக்கு

கல்லூரி வழாகத்தில் அமைந்தவரே பராக்கு
நல்லபதி மருதனார்மடப் புண்ணியனே பராக்கு
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் மேலானவனே பராக்கு
கண்ணை இமைகாப்பது போல் காப்பவனே பராக்கு

**லாலி**

தேவ லாலி சிவயோக லாலி-அவனி
துயர் துடைக்கும் தூய லாலி
போக லாலலி பரஞ்சுடரே லாலி-சிவ
கங்கை சுமந்த பெருமானே லாலி
சூல லாலி சுடர்கொடியே லாலி-போர்
அரக்கர் குலமழித்த கோவே லாலி
மூல லாலி மூவா முதலே லாலி-என்றும்
எம்மிடர் களைவாய் தாயே லாலி.

சுபம்

**ஆக்கம் : திருமதி. பண்டிதை வை. கணேசபிள்ளை.**
**வெளியிட்டவர் : திருமதி. கனகேஸ்வரன் சரஸ்வதி**
**(பழைய மாணவி) 18.07.2003**



# நன்றி நவில்கின்றோம்

நன்றியுடையவர்களாயிருத்தல் தமிழர் சால்பு. இதனை வள்ளுவர் நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் என்பர். இக் கொள்கையை உடைய நாம் நன்றி கூறும் கடப்பாடு உடையோம் எமது மணிவிழா மலர் சிறப்புறச் சலக வழிகளிலும் ஒத்துழைத்த நல்ல உள்ளங்களைப் பாராட்டுவதோடு நன்றி கூறுகின்றோம்.

ஆசிச்செய்தி வழங்கிய ஆஞ்சநேயர் ஆலய பிரதமகுரு, கௌரவ வடமாகாண ஆளுநர் உயர் திரு. ஜி.ஏ சந்திரசிறி ஐயா அவர்கள், மதிப்புக்குரிய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உயர் திரு இ.இளங்கோவன் அவர்கள், மதிப்பிற்குரிய டி.எம். சுவாமிநாதன் (பா.உ) அவர்கள் ஆகியோருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

ஏனைய ஆசியுரைகள் வழங்கிய கலாநிதி ஆறுதிருமுருகன், எமது கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம், மேலும் சிறப்பு வாழ்த்துச் செய்திகள் தந்துதவிய முன்னைநாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள், பீடாதிபதி திரு. எஸ். கே. யோகநாதன் அவகள், வடமாகாணக்கல்விப்பாணிப்பாளர் உயர் திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கள், வலிகாமம் வலயக்கல்விப் பாணிப்பாளர் திரு.ஆ.இராஜேந்திரன் அவர்கள், இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள், பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீசன் அவர்கள், மற்றும் பிரதி அதிபர் திருமதி நந்தினி சிவராஜன் அவர்கள், கலாபூசணம் செல்லப்பா நடராஜா அவர்கள், வாழ்வகத்தலைவர் மதிப்புக்குரிய திரு. ஆ.ரவீந்திரன் அவர்கள், பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி.வி.ஜெயராசா அவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி சறோஜா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் மணிவிழாமலர் வளம்பெற ஆய்க்கட்டுரைகள் தந்துதவிய கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள், பேராசியர் உயர் திரு. க.தேவராசா அவர்கள், பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்களுக்கும் என்றென்றும் நன்றி கூறக் கடப்பாடுடையோம்.

தொடர்ந்து அதிபர் பணிகளை வெளிப்படுத்தும் வகையில் கட்டுரையாகவும் கவிதையாகவும் ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்கள், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர், கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இம்மலர் மலர்ந்து மணம்வீச ஒத்தாசை புரிந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

மலர் வெளியீட்டுக்கு மனமுவந்து நிதியுதவி புரிந்த நல்ல உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக

தேவைப்படுமிடத்து சரியான ஆலோசனைகள் வழங்கிய எமது கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் அவர்களுக்கு நன்றிகள் கூறுகின்றோம்.

இம்மலர் ஆக்கத்திற்கு மனம், வாக்கு, காயத்தினால் அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்த திருமதி.மோ.ரவீந்திரன் ஆசிரியருக்கும் மனப்பூர்வமான நன்றிகள் உடையோம்.

இம்மலரைத் அட்டைப்படத்துடன் அழகுற அமைத்து தந்த குடாநாட்டுப் பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை அறியத்தருகின்றோம்.

**- மலர்க்குழுவினர். -**





